Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
ஜனவரி 08 – 14, 2015

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1100

## சாதனையாளரா – சதிகாரரா!



## மக்களின் தீர்ப்பு





## மாவையின் அகிம்சைப் போர் வெடிக்குமா?



## உலகத் துயரமாகும் பட்டினிச் சாவு

## ஆஞ்சநேயர் வழிபாடு

ஆஞ்சநேயருக்கு வெண்ணெய் சாத்தி வழிபாடு செய்வது சிறப்பு வாய்ந்ததாகும். வெண்ணெய் எப்படி உருகுகிறதோ, அதைப்போல இராமநாம ஜெபத்தால் அவர் உள்ளம் உருகுகிறார். அனுமானின் வாலில் நவக்கிரகங்கள் ஐக்கியமாகி உள்ளன.

அதனால் நவக்கிரகங்களால் பாதிக்கப்பட்டவர்கள், இந்த ஆஞ்சநேயரை வழிபட்டால் பலன் கிடைக்கும். மாதந்தோறும் மூலநட்சத்திரத்திலும், அமாவாசை திதியிலும் வழிபட்டு பலன் பெறலாம்.

வெற்றிலை மாலை, துளசி மாலை, வடை மாலை, எலுமிச்சைப்பழ மாலை போன்றவற்றை அணிவித்து, அனுமனை வழிபட்டுவந்தால், துன்பங்கள் அனைத்தும் பனிபோல் விலகிவிடும்.

## ஆன்மீகம் — நன்றி கூறுவோம்!

முடிவடைந்த ஆண்டைக் கொஞ்சம் திரும்பிப் பார்த்து அதன் நன்மைகளுக்காக, ஆசீர்வாதங்களுக்காக, வெற்றிகளுக்காக நன்றி கூறும் நாள். இந்த நாளில் ஆண்டுமுழுவதும் நம்மை அரவணைத்த அன்பு இறைவனைப் போற்றுவோம். இந்த ஆண்டில் நாம் அடைந்த வளர்ச்சிகளுக்காக நன்றி கூறுவோம்.

இந்த ஆண்டின் தவறுகள், தோல்விகள், நோய்கள், இன்னல்களையும் நினைத்துப் பார்ப்போம். அவற்றிலிருந்து சில பாடங்களைக் கற்றுக் கொள்வது நல்லது. எந்தத் தோல்வியிலிருந்தும், தவறிலிருந்தும் நாம் நன்மைகளை அடையலாம். முதலில், தவறுகளை, தோல்விகளை ஏற்றுக்கொள்வோம். தோல்வி என்பது யாருக்கும் நேர்வதுதான். அதில் தவறில்லை.

தோல்வியிலேயே துவண்டுவிடுவதுதான் தவறு. அடுத்து, அந்தத் தோல்விகள், தவறுகள் ஏன் நிகழ்ந்தன என எண்ணிப்பார்ப்பதும், ஆய்வு செய்வதும் நன்று. இவையும் நமக்கு உதவும். மூன்றாவதாக, இனி இத்தகைய தோல்விகள், தவறுகள் நேராதபடி கவனமாயிருக்க உறுதி பூணுவோம். இந்த ஆண்டின் இறுதி நாளை மகிழ்ச்சியுடன் கழிப்போம்.

## பெற்றோர் கவனத்திற்கு!

பெற்றோர் தமது பிள்ளைகள் மாறு செய்யும் நேரங்களில் கோபப்பட்டு அவர்கள்மீது தீய பிரார்த்தனை வார்த்தைகளை கூறிவிடாது நிதானத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

நபியவர்கள் நவின்றதாக இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்கள்: உங்களது பிள்ளைகள்மீது தீய பிரார்த்தனை செய்யாதீர்கள். (ஒருவேளை) அது ஒப்புக் கொள்ளப்படுவதற்கு நேர்ப்பட்டுவிடக்கூடும்.

(அல்ஹூமுன் நிஸா)

பிள்ளைகளிடம் பொய் கூறுதல், அவர்களை ஏமாற்றுதல் போன்றவை கூடாது. அவை பாவமான காரியமாக இருப்பது மட்டுமன்றி, பிள்ளைகளின் வழக்கத்தில் அவை பதிந்துவிடவும் வாய்ப்புள்ளவைகளாக உள்ளன. மேலும் பெற்றோர் தனிமையில் பேசும் விஷயங்களை பிள்ளைகள் முன்னிலையில் பேசலாகாது.

பெற்றோர் தாங்கள் ஈன்றெடுத்த குழந்தைச் செல்வங்கள் அனைவருக்குமிடையே சமத்துவத்தையும் நீதத்தையும் பேணிவரவேண்டும். அவர்களிடையே வேற்றுமை காட்டக் கூடாது.

**முஹம்மது ஹஸனி, கல்முனை -07**

## கவிதைப்போட்டி 1097




● பாராட்டுக்குரியது ●

### கொட்டிவிட்ட துன்பங்கள்

கொட்டும் பனியும் இல்லை
இங்கு சுட்டெரிக்கும்
வெயிலும் இல்லை - துணிக்
கொட்டுக்குள்ளே
பிஞ்சு நெஞ்சுக்குள்ளே
கொட்டிவிட்ட துன்பங்களை -எல்லாம்
பட்டுப்போன்ற மென் மனதால்
விட்டுப்போட்ட சிறுவர்களோ
சொட்டுத் துளியும் இல்லை
கவலைகள் - என வட்டமிட்டு
முகம்பார்த்து - தேன்
சிட்டுப் போல் சிரிக்கின்றார்கள்
இன்பத்திலே.

*யோகன், புத்தளம்.*

## கவிதைப் போட்டி இல 1100



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 19.01.2015

கவிதைப் போட்டி இல. 1100 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### சிநேகிதச் சிறை

சிந்தனையிலே கவலைகள்
சிறிதேனும் இல்லாத - இந்த
சின்னஞ்சிறுசுகள் - சீலைகொண்டு
சிறுவீடு கட்டி - அந்தச்
சினேகிதச் சிறைக்குள்ளே
சிங்காரமாய் அமர்ந்தே
சிறுநகை புரிந்து - நட்பை
சிறப்பிக்கின்றார்கள் இங்கே.

இளம்பிறை

### கொ(தி)ண்டாட்டம்

வெள்ளம், மண்சரிவு
என்பவற்றால் ஏற்படும்
அகதி முகாம்கள்
பெரியவர்களுக்குத்தான்
பெருந் திண்டாட்டம்
கூடாரம் போட்டு தினம்
விளையாடும் சிறுவர்கள்
எமக்கோ - இவைகள்தான்
பெருங்கொண்டாட்டம்.

அ.சந்தியாகோ,
கண்டி

### வாழ்க்கையின் வடிவங்கள்...

போர்த்திக்கொள்ளும்
போர்வையினால்
வீடமைத்து விளையாடும்
குழந்தைகள் முகத்திரையில்
குதூகலங்கள் எத்தனையோ!
அகதி முகாம் வாழ்க்கையதன்
வடிவங்கள் வெளிப்படுதோ...
இப்போது...?

ஏ.எம்.கமால், புத்தளம்.

### ஒற்றுமை

இந்த ஒரு போர்வைக்காக
அன்புச் சகோதரர்கள் நாம்
ஒருவருக்கொருவர்
அடித்துக்கொள்ளவில்லை.
அதற்குள் நாம் மூவரும்
ஒன்றாய்ச் சேர்ந்திருந்தே
ஆனந்தக் குளியல் செய்கிறோம்.

சுப்பிரமணியம், ஜெயரூபன்.
பருத்தித்துறை.

## உங்கள் பக்கம்

### திருவையாறு வீதிகள் புனரமைக்க வேண்டும்

கிளிநொச்சி, திருவையாறில் உள்ள உள்வீதிகள் இதுவரை புனரமைக்கப்படாது இருக்கின்றது. வன்னி யுத்தம் முடிவடைந்து அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வரும்வேளையில் வீதிகள் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மக்கள் மிகவும் வேதனையடைந்துள்ளனர்.

அதாவது திருவையாறு, சாந்தபுரம், படித்த மகளிர் திட்டம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 480 கிலோமீற்றர் நீளமுடைய வீதிகளே இவ்வாறு திருத்தப்படாமல் காணப்படுகின்றது.

மீண்டும் மீளக்குடியேறிய மக்கள் சில அத்தியாவசிய தேவைகளைக் கூட நிறைவேற்றாமல் இருப்பது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வீதியால் கர்ப்பிணிப் பெண்கள், பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள் பாதிப்படைந்துவருகின்றனர். அதேவேளை வாகனங்கள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவை வீதியால் செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது.

மழை காலங்களில் குன்றும் குழியுமாக இருக்கும் இடங்களில் மழைநீர் தேங்கி நிற்பதால் மக்கள் பிரயாணம் மேற்கொள்ள முடியவில்லையென விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் வந்து பார்வையிட்டு எமது கிராம வீதிகளை புனரமைத்து தருமாறு உங்கள் பக்கமூடாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

**திருவையாறு மக்கள்**


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


### அமைதியின் சொற்கள்

ஒன்றுமில்லாத தன்மையிலிருந்து உருவாகி, ஒன்றுமில்லாததில் முடிந்துவிடுகின்றது. இது உங்களால் எழுதப்பட்ட உங்களின் கதை. மாபெரும் துணிகரமான செயல் என்பது, உங்களையே நீங்கள் கண்டுகொள்வதுதான்.

இணையத்தளம்: www.wopg.org

- பிரேம் ராவத்






## வாசகர்சாலை

### புதியன புகுதல்

தினமுரசின் பணியாளர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள். புதுப்பொலிவுடன் முரசு மிளரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். சில அம்சங்களைக் குறைத்து வாசகர்கள் பயன்பெறக் கூடியவகையில் வரவேண்டும். பழையன கழிதலும் புதியன புகுதலும் முரசுக்கும் பொருந்தும் என்றே நான் திடமாக நம்புகின்றேன்.

ப.பார்கவி, மாத்தளை.

### முரசுக்கு புது வருட வாழ்த்துக்கள்!

கனவுகள் கண்டால் தான் அதை நாம் நிஜமாக்கலாம் என்று அப்துல் கலாம் கூறியதுபோல், தினமுரசு வாரமலர் என்றுமே நிஜமாக்த கனவு காணவேண்டும். அப்போது தான் ஜெயிக்கமுடியும். அப்படியெனில் வீறுநடை போடமுடியும். முரசில் இடம்பெறும் அனைத்துமே அருமை. கட்டுரைகளின் அளவைக் குறைக்கவேண்டுமேன ஆசிரியரைக் கேட்டுக் கொள்கின்றேன். முரசு மேலும் வளர்ச்சி காணவேண்டுமென புதுவருடத்தில் கனிவாகக் வேண்டுகிறேன்.


என்.சதாசிவம், அச்சுவேலி.

### நெஞ்சம் கனக்கிறது!

முரசில் வரும் எல்லாவற்றையும் நான் விரும்பிப் படிப்பேன். சென்ற முரசில் வெளியான தாய்ப்பாசம் என்ற கதை என் நெஞ்சை தொட்டு நெஞ்சு கனக்கிறது. தாய்ப்பாசத்தின் வலிமையை உணர்த்த இதைவிட ஒரு உதாரணமே தேவைப்படாது. அம்மாவின் தனித்தன்மையை அந்தக் உண்மைக்கதை வெளிப்படுத்தியிருக்கிறது. நானும் அக்கதை கதையை வாசிக்கும்போது நானும் அப்பாத்திரம் ஆகிவிட்டேன். பிரமாதம். ஆசிரியருக்கு எனது நெஞ்சம் கனத்த நன்றிகள்!!

எஸ்.கபிலன், பதுளை.

# கூட்டமைப்பு மீண்டும் ஒரு வரலாற்றுத் தவறை விட்டுள்ளது



## சாடுகிறார் ஜெயானந்தமூர்த்தி

**ஜனாதிபதி தேர்தலில் எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவுக்கு ஆதரவு தெரிவித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுத்துள்ள முடிவு தமிழ் மக்களுக்கு விரோதமானது. இதனால் கூட்டமைப்பு மீண்டுமொரு வரலாற்றுத் தவறைவிட்டுள்ளது. இது கண்டிக்கப்பட வேண்டியதாகும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,**

எதிரணி பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவை வடகிழக்குத் தமிழ் மக்கள் ஆதரித்து வாக்களிக்கவேண்டுமென தமிழ் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்துள்ளதுடன் தமிழ் பிரதேசங்களில் பாரியளவில் தேர்தல் பிரசாரத்திலும் ஈடுபட்டுள்ளது. இது தமிழ் மக்களை பிழையான முறையில் வழிநடத்தும் செயல் என்பதுடன் கூட்டமைப்பினர் தமது சுயநலத்திற்காக மக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் ஜனநாயகத் திணிப்பாகவுமே கருதவேண்டியுள்ளது. கடந்த 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போதும் எதிரணி பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவை ஆதரிக்க வேண்டுமென தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவர்கள் ஒருதலைப்பட்சமாக முடிவெடுத்து தமிழ் மக்களை பிழையான பாதையில் வழிநடத்தியிருந்தனர்.

இந்த அனுபவத்தை மறந்து ஆட்சி மாற்றம் வேண்டுமென்றும் அதனாலேயே எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்து வெற்றியீட்ட வைக்கவேண்டுமென்றும் கூட்டமைப்பு மீண்டும் கங்கணம்கட்டி நிற்கின்றது.

கூட்டமைப்பு தமிழ் மக்களின் கௌரவமான வாழ்க்கை, அவர்களின் அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைகள், தேவைகள் என்பதற்கு அப்பால் தமது சுயநலத்திற்காகவும் பிராந்திய மற்றும் வல்லரசுகளின் தேவைகளுக்காகவுமே தொடர்ந்து செயற்பட்டுவருகின்றது.

ஏனெனில், தற்செயலாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் அதனால் நன்மையடையப்போவது இந்நாடுகளே தவிர எமது தமிழ் மக்கள் அல்ல. இந்த அணியில் தமிழ் மக்களுக்கு எதிரான கட்சிகளே கூட்டுச் சேர்ந்திருக்கும் நிலையில் தமிழ் மக்களுக்கு நிம்மதியான எந்தவொரு தீர்வையும் கூட்டமைப்பினால் பெற்றுக் கொடுக்க முடியாதநிலையே தோன்றும்.

எனவே இன்றைய அரசியல் சூழ்நிலை, சர்வதேச போக்குகள், பிராந்திய நாடுகளின் நிலைப்பாடுகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு தமிழ் மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டிய காலமாகும். தமிழ் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு கட்டத்திலும் தீர்க்கமான முடிவுகளையோ எதிர்காலத்தை நோக்கிய சிந்தனையுடைய நல்வழிகளையோ மேற்கொண்டு மக்களை வழிநடத்தியதாக சரித்திரமில்லை.

எனவே, எமது மக்கள் தமது ஜனநாயக உரிமையை விட்டுக் கொடுக்காது எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்கவேண்டும் என்பதுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையைப் புறந்தள்ளி அவர்களின் கபடநாடகத்தை உணர்ந்து கொண்டு அவர்களுக்கு தகுந்த பாடம் கற்பிக்கவேண்டும். இதுவே எமது மக்களின் வரலாற்றுக் கடமையாகும். என ஜெயானந்தமூர்த்தி விடுத்துள்ள அறிக்கையில் மேலும்

## மக்களைத் திசை திருப்ப ஊடகங்களின் திட்டமிட்ட இருட்டடிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் தொடர்பில் சில ஊடகங்கள் பக்கச்சார்பாகச் செயற்பட்டதாகவும் சில செய்திகள் வேணுமென்றே இருட்டடிப்புச் செய்யப்பட்டதாகவும் நடுநிலையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக, பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு சாரார் தீர்மானித்ததை அடுத்து கட்சிக்குள் பாரிய பூசல் ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் மத்திய வடமாகாண சபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன், மன்னார மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வடமாகாண சபை உறுப்பினர் குணசீலன் ஆகியோர் தனித்தனியாக ஊடகவியலாளர் சந்திப்புக்களை ஏற்பாடு செய்து தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

எனினும், இவ்வாறானவர்களின் கருத்துக்களை சில ஊடகங்கள் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். இதேபோன்று பலதரப்பட்டவர்களின் கருத்துக்கள் மறைக்கப்பட்டு மக்களை தவறான வழியில் திசைதிருப்புவதற்கு சில ஊடகங்கள் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## வறுமையை ஒழிக்க கல்வி மறுமலர்ச்சி அவசியம்

"மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படுகின்ற வறுமையை ஒழிப்பதாக இருந்தால் இந்த மாவட்டத்தில் கல்வி மறுமலர்ச்சியும் விழிப்புணர்வும் ஏற்படவேண்டும்'' என ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மத் ஹனீபா தெரிவித்தார்.

ஏறாவூர் சமூக ஆய்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் வறிய மாணவர்களுக்கு பொருளாதார மற்றும் உளவியல்ரீதியிலான உதவிகளைச் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை அறபா வித்தியாலயத்தில் ஏறாவூர் சமூக ஆய்வு நிறுவனத்தின் தலைவர் எம்.எம்.அஷ்ரப் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த வறிய தமிழ் முஸ்லிம் மாணவர்கள் 100 பேருக்கு தலா 1300 ரூபாய் பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் தொடர்ந்தும் தெரிவித்த அவர், "வறுமை என்பதை நாங்கள் விரும்பி ஏற்றுக்கொண்டு வாழக்கூடாது. வறுமையுடன் பிறப்பது நாம் செய்த தவறல்ல. ஆனால் வறுமையுடன் இறப்பது நாம் செய்யும் தவறுதான். நாம் வாழும்போது தொடர்ந்து எதிர்பார்ப்புடன் கையேந்தி வாழாமல் வறுமையில் இருந்து மீள்வதற்காக முயற்சி எடுக்கவேண்டும்.

வறுமையிலிருந்து மீள்வதற்கும் இனங்களுக்கிடையில் சகவாழ்வையும் சமாதானத்தையும் நிலைபெறச் செய்வதற்கும் வறுமைப்பட்ட மக்களிடத்தில் கல்வி மறுமலர்ச்சி ஏற்படுவது முக்கியம். இப்பொழுது கல்வி வளர்ச்சிக்காக அரசாங்கமும் பல்வேறு சமூக நிறுவனங்களும் பல்வேறு வகைப்பட்ட உதவிகளைச் செய்துவருகின்றார்கள். இதனை சிறந்த வாய்ப்பாகப் பயன்படுத்தி வறிய மக்கள் கல்வியில் மறுமலர்ச்சி பெறவேண்டும். இதுதான் உண்மையான நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியாக இருக்கும்'' என்றார்.

## விரைவில் தாமரை கோபுரம்!

கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டு வரும் தாமரை கோபுரம் மஹிந்த ராஜபக்ஷ தொலைத்தொடர்பு கோபுரத்தின் நிர்மாண வேலைகள் இந்த ஆண்டில் பூர்த்திசெய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட தெரிவித்தார்.

இந்த தாமரை கோபுர நிர்மாண வேலைகளுக்காக 104.3 அமெரிக்க டொலர்கள் ரூபா ஒதுக்கப்பட்டது. 350அடி உயரமான இந்த கோபுர கட்டடத்தொகுதியில், பார்வையாளர் அரங்கு, உல்லாச ஹோட்டல்கள், தொலைக்காட்சி கோபுரங்கள், தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமைக்கப்படுகிறது.

## தரையிறக்கப்பட்டது மலேசிய விமானம்!

இந்தியாவின் தென்பகுதியில் காணப்பட்ட அடர்த்தியான பனிமூட்டம் காரணமாக, மலேசியாவின் கோலாலம்பூரிலிருந்து சென்னைக்கு செல்லவிருந்த ஏயார் ஏசியா விமானமொன்று, கொழும்புக்கு திசை திருப்பப்பட்டிருந்ததாக, ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சென்னை விமானநிலையத்தை சென்றடையவேண்டிய ஏ.கே11 என்ற விமானமே கொழும்புக்கு திசை திருப்பப்பட்டது. 168 பிரயாணிகளுடன் புறப்பட்ட இந்த விமானம் முற்பகல் 11.15 மணியளவில் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## 'யாழ்ப்பாணம்' இது ஒரு போர் விமானம்



இங்கிலாந்தின் முதலாவது போர் விமானத்தின் பெயர் யாழ்ப்பாணம் என்பது ஆகும். இப்போர் விமானத்தை உருவாக்குகின்றமைக்கு யாழ்ப்பாண தமிழர்கள் வழங்கி இருந்த நிதிப் பங்களிப்புக் காரணமாகவே இப்பெயர் சூட்டப்பட்டு இருக்கின்றது. இப்போர் விமானம் குறித்த தகவல்கள் மிகவும் சுவாரசியமானவை. முன்னைய கால விமானங்கள் 100 குதிரை வலு என்ஜின்களுடன் இயங்கிவந்தன. இவை மரம், துணி, வயர்கள் போன்றவற்றால் ஆக்கப்பட்டு இருந்தன.

முதலாம் உலகப் போர் நடைபெற்ற காலம். எதிரிகளை வேவு பார்ப்பதற்கும், குண்டுவீசுவதற்கும் சிறந்த பொறியாக விமானம் கண்டு கொள்ளப்பட்டது. ஆனால் மேற்சொன்ன ரக விமானங்கள் அவற்றின் வடிவமைப்புக் காரணமாக எளிதில் தாக்குதல்களுக்கு உள்ளாகின. போர் விமானத்தை உருவாக்க தீர்மானித்தது இங்கிலாந்து அரசு. ஆனால் இதை உருவாக்குவதற்கான பணம் இன்றி திணறியது. இந்நிலையில் காலனித்துவ நாடுகளுக்கு செய்தி அனுப்பியது.

மலேசியாவை அப்போது நிர்வகித்து வந்தவர் டாக்டர் அல்மா பேக்கர். வரிகள்மூலம் தேவையான பணத்தை பெறமுடியாது என்று உணர்ந்து இருந்தார். வித்தியாசமான பிரசார உத்தி ஒன்றை தொடங்கினார். போர் விமானத்துக்கு உதவி செய் என்பது இப்பிரசாரம். அதிக பணம் தருகின்றவர்கள் முன்மொழிகின்ற பெயர் இவ்விமானத்துக்கு சூட்டப்படும் என்று உறுதிமொழி வழங்கி இருந்தார்.

யாழ். மல்லாகத்தை பூர்வீகமாக கொண்ட சுப்பிரமணியம் என்பவர் மலேசியாவில் உயர் தொழில் வகித்துவந்தார். இவரை இப்பிரசாரம் மிகவும் கவர்ந்தது. மலேசியாவில் குடியேறி இருந்த யாழ்ப்பாணத்தார்களிடம் இருந்து நிதி சேகரித்து F.E.2டி ரக விமானம் ஒன்றை பரிசாக இங்கிலாந்து அரசுக்கு வழங்கினார்.

அன்றைய நாளில் 2250 ஸ்ரேலிங் பவுண்டு வரை பணம் சேர்க்கப்பட்டு இருந்தது. இவ்விமானம் இரட்டைச் சிறகுகள் கொண்டு இருந்தது. இரண்டு பயணிகளை கொண்டு செல்லக்கூடியதாகவும், குண்டுவீசவும், துப்பாக்கிச் சமரில் ஈடுபடவும்வேண்டிய வசதிகளை கொண்டதாகவும் இருந்தது. பிரித்தானிய அரச விமான தொழில் சாலையில் தயாரிக்கப்பட்டது. ஜேர்மனியர்களின் குண்டு மழைகளுக்குள் தீவிரமாக நுழைந்து பேரழிவுகளை ஏற்படுத்தியது. முதலாவது உலக மகாயுத்தத்தின் பின் அருங்காட்சி அகத்தில் வைக்கப்பட்டு உள்ளது.

தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## தவறு யாருடையது?

வாக்காளர்கள் நேரத்துக்கே உங்களுக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களியுங்கள். வாக்குகளை வீணடித்து விடாதீர்கள். உங்கள் வாக்குகளை மோசடியாக இன்னொருவர் பிரயோகிப்பதற்கு நீங்கள் இடமளிக்கவேண்டாம்.

வாக்களிப்பதை இரகசிய வீடியோவில் யாராலும் கண்காணிக்க முடியாது. செய்மதி ஊடாக உங்களை உற்றுப்பார்க்க முடியாது. புலிகள் ஒரு காலத்தில் அதாவது இரண்டாயிரமாம் ஆண்டு வடக்கில் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்கின்றார்கள் என்பதை செய்மதி ஊடாக பார்ப்பதாகவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு வாக்களிப்பவர்களை துரோகிகளாக கருதி மரண தண்டனை விதிப்பதாகவும் மக்களை அச்சுறுத்தினார்கள்.

அது பொய் என்பதை பலர் தெரிந்து கொண்டிருந்தாலும் துப்பாக்கிகளுக்குப் பயந்து வாக்களித்தார்கள். இப்பொழுது மீண்டுமொரு முக்கியமான காலகட்டத்தில், முக்கிய தீர்மானத்தை எடுத்து வாக்களிக்கவேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

சிறுபான்மை மக்கள் தமது வாக்குகளை ஒரு வெறுமையான முடிவுக்கு ஆதரவாக வாக்களிக்கப் போகின்றார்களா? அல்லது கொஞ்சமாவது தமது கோரிக்கைகளையும், எதிர்பார்ப்புக்களையும் தனது எதிர்கால வேலைத்திட்டத்துக்குள் சேர்த்துக் கொண்டுள்ள ஒருவருக்கு வாக்களிக்கப் போகின்றார்களா? என்பதை முடிவு செய்து கொள்ளவேண்டும்.

குறிப்பாக, தமிழ் மக்களின் கூடுதல் வாக்குகளைப் பெற்றதாகக் கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தமிழ் மக்களை எதிரணியிடம் விலைபேசி விற்றுள்ளதை மறைக்க எவ்வளவோ முயற்சித்தும் அது முடியாமல் போய்விட்டது.

தமிழ் மக்களின் ஆறு இலட்சம் வாக்குகளை பெற்றுத் தருவதாக பேரம்பேசி ஆறு கோடி ரூபாய்களையும் கொழும்பில் மூன்று சாகுசு வீடுகளையும் வாங்கியிருக்கின்றார்கள். அந்த ஆறு கோடி ரூபாயை தமக்குள் பங்கிட்டுக் கொள்வதில் இன்றுவரையிலும் குடுமிச் சண்டை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்கள் வழங்கிய அரசியல் அதிகாரத்தை ஆட்சியிலிருந்த அரசுடன் பேரம்பேச பயன்படுத்தி இருந்தால் அன்று 2008ஆம் ஆண்டு அழிவு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்திருக்கலாம். ஆயிரக்கணக்கான எமது உறவுகளின் அழிவைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம். அவலங்களை தடுத்து நிறுத்தியிருக்கலாம்.

யுத்தத்திற்குப் பின்னர் அரசுடன் பேரம் பேசியிருந்தால், ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சுப் பொறுப்புக்களை பெற்றுக்கொண்டு அழிந்த தமிழர் வாழ்விடத்தை விரைவாக எழுச்சியோடு தூக்கி நிமிர்த்தியிருக்கலாம். நடைமுறையிலேயே தமிழரின் அரசியல் பலத்தை இனத்தின் கவசமாக மாற்றியிருக்கலாம். அத்தகைய சூழலில் இன்று படைகள், பாதுகாப்பு வலயம், மீள்குடியேற்றம் என்று முடிச்சுக்களாக பிரச்சினைகளை கட்டித் தூக்கிக்கொண்டு ஐ.நா, அமெரிக்கா என்று உலகம் சுற்றி அலையவேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருக்காது.

தமிழ் மக்கள் வழங்கிய அரசியல் அதிகாரத்தை பேரம்பேசும் சக்தியாக பயன்படுத்தியிருந்தால், தீர்வைத் தருவதற்கு விருப்பமில்லாதவர்களையும் தீர்வைத் தருவதற்கு வளைத்திருக்க முடியும். இனவாதிகளை தெருக்களில் இறங்கவிடாமலே துரத்தியிருக்க முடியும். ஏனென்றால் நாமே அரசாகவும், அதிகாரமாகவும் இருந்திருக்கமுடியும்.

அப்படியெல்லாம் பேரம்பேசாமல் முட்டாள்கள் தற்போது, தமிழ் மக்களுக்கு எதையும் தரமாட்டேன் என்றும், வடக்கிலிருந்து இராணுவத்தை விலக்க மாட்டேன் என்றும், எந்த சிறுபான்மையினரோடும் எவ்விதமான இணக்க உடன்பாடுகளையும் செய்யமாட்டேன் என்றும் கூறும் ஒருவரிடம் கோடிக்கணக்கான பணத்துக்கு பேரம்பேசுவதாகக் கூறி சோரம்போய் தமிழ் மக்களுக்கு துரோகம் செய்திருக்கின்றார்கள்.

தமிழ் மக்கள் இவற்றையெல்லாம் சிந்திக்க வேண்டும். தமது தன்மானத்தை கேள்விகேட்டு வாக்குப் பெற்றவர்கள், மானம் இழந்து தம்மை கூலிக்கு ஒப்பாரி வைக்கச் சொல்லியிருப்பதை புரிந்து கொள்ளவேண்டும். இப்போதும் தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவில்லை என்றால் தவறு கூட்டமைப்பினரிடம் இல்லை. தமிழ் மக்களிடமே என்பதை கூறவேண்டியதில்லை.

**மீண்டும் மறுமடலில்**
**வந்து கலக்கும்வரை**

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

## சாதனையாளரா – சதிகாரரா!



# மக்களின் தீர்ப்பு



இலங்கையின் அரசியல் வரலாற்றில் இன்று நடைபெறுகின்ற ஜனாதிபதித் தேர்தல் இரண்டு பிரதான கூடாரங்களின் மோதலாக நடைபெறுகின்றது. வெற்றியும் தோல்வியும் அதிக வித்தியாசம் இல்லாத வாக்குகளின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படும்.

அதுமட்டுமல்லாமல் ஜனாதிபதியை தீர்மானிக்கப்போகும் வாக்குகளில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளும் முக்கியமானவையாக இருக்கப் போகின்றது. பெரும்பான்மை சிங்கள மக்களே தீர்மானிக்கும் சக்திகளாக இருந்த நிலைமை இம்முறை ஆட்டம் கண்டுள்ளது.

பிரதான வேட்பாளர்களின் கூடாரத்துக்குள் ஓடிச்சென்று ஒழிந்துகொள்ளும் அரசியல்வாதிகளின் எதிர்காலம் கேள்விக்கு உள்ளாகியுள்ளது. அவர்கள் தமது கொள்கை நிலைப்பாட்டுக்காக கூடாரங்களை மாற்றிக் கொள்ளவில்லை. பணத்துக்காகவே இந்தக் கூடாரத்தாவல்களை செய்துகொண்டு இருக்கின்றனர் என்பதை மக்கள் புரிந்துகொண்டுள்ளனர்.

மைத்திரிபால பவர்பிளே விளையாடினார். அதில் மகிந்தவின் இருபத்து ஒன்பது விக்கெட்டுக்கள் விழுந்தன என்று ஊடகங்கள் கூறின. அதாவது இதுவரை அரசின் பக்கமிருந்த அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி உறுப்பினர்கள் என இருபத்தி ஒன்பது பேர் கூடாரம் தாவியுள்ளனர் என்பதையே இவ்வாறு குறிப்பிடுகின்றனர்.

இதில் என்ன பெருமை? இறுதிவரை மகிந்தவோடு இருந்து விட்டு திடீரென்று தன்னை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்போவதாக எதிர்க் கட்சிகள் இணங்கவும் கூச்சமே இல்லாமல் தலைமைக்கு துரோகம் செய்துவிட்டு வெளியில் வந்தவருக்கு கட்சிதாவி ஓடி வருகின்றவர்கள் குறித்து ஆராய்ந்து முடிவெடுக்கும் அருகதை இருக்காது.

அரசியலில் வர்த்தகம் செய்தவர்களும், இலாபங்களுக்காக கட்சி நடத்தியவர்களும் இன்றை இலாபங்களுக்காக கட்சி தாவிப் பாய்ந்துகொண்டு இருக்கின்றார்கள். ஆரம்பத்தில் கட்சித் தாவலை பரபரப்போடு பார்த்த மக்கள் பின்னர் நாயும் நரியும் அரசியலில் தனது சுயரூபத்தைக் காட்டிக் கொண்டிருக்கின்றது என்று மக்கள் புரிந்துகொண்ட பிறகு கட்சி தாவல் செய்திகளை முக்கியத்துவம் கொடுத்து கேட்பதில்லை.

ஆட்சி மாற்றம் ஒன்றுக்கான புரட்சிகரமான முயற்சியாகப் பார்த்த எதிர்க்கட்சிகளின் எழுச்சியை தற்போது காணவில்லை. எதிரணியிடம் ஆட்சி கவிழ்ப்புக்கான பொது இணக்கப்பாடு இருந்தது. ஆனால் நிலையான ஆட்சிக்கான பொது வேலைத் திட்டம் இல்லை. இன்று பொது எதிரணியைப் பார்த்தால் தலைமைத்துவம் இல்லாமல் முப்பது தலைமைகளோடு தேர்தலுக்குப் பின்னர் என்ன செய்வது என்ற தெளிவு இல்லாமல் குருட்டுப் பணம் செய்து கொண்டிருப்பதை இப்போது மக்கள் புரிந்து கொண்டிருக்கின்றார்கள்.

'மாற்றம்' என்ற சொல் மக்களிடம் மாற்றத்துக்கு வழிவகுத்த வரலாறுகள் உலக அரசியலில் உண்டு. மாற்றமொன்றுக்கான அத்திவாரமும் அதற்காக போராடுகின்றவர்களின் தியாகங்களும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் இங்கே மாற்றம் ஒன்றுக்கான போராட்டத்துக்கு எவரும் கடுமையாக உழைக்கவில்லை. தியாகங்களைச் செய்யவில்லை.

அரசியல் குழப்பத்தில் ஜனாதிபதியாக வரமுடியுமா என்ற எதிர்பார்ப்பில் மைத்திரியும், மைத்திரியின் முதுகில் சவாரி சாத்தியமானால் குறுக்குவழியில் பிரதமராகும் கனவில் ரணில், இவர்கள் அதிகாரத்துக்கு வரமுடியுமாக இருந்தால் சுதந்திரக் கட்சியில் தான் இழந்த குடும்பப் பங்கை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ள முயற்சிக்கும் சந்திரிக்காவின் விருப்பங்கள். இந்த முக்கோண நாடகம் வெற்றிகரமாக அரங்கேறினால், அதில் தாமும் குளிர்காய்ந்து கொள்ளமுடியுமா? என்ற சுயஇலாப கணக்குவழக்குகள் ஒருபுறமும் என சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த காத்திருக்கும் சந்தர்ப்பவாதிகள் மாற்றத்துக்கான தியாகத்தையோ, உழைப்பையோ செய்யவில்லை.

மாற்றம் சந்தர்ப்பவசமாக தானாகவே நிகழ்ந்துவிடும் என்று காத்திருக்கின்றார்கள். இந்தக் காத்திருப்புக்கான நம்பிக்கையானது வாக்காளர்களின் அறிவீனம்தான். மக்கள் கடந்த காலத்தை மறந்துவிடுவார்கள். மக்களுக்கு அரசியலில் அவ்வளவு பெரிய அக்கறை இல்லை. மக்களுக்கு இராமன் ஆண்டாலும் இராவணன் ஆண்டாலும் நமக்கு ஒரு நன்மையும் இல்லை என்று விரக்தியுடன் இருப்பார்கள். மக்கள் மகிந்தவை பத்து வருடமாகப் பார்த்துவிட்டார்கள். இனியொரு மாற்றத்திற்காக மைத்திரியைப் பற்றி யோசிப்பார்கள். மக்கள் சீனாவின் அக்கறையைப் பற்றியோ, அமெரிக்காவின் சதியைப் பற்றியோ சிந்திக்க மாட்டார்கள். ஒருவேளை மைத்திரி வென்றால் அந்த வெற்றியை தாம் நீண்டகாலமாக நிராகரித்துவந்த ரணிலிடம் கொடுத்து மக்களை தோற்கடித்து விடுவார் என்பதை மக்கள் சிந்திக்கமாட்டார்கள். மக்களுக்கு யுத்தம், அழிவுகள் எல்லாம் மறந்துபோய்விட்டது. இப்படி எல்லாம் அரசியல்வாதிகளிடம் மக்களைப் பற்றிய தெளிவு இருக்கின்றது.

நாளை மகிந்த ராஜபக்ச மீண்டும் ஜனாதிபதியாக வெற்றிபெற்றால், இன்று புனிதம் பூசிக்கொண்டு மைத்திரிக்குப் பின்னால் ஓடி ஒழியும் அரசியல்வாதிகள் மைத்திரியை, ரணிலை, சந்திரிக்காவை குறைகூறிக் கொண்டு மகிந்தவுக்கு போஸ்டர் ஓட்டிக்கொண்டு வருவார்கள். கொஞ்சமும் வாய்கூசாமல் மகிந்தவின் புகழ்பாடுவார்கள். அமைச்சுப் பொறுப்புக்கள்கேட்டு தலை சொறிந்து நிற்பார்கள். மைத்திரிகூட நாளைக்கு "நான் மீண்டும் தாய்வீட்டுக்கு வந்துவிட்டேன். சிலகாலம் எனக்கு கிரகம் சரியில்லை. இப்போது எல்லாமும் சரியாகி விட்டது" என்று மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் அமைச்சராகிக் கொண்டு நாட்டு மக்களுக்கு அறிக்கைவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அரசியலில் இவை எல்லாமுமே சாத்தியமே. இன்று துரோகம் செய்துவிட்டு மைத்திரியின் கூடாரத்துக்குள் ஓடியவர்களை மகிந்த பழி வேண்டமாட்டார். பதிலாக அவர்களுக்கு அமைச்சுக்களை வழங்கி மக்களிடம் தமது பக்குவத்தைக் காட்டுவார். மக்களை அதையும் சிலகாலம் ஆர்வமாக கதைத்துவிட்டு பின்னர் மறந்துபோவார்கள்.

நாளை மைத்திரி ஜனாதிபதியானால் மகிந்த உட்பட அவரோடு சேர்ந்திருக்கிற பலரும் நாட்டைவிட்டு ஓடி விடுவார்கள் என்று இன்று கூறுகின்றவர்கள், மகிந்த தோல்விக்குப் பிறகும் நின்று பிடிக்க திராணியில்லாதவர் என்றுகூற முற்படுகின்றார்களா? அல்லது மைத்திரி தனது அரசியல் எதிரிகளை பழிவாங்கும் கொடூரமானவர் என்று கூறுகின்றார்களா?

அதேபோல் மகிந்த ஜனாதிபதியானால் இப்போது தனக்கு துரோகம் செய்தவர்களை என்ன செய்வார் என்றோ, அவர்கள் நாட்டைவிட்டு ஓடவேண்டியிருக்கும் என்றோ எவரும் கூறவில்லை. அதற்குக் காரணம், மகிந்த வெல்ல மாட்டார் என்று அவர்கள் உறுதியாக நம்புகின்றனர். அல்லது மகிந்த தனது அரசியல் எதிரிகளையும், துரோகிகளையும் பழி வாங்கமாட்டார். மன்னிப்புக் கொடுத்து மனிதநேயத்தோடு அரவணைக்கக்கூடியவர் என்று கூறுகின்றார்கள்.

தற்போது மகிந்த மீதும், அவரது சகோதரர்கள் மீதும் கூடுவிட்டு கூடு பாயும் அரசியல்வாதிகள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை கூறுகின்றார்களே ஒழிய, குற்றங்களை ஆதாரங்களுடன், இந்த இடைப்பட்டகாலத்துக்குள் ஏன் மக்களுக்கு நிரூபிக்கவில்லை.

அப்படி என்றால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவையா? அல்லது அந்தக் குற்றச்சாட்டுக்களை ஆராய்ந்தால் அதற்குள் தாமும் குற்றவாளிகளாக இருப்பது தெரிந்துவிடுமா? அல்லது சுமத்திய குற்றச்சாட்டுக்கள் கூடாரம் தாவியதை நியாயப்படுத்துவதற்காக கூறப்பட்ட பொய்கள்.

மக்களுக்கு வேடிக்கை காட்டுவதற்கு முற்படுகின்றவர்களுக்கு மக்கள் ஒரு வேடிக்கையைக் காட்டினால் தேர்தல் முடிவுகள் எப்படி அமையும்?. அரசியல் தலைமைகள் சிந்திப்பதையே மக்களும் சிந்திப்பார்கள் என்றோ, அதையே பின்பற்றுவார்கள் என்று எவரும் நம்பமுடியாது.


நாட்டில் மாற்றம் வேண்டும் என்று கூறுகின்றவர்களை யார்? என்று ஆராய்ந்து பார்த்தால் கொள்கையற்ற அரசியல் பயணத்தில் தம்மை பாதுகாத்துக்கொள்ள அவசரப்படுகின்றவர்களும், தமது முறையற்ற பொருளாதார முதலீடுகளை வெளிச்சத்துக்கு காட்டாமல் தொடர்ந்து மறைக்க முற்படுகின்றவர்கள், சந்தர்ப்பத்தை தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் தந்திரம் தெரிந்த நரிகளுமாகவே இருக்கின்றார்கள்.

வேறு ஒருவிதமாக கூறுவதாக இருந்தால் இத்தகைய துரோகிகளையும், கொள்கைப் பிடிப்பு இல்லாதவர்களையும், தந்திரக்காரர்களையும் தன்னோடு வைத்துக்கொண்டு கடந்த பத்து வருடமாக ஆட்சி செய்த மகிந்த ராஜபக்ச எவ்வளவு சிரமப்பட்டிருப்பார்? எவ்வளவு சகிப்புத்தன்மையோடு இருந்திருப்பார். அந்த சகிப்புத் தன்மைகள் இன்று குற்றங்களாகி உள்ளதா?

வாக்குச் சீட்டுக்களை ஒரு ஆயுதமாக மக்கள் பிரயோகிக்க வேண்டும். மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் தவறுகளே நடக்கவில்லை என்றும், நூறு வீதமும் எல்லாமுமே மிகச் சரியாகவே நடைபெற்றது என்றும் யாராவது கூறினால் அது கலப்படமற்ற பொய்யாகும்.

ஆனால் இன்று ஆட்சி மாற்றம் ஒன்றைக்கோருவோரும், அதற்குப் பின்னால் குறுக்கு வழியில் முயற்சிப்போரும் கடந்துவந்த பாதையை திரும்பிப் பார்த்தால் அவர்கள் நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் சாதித்தவை என்று எதுவுமில்லை.

(22 ஆம் பக்கம் பார்க்க)





# புலிகளின் வதை முகாமில்

வதை 147 — மணியம்

அது ஒரு சிறிய பாடசாலை. அதிபர் காரியாலயமும் மாண-வர் கற்கும் ஒரு மண்டபமும் இருந்ததாக ஞாபகம்.

நாம் எமது பாதுகாப்புக் காக அங்கிருந்த மேசைகள், கதிரைகள் எல்லாவற்றை யும் தூக்கி கட்டடத்தின் வாசல்களில்போட்டு யாரும் உள்ளே வராமல் தடை செய்தோம். இந்தப் பாதுகாப்பு தாக்கவருபவர்களுக்கு ஒரு தூசி என்று தெரியும். சமயத்தில், புல்லும் பல்லுக் குத்த உதவும் என்பதற்கு இணங்கவும், ஒரு மனத் திருப்திக்காகவும் அவ்வாறு செய்தோம். அத்துடன் அங்கிருந்த உடைந்த நாற் காலிக் கால்கள், மேசைக் கால்கள் என்பவற்றையும் எடுத்து கைவசம் வைத்துக் கொண்டோம்.

பெருந்தொகையான காடையர்கள் பாரிய ஆயுதங்கள் சகிதம்வந்தால், எமது மரக்கால ஆயுதங் களால் தாக்குப் பிடிக்க முடியாது என்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும் அவர்களது தாக்குதலில் அநியாயமாகச் சும்மா இறக்காது, இறுதி-வரை போராடி வீரமரணம் அடைவது மேன்மையானது அல்லவா? (அந்தக் காலத்தில் வீரமரணத்துக்கு அப்படி ஒரு மவுசு இருந்தது!)

நாம் எதிர்பார்த்தவாறு அன்றிரவு அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லை. விடிந்ததும் எவ்வளவு விரைவாகப் புறப்பட முடியுமோ அவ்வளவு விரைவாகப் புறப்பட்டுவிட வேண்டும் என எம்மில் பலர் விரும்பினோம். அங்கிருந்த கிணற்றிலும், மலசலகூடத்திலும் காலைக் கடன்களை முடித்துவிட்டு புறப்படத் தயாரானோம். இதற்கிடையில் எம்முடன் அன்றிரவு அருகில் தங்கி இருந்த பொலிசார், அருகில் ஒரு தேநீர்க்கடை இருப்பதாக வும், விரும்பியவர்கள் அங்கு சென்று தேநீர் குடிக்கலாம் எனவும் தெரிவித்தனர். அவர்களும் தேநீர்குடிக்க அங்குசென்றனர். ஒரு கட்டத்தில் ஒரு பொலிஸ்கூட எமக்குக் காவல் இருக்காமல் அத்தனைபேரும் தேநீர் குடிக்கச் சென்றுவிட்டனர். ஆனாூல் பயம்காரணமாக எம்மில் எவரும் அந்தக் கடைக்குத் தேநீர் குடிக்கச் செல்லவில்லை.

நேரம் போய்க் கொண்டி ருந்தது. நகரில் சனநடமாட்டம் மெள்ள மெள்ள ஆரம்பித்து, பின்னர் அதிகரிக்கத் தொடங்கியது. வீதியால் போவோர் வருவோர் எல்லோரும் நாம் தங்கியிருந்த பாடசாலைக்கு முன்னால் தரித்துநின்று எம்மை வேடிக்கை பார்த்துவிட்டுச் செல்லத் தொடங்கினர். சிலர் அங்கேயே நின்று கொண்டனர்.

இதற்கிடையில் பொழுது விடிந்ததும் அருகில் சில காட்சிகளை நாம் கண்டோம். ஒன்று எமது பாடசாலைக்கு எதிரில் வீதிக்கு அந்தப் பக்க மாக சைவ ஆலயம் ஒன்று இருப்பது தெரிந்தது. நல்ல வர்ணப்பூச்சு வேலைப்பாடு களுடன் அழகாகக் காட்சி அளித்த அந்தக் கோவில், நீண்டகாலமாகப் பராமரிப்பின்றி மரங்களாலும் செடி, கொடி களாலும் மூடப்பட்டிருந்தது. இதுதான் அனுராதபுரம் கதிரேசன் கோவில் என எம்முடன் வந்தவர்களில் யாரோ ஒருவர் விளக்கம் சொன்னார். எமது மக்கள் அந்தக் கோவிலின் நிலையைக் கண்டு பெரிதும் கவலை யுற்றனர். எம்மில் சிலருக்கு அந்தக் கோவிலின் அருகே சென்று பார்க்கவேண்டும் என ஆசையாக இருந்தது. ஆனால் பயத்தால் அருகில் போகவில்லை.

இன்னொரு காட்சியாக நாம் தங்கியிருந்த விவேகா னந்தா கல்லூரிக்கு அருகாமை யில், சமாந்தரமாக ஒரு முஸ்லீம் பாடசாலை அமைந்திருப்பதைக் கண்டோம். அதன் பெயர் அல்.அக்ஸா வித்தியாலயம் என ஞாபகம். அப்படியொரு பாடசாலை இருந்தது ஏதோ மனதுக்குச் சற்றுத் தெம்பாக இருந்தது.

இதற்கிடையில் நாமும், எம்முடன் துணைக்குவந்த பொலிசாரும் புறப்படுவதற்குத் தயாராக இருந்தபோதிலும், எமது பஸ்கள் வந்து சேர்வ தாக இல்லை. அதேநேரத்தில் எமது பாடசாலைக்கு முன்னால் கூடுவோரின் தொகை வரவர அதிகரித்துக் கொண்டிருந்தது. அத்துடன் பக்கத்திலிருந்த முஸ்லீம் பாடசாலையில் படிக்கும் பிள்ளைகளும் வரத் தொடங்கி யிருந்தார்கள். அதன் காரண-மாக எம்மில் பலருக்கு பதற்றம் ஏற்பட்டிருந்தது.

அங்கு வந்த சில முஸ்லீம் பிள்ளைகளும், சில முஸ்லீம் ஆசிரியர்களும் நாம் தங்கி யிருந்த தமிழ்ப் பாடசாலைக் குள்ளும் வந்து புகுந்தனர். அவர்கள் எம்மை வேடிக்கை பார்ப்பதற்காகத்தான் வந்து இருக்கிறார்கள் என நாம் கருதினோம். ஆனால் அவர் களோ எம்மைப் பார்த்துவிட்டு ஆச்சரியப்பட்டனர். ஏனெனில் அவர்களுக்கு நாம் அன்றிரவு அங்கு தங்கியிருப்போம் என்பது தெரிந்திருக்கவில்லை. அவர்கள் எமது நிலையை அறிந்து மிகவும் கவலைப் பட்டனர். எம்முடன் அனுதாப மாகக் கதைத்துத் தெம்பூட்டினர்.

அந்த முஸ்லீம் ஆசிரியர்க ளுடன் கதைத்தபோது, அவர் கள் சொன்ன ஒரு விடயம் பெரும் ஆச்சரியத்தை அளித்தது. அதாவது நாட்டில் இனவாத யுத்தம் ஆரம்பமான பின்னர், அனுராதபுரத்தில் இருந்த பல தமிழ் குடும்பங்கள் பாது காப்புத்தேடி நாட்டின் வேறு பகுதிகளுக்குச் சென்றுவிட்டனர். அதனால் அங்கு இயங்கிக் கொண்டிருந்த விவேகானந்தா தமிழ் வித்தியாலயம் மூடப் படக்கூடிய அபாயம் ஏற்பட்டது. இந்த நிலையை விரும்பாத அங்குள்ள சில முஸ்லீம் கல்விமான்கள் (அவர்களில் ஒருவரான எனது நண்பரும், முற்போக்கு எழுத்தாளருமான அன்பு ஜவகர்ஷா அனுராத புரத்தில் உள்ள ஒரு பாட-சாலையில் அதிபராகவும், பின்னர் கல்வி அதிகாரியாகவும் இருந்ததாகக் கேள்விப்பட்டு இருந்தேன்) தமிழ் வித்தியாலயம் மூடப்படுவதைத் தடுக்க ஒரு தந்திரத்தைக் கைக்கொண்டனர்.

அதாவது, தமது முஸ்லீம் பாடசாலையில் கல்விகற்ற மாணவர்களில் ஒரு பகுதி யினரை அங்கிருந்து விலக்கி, அருகில் இருந்த தமிழ் வித்தியாலயத்தில் சேர்த்து படிக்கவைத்தனர். அதன் மூலம் விவேகானந்தா தமிழ் வித்தியாலயம் மூடப்படுவதை அந்த முஸ்லீம் கல்விமான் கள் தடுத்துநிறுத்தினர். ஒரு குறிப்பிட்ட பிள்ளைகள் கல்வி கற்றால் அப்பாடசாலையை அரசாங்கம் மூடமுடியாது என்பது விதியாகும்.

முஸ்லீம் மக்கள் தமிழ் மக்கள்மீதும், தமிழ் மொழி யின் மீதும் கொண்டிருந்த அபிமானம் எனது இந்தப் பயணத்தின்போது, எனக்கு ஏற்பட்ட இரண்டாவது அனுபவமாக இருந்தது. ஏற்கெனவே எமது இரண்டாவது பயணத்தின் போது புத்தளத்தில் இருந்த ஒரு முஸ்லீம் வர்த்தகர் செய்த தன்னலமற்ற உதவி பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். இவ்வாறான உதவிகளைத் தமிழ் மக்களுக்காகச் செய்த அந்த சமூக மக்களைத்தான், புலிகள் சிறிது காலத்திற்கு உள்ளாக வடக்கிலிருந்து உடுத்த துணியுடன், இரண்டு மணித்தியால அவகாசத்தில் விரட்டியடித்த பெரும் அநியாயத்தைச் செய்தனர்.

இந்த இடத்தில் நான் இங்கு ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். நான் இலங்கையின் வட பகுதியில் பிறந்தவன். அங்கு தான் எனது வாழ்க்கையின் பெரும்பகுதி கழிந்தது. பின்னர் புலிகள் என்னைக் கைது செய்து விடுதலை செய்த பின்னர், சில ஆண்டுகள் கொழும்பில் - கிருலப்பனை யில் ஒரு சிங்களவர் வீட்டில் எனது குடும்பத்துடன் வாடகைக்கு இருந்தேன்.

இதுதவிர தென்னிலங்கை யின் பல சிங்களக் கிராமங் களுக்கும், கிழக்கில் பல முஸ்லீம் கிராமங்களுக்கும், மலையகத் தோட்டக் குடியிருப்புகளுக்கும் அடிக்கடி சென்று தங்கியும் வந்திருக்கிறேன்.

(வதை தொடரும்...)



# முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை



"எங்கள் பணத்தையும் கொடுத்து. அதை வைத்திருக்கக் கூலியும் அல்லவா அவர்களுக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது"

"உண்மைதான். உண்மைதான். இதோ இந்த காட்லொக்கைப் பாருங்கள். நாங்கள் தயாரிக்கும் எல்லா இரும்புப் பெட்டகங்களும் இருக்கின்றன"

"இவையெல்லாம் சிறிய பெட்டகங்கள்போல இருக்கின்றனவே"

"அப்படியல்ல. போட்டோவில சிறியது போலத்தான் தெரியும். ஆனால் நேரில் பார்க்கும்போது பெரியவை என்பதை புரிந்துகொள்வீர்கள்"

"இலட்சக்கணக்கில் பணம்போட்டு வைக்கும் இரும்புப் பெட்டகங்களை போட்டோவில் பார்த்து வாங்க நான் தயாரில்லை. இரும்புப் பெட்டகங்களை நேரில் பார்க்க முடியுமா"

"அது வழக்கமில்லை" என்று இழுத்தார் லோரன்ஸ்.

"ஒரு அழகான சீமாட்டிக்கு விதி விலக்கு செய்யமுடியாதா" என்று கவர்ச்சி யாக புன்னகைத்தார் மிஸ் மரியம்.

## ரயில் கொள்ளையில் பிளாக்மெயிலும் உண்டு!

சப் அன்ட் சன்ஸ் உரிமையாளர் லோரன்ஸ் கொஞ்சம் தயங்கினார். மிகப்பெரிய வங்கிகளுக்கும் பாதுகாப்புப் பெட்டகங்கள் செய்துகொடுக்கும் நிறுவனம் என்பதனால், தாம் தயாரிக்கும் பாதுகாப்புப் பெட்டகங்களை மற்றவர்கள் பார்ப்பதை வங்கிகள் விரும்புவதில்லை.

இருப்பினும் மிஸ் மரியம் 'கவர்ச்சி யான' புன்னகையுடன் வற்புறுத்தவே, லோரன்ஸ் அரை மனதுடன் சம்மதித்தார்.

"சரி. உங்களை அழைத்துச் செல்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. அங்குள்ள பாதுகாப்புப் பெட்டகங்கள் எதையும் தொடக்கூடாது"

"நான் எதற்காகத் தொடப்போகின்றேன்? என் கைகளால் தொடப்படும் பாக்கியம் பெற்றவை, பாதுகாப்பு பெட்டகங்கள் அல்ல. வேறு ஆட்கள் உள்ளார்கள்" என கிறக்கமான பார்வையுடன்கூறிய மிஸ் மரியம், "கண்களால் பார்த்தால்போதும்" என்றார்.

இதையடுத்து, தேன்குடித்த நரிபோல மாறிய, லோரன்ஸ், மிஸ் மரியத்தை உள்ளே தொழிற்சாலைக்கு அழைத்துச் சென்றார்.

லோரன்சைத் தொடர்ந்து தொழிற்சாலை க்குள் நுழைந்தார் மிஸ் மரியம். உள்ளே வெவ்வேறு அளவுகளில் இரும்புப் பெட்டகங்கள் இருந்தன. சில திறந்து இருந்தன. சில மூடியிருந்தன. சிலவற்றில் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர்.

"இதோ இதைப் பாருங்கள். ஒரு சதுர அடி அளவுள்ள பெட்டகம். இரண்டு லேயர்களால் ஆனது. இரும்பின் தடிப்பம் பதினாறு அங்குலம். டைனமைட்டி னால்கூட உடைக்க முடியாது. இந்த அளவு உங்களுக்குச் சரியாக இருக்குமா"

மிஸ் மரியம் உதட்டைப் பிதுங்கினார்.

"சரி. இதைப் பாருங்கள். அதைவிடப் பெரியது. நான்கு சதுர அடி பரப்பளவு. இரண்டு சாவிகள். அருமையான தயாரிப்பு"

"என்னுடைய கணவர் ஒரு கோடீஸ், வரர் என்று சொன்னேன். ஞாபகம் இல்லையா. எங்களிடம் இருக்கும் பணம், நகை எல்லாவற்றையும், இதற்குள் வைக்கமுடியாது. இதைவிட பெரிய பெட்டகத்தை எதிர்பார்க்கிறேன்"

"அப்படியா. சரி. என்னைத் தொடர்ந்து வாருங்கள். அடுத்த அறையில் வேறு சில பெட்டகங்கள் இருக்கின்றன. பார்க்கலாம்"

இதற்கிடையே, மிஸ் மரியம் தேடிச்சென்ற பாதுகாப்பு பெட்டகம் அதே அறை யின் ஒரு மூலையில் இருப்பது அவரது கண்களில் பட்டுவிட்டது.

"பொறுங்கள். இதோ இந்த இரண்டு பெட்டகங்கள் ஒரே சைசில் இருக்கின்றன. இப்படியான ஒன்றைத்தான் நான் தேடுகிறேன். நான்கு சாவிகள் போட சாவித் துவாரங்கள் இருக்கின்றன. பாதுகாப்பாக இருக்கும்"

"இந்தப் பெட்டகங்கள்..." லோரன்ஸ் தயங்கினார்.

"ஏன் தயங்குகிறீர்கள். இவை சரியில்லையா"

"அப்படியல்ல. எமது தயாரிப்புக் களில் முதன்மையான பெட்டகங்கள் இவை. ஆனால் இவை விற்பனைக் கல்ல. ஏற்கனவே விற்றுவிட்டோம். இப்போது வருடாந்தப் பராமரிப்புக் காக வந்திருக்கின்றன.

(கொள்ளை தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம்

136

பா.ராகவன்

அதைத்தான் எகிப்துப் படையினர் செய்ய முயன்றார்கள். ஆனால் இஸ்ரேல் மிகக் கவனமாகத் தனது போர்க்கப்பல்களில் எந்தவிதமான முக்கிய ஆயுதங்களையோ. விமானங்களையோ வைக்காமல். ஒப்புக்குக் கொஞ்சம் வீரர்களை மட்டுமே நிறுத்தி விட்டு தரைப்படையினர்வசமே அத்தனை தளபாடங்களையும் தந்திருந்தது!

இதை எகிப்து கனவில்கூட எதிர் பார்த்திருக்க முடியாதென்பதால். தரைப் படையினரின் தாக்குதலைச் சமாளிப்பது முடியாமல் அது தோல்வியைத்தழுவ வேண்டியதானது!

உதவியாக ரோயல் ஜோர்டன் விமானப் படைப் பிரிவு ஒன்று இருபத்தி நான்கு மணிநேரமும் கூடவே சுற்றிப் பறந்து கொண்டிருந்தது. மொத்தம் இருபது போர் விமானங்கள் கொண்ட படை அது.

ஜோர்டனுக்கு இரண்டு பிரச்சினைகள் இருந்தன. முதலாவது மேற்குக் கரைப் பகுதியை இஸ்ரேலிடமிருந்து காப்பது. இரண்டாவது. ஜோர்டனின் வசம் இருந்த ஜெருசலேம் பகுதிகளை எப்பாடுபட்டாவது காப்பாற்றிக்கொள்வது. ஆகவே. ஜெருசலேத்தில் தனியே ஐந்து பிரிகேட்டுகள் நிறுத்தப்பட்டன.

ஜுன் 05 ஆம் நாள் ஜோர்டன் தனது யுத்தத்தைத் தொடங்கியது. முதலில் ஜெருசலேத்தில் இருந்த இஸ்ரேலிய இராணுவ முகாம்மீது தாக்குதலைத் தொடங்கினார்கள். மறுபுறம் டெல் அவிவ் நகரில் இருந்த அத்தனை இஸ்ரேலிய அரசு அலுவலகங்கள்மீதும் ஜோர்டன் விமானங்கள் குண்டுவீசத் தொடங்கின. இப்படிக் கட்டடங்களைத் தாக்கிக் கொண்டே இஸ்ரேலின் விமானத்தளம் வரை வந்துசேர்ந்த ஜோர்டன் படை. அங்கிருந்த இஸ்ரேலியப் போர்



விமானங்கள் ஒவ்வொன்றையும் குறி வைத்து குண்டுவீச ஆரம்பித்தன. இஸ்ரேலியத் தரைப்படையினர் பீரங்கி மூலம் நிகழ்த்திய தாக்குதலில் ஜோர்டனின் சில விமானங்களும் அப்போது நாசமாயின. என்றாலும் யாரும் சற்று எதிர்பாராத விதமாகக் குறைந்தது எட்டு இஸ்ரேலிய விமானங்களையாவது ஜோர்டன் வீரர்கள் முழுசேதப்படுத்தியிருந்தார்கள்.

எகிப்தின் இன்னொரு பெரிய பலவீனம். தகவல் தொடர்பின்மை மற்றும் ஒருங்கிணைப்பு இன்மை. பதற்றத்தில் எகிப்துப்படை இஸ்டத்துக்குப் போரிடத் தொடங்கிவிடவே. ஒரு கட்டுப்படுத்தும் சக்தியாக யாராலுமே செயற்படமுடியாமல் போய்விட்டது.

சினாயும் காஸாவும் இஸ்ரேலின்வசம் திரும்பவந்தது இப்படித்தான்!

சிரியாவின் கோலன் குன்றுகளாயிற்று. எகிப்தின் சினாய் ஆயிற்று. அடுத்தது ஜோர்டன் அந்த மேற்குக்கரை விவகாரம்.

இஸ்ரேல் மிகுந்த தன்னம்பிக்கையுடன் அந்தப் பக்கம் அடுத்துப் பார்த்தது.

எகிப்து மற்றும் சிரியாவின் படைகளுடன் ஒப்பிட்டால் அன்றைய காலகட்டத்தில் ஜோர்டனின் படை சற்றே வலுவானது என்றுதான் சொல்லவேண்டும். ஜோர்டனுக்கு நிறைய மேலைநாடுகளுடன் நட்பு இருந்தது. அதன்மூலம் நவீன ஆயுதங்கள் பலவற்றை வாங்கிக் குவித்திருந்தார்கள். அத்துடன். அப்படிவாங்கும் ஆயுதங்களை இயக்குவதற்கான பயிற்சியும் முறைப்படி இராணுவத்தினருக்கு அளிக்கப்பட்டிருந்தது. அமெரிக்காவைப் பிடிக்காத அத்தனை தேசங்களுடனும் அன்றைக்கு ஜோர்டன் நட்புகொண்டிருந்தது. ஆகவே ஒரு யுத்தம் என்று வரும்போது அதுவும் இஸ்ரேலுடன் யுத்தம் என்று வரும்போது அத்தனைபேரும் போட்டி போட்டுக் கொண்டு ஜோர்டனுக்கு ஆயுத உதவிகள் செய்தார்கள்.

ஆறு நாள் யுத்த சமயத்தில் ஜோர்டனின் மொத்த படைப்பலம் சுமார் ஒன்றரை இலட்சம். அதில் பதினொரு பிரிகேட்டுகள் - அதாவது. சுமார் அறுபதினாயிரம் வீரர்கள் கொண்ட ஒரு சிறப்புப் பிரிவு நவீனரக பீரங்கிகளை இயக்குவதற்காகவே பழக்கப்பட்டிருந்தது. இதில் சுமார் நாற்பதினாயிரம் பேரை மேற்குக் கரையிலும் மிச்சமிருந்த இருபதாயிரம் பேரை ஜோர்டன் பள்ளத்தாக்குப் பகுதியிலும் நிறுத்தியிருந்தார்கள். இவர்களுக்கு

இதற்கான பதிலை மறுநாள் யுத்தத்தில் இஸ்ரேல் அளித்தது. ஒரே சமயத்தில் ஏழு ஜோர்டனிய இலக்குகளின்மீது அவர்கள் தாக்குதலை ஆரம்பித்தார்கள். ரமல்லா நகரம். ஜெருசலேமின் ஜோர்டானியப் பகுதிகள். ஜோர்டன் பள்ளத்தாக்கு என்று புகுந்து புகுந்து அடிக்கடி ஆரம்பித்தார் கள். மூச்சுவிடக்கூட அவகாசமில்லாமல் குண்டுகள் வந்து விழுந்துகொண்டே இருந்தன.

ஏழாம் திகதி நிலைமை இன்னும் தீவிரமானது. ஜோர்டனின் விமானப்படை முழுவதும் மேற்குக்கரை ஓரம்தான் அணி வகுத்திருக்கின்றன என்பதைக் கவனித்து. இஸ்ரேல். தனது விமானப் படையை மொத்தமாக ஜெருசலேத்துக்கு அனுப்பியது. விமானப்படையின் பாதுகாப்பில் நகருக்குள் பழைய ஜெருசலேம் நகருக்குள் நுழைந்த இஸ்ரேலிய இராணுவம் அங்குள்ள புனிதச் சுவரையும் Temple mount என்று சொல்லப்படும் புராதனமான புண்ணியத் தலம் ஒன்றையும் கைப்பற்றிக்கொண்டது.

அத்துடன் ஓயாமல் அப்படியே படையை நகர்த்திக் கொண்டுபோய் ஜுதேயா. குஸ் எட்ஸன். ஹெப்ரான் பகுதிகளையும் அபகரித்துக் கொண்டது.

இந்தப் போரில் ஜோர்டன் படையினர் காட்டிய வீரம் குறித்து மொத்தம் நான்கு இஸ்ரேலிய இராணுவ ஜெனரல்கள் தமது போர் நினைவுக் குறிப்புகளில் மிகவும் சிலாகித்து எழுதியிருக்கிறார்கள்.

(தொடரும்...)

# காதல் ஊழல்

24



**அன்று** முழுவதும் தமிழரசியின் தொலைபேசி அழைப்புக் காக காத்திருந்தாள். ஆனாலும் எதிர்பார்க்காத அழைப்பு நித்திரைவிட்டு எழுப்பியது!

விடுதலை! கண்களை கசக்கிவிட்டு மீண்டும் நோக்கினாள்! அவனேதான். பேரானந்தத்தில் பச்சை பொத்தானை அழுத்தி "ஹலோ" என்றாள்!

அவ்வளவுதான் உடனே வார்த்தைகளை பொல்லாத வார்த்தை எனும் கல்லால் அடித்தான்! புஸ்பா எதையும் உச்சரிக்க எத்தனிக்காமல் கண்களை மட்டும் கங்கையாய் ஓடவிட்டாள்!

அது ஒரு கங்கை! காதல் கொடுத்த கங்கை!

எந்தக் கடலில் கலக்குமோ அந்தக் கடலில் கலக்கட்டும் என்று கண்ணீரை கட்டுப்படுத்தாமல் விட்டுவிட்டாள்!

விடுதலை அழைப்பையும் துண்டித்தான்!

அன்று புஸ்பாவின் இராப்பொழுதை கவலை இரைகொண்டது!

மறுநாள் விடிந்ததும் தெரியாமல் விழித்திருந்தாள்!

காதலின் வலியை நாலு சுவர்களின் நடுவே இருந்து சுவர்களுடன் பகிர்ந்துகொண்டாள்!

அன்றுமுதல் தாதி சேவைக்கு திகதி இல்லாத விடுமுறை கொடுத்தாள். ஆகாரம் எதுவுமில்லாமல் நோன்புவைத்தாள்!

அன்றும் வழமைபோல் தமிழரசி இரா எட்டு மணிக்கு அழைப்பு எடுத்தாள்!


ஒரு நடைப்பிணமாக "ஹலோ அத்தே சொல்லுங்க"

அந்த குரல் ஒலி புஸ்பாவின் வலிகளை தமிழரசியின் காதுகளை காயப்படுத்தியது! புஸ்பாவின் குரல்கேட்டதும் தமிழரசியின் விழிகள் மழைபொழிய ஆரம்பித்தது!

அதையும்விட விடுதலையின் வார்த்தை குத்திக்கிழித்தது!

"ஹலோ" என்ற தமிழரசி தேம்மித்தேம்மி அழுதாள்

"அத்தே ஏன் அத்தே?" என்று வினா தொடுத்தவாறு புஸ்பாவின்



விழியும் மழை வானமானது! சுமார் அரை மணிநேரம் விடாத அடைமழையானது! ஆயிரம்தான் இருந்தாலும் எந்தப்பெண்ணாலும் தாங்கமுடியாத வார்த்தையை விடுதலை தமிழரசியிடம் விபரித்தான்! விபரீதமான வார்த்தை.

ஆமாம்! அவன் நாவில் வந்த நாணயம் இல்லாததும் மிகவும் கேவலமான அந்த வார்த்தை புஸ்பா கொழும்பில் இருந்து வி..ப..ச்..சா..ர..ம். அந்த வார்த்தையை என்னால் உச்சரிக்க நாக்கு இந்தப் பாடுபட்டால் அந்தக் கெட்ட பெயரை தன்பெயருடன் இணைக்கப்பட்டவளின் இதயம் எப்படித் துடிக்கும்? உண்மையில் கெட்ட நடத்தைக்காரிக்கும் கோபம்வரும்! புஸ்பா எனும் புனிதத்திற்கு இப்படியொரு அவப்பெயர் வந்தால் எப்படித்தாங்குவது?

உண்மையில் கிராமப்புறங்களில் இருந்து பெண்கள் கொழும்புக்கோ அல்லது வேறு போனால் தொலைவில் வேலைக்குச் சென்றால் இப்படித்தான் கூறுவார்கள்!

அதையும்விட பெண்கள் தனிமையாய் போனாலும் இதுதான் குற்றச்சாட்டு. அப்படியொரு கீழ்தரமாக வதந்தியை விதைக்கும் மந்தைகளின் மத்தியில் மனிதனாக வாழ்வதில் எனக்கு பெருமை! ஆனால் மந்தை களை மனிதனாக மாற்றமுடியாத கவலை!

இன்றைய மனித சமுதாயம் குரோதம் செய்வதில் மிஞ்சி எந்த பிறவியும் கிடையவே கிடையாது! மெல்ல மெல்ல அழுகையில் இருந்து மீண்ட இருவரும் எதைக்கூறுவது என்று தெரியாமல் தன்நிலை குலைந்து இருக்கையில் புஸ்பாவிற்கு விடுதலை அழைப்பெடுத்தான்!

உடனே புஸ்பா தமிழரசியை அழைப்பில் காத்திருக்கும்படி கூறிவிட்டு விடுதலையின் தொலைபேசி அழைப்பை தொடர்புபடுத்தினாள்!

அதை சந்திப்பு அழைப்பாக மாற்றினாள்.

"அடியேய் ஊர் முழுக்க காதலிப்பதைக்கூறி எண்ட மானத்தை ஏனடீ வாங்கிறே?" என்னு ஆரம்பித்து மூச்சுவிடாமல் பேச்சுவிட்டான். அதுவரை காலமும் வாய்திறக்காத புஸ்பா வாய்திறந்தாள்!

(ஊழல்

மிஹிந்தலை A.பாரிஸ்

வே. அர்ச்சுனன்





# யாழில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை 23

அமெரிக்காவின் இரு தெரிவுகளும் பிழைத்துவிட்டமை அமெரிக்காவிற்கு ஏமாற்றத்தை கொடுத்தாலும் அமெரிக்கா தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்படும் வரை அவர்களது விடயத்தில் கடும் போக்குடனான நிலைப்பாடுகளை கடைப்பிடித்தபோதிலும் சில மென்போக்கான அணுகுமுறைகள் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு வழிக்குக்கொண்டு வருவது தொடர்பில் பல்வேறு பிரயத்தனங்களையும் மேற்கொண்டது.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் தாங்கள் அழிக்கப்படும்வரை அமெரிக்காவினாலோ அல்லது இந்தியாவினாலோ திணிக்கப்பட்ட நிபந்தனைகளையோ அல்லது முன்வைக்கப்பட்ட கோரிக்கை களையோ ஈர்க்கின்ற நிலையில் இருக்கவில்லை. இதற்குப் பிரதான காரணம் தங்களிடம் இராணுவப் பலம் அதீதமாக இருந்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் எண்ணிக் கொண்டதும் எதிர்த்தரப்பான இலங்கை அரசுத் தரப்பின் பலத்தை சிறிய அளவிலாக மதிப்பீடு செய்ததுமாகும்.

இந்த இராணுவ சமநிலை பற்றிய மதிப்பீட்டு நடவடிக்கையை ஒட்டு மொத்தமாக ஊடகங்களும் ஏதோ ஒரு வகையில் தவறவிட்டதையும் இங்கு சுட்டிக்காட்டவேண்டும்.

இருந்தபோதிலும் அமெரிக்கா தனது பென்டகன் மீதான தாக்குதலை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இவர்களது கரும்புலிக் கட்டமைப்பை கலைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தது.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களது கட்டமைப்புக்களில் எதனையுமே கலைப்பதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகள் தமது இயக்கத்தின் வளர்ச்சியினை போரியல் வரலாற்றில் உலக நாடுகளுடன் ஒப்பிடும் அளவுக்கு கட்டமைப்புக்களை புதிதுபுதிதாக உருவாக்கி வலுப்படுத்த தொடங்கினர். ஆரம்ப கட்டத்தில் கொரில்லாத் தாக்குதலாகவும் அதிரடித் தாக்குதலாகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் பின்னாளில் தற்கொலைப் படையணியை உருவாக்கிக்கொண்டார். இதன் காரணமாக சர்வதேச நாடுகளின் கண்டனங்களுக் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆளானார்.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் அமெரிக்க அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நடைபெற்ற போரை முடிவுக்கு கொண்டுவர முயற்சிகள் எடுத்தது. இதில் 52 நாடுகளும், 22 அரச, அரச சார்பற்ற அமைப்புக்களும் பங்கேற்றிருந்தது மட்டுமன்றி ஏழு கட்டப் பேச்சுவார்த்தைகளையும் நடத்தியிருந்தன.

நோர்வே அரசாங்கத்தின் தலையீட்டோடு தமிமீழ விடுதலைப் புலிகளுக்கான ஆயுதங்கள், தளபாடங்கள், ஒலிபெருக்கிச் சாதனங்கள், நிலத்துக்கு அடியில் வைத்து இயக்கும் சட்டலைட் கருவிகள் (சட்டலைட் போன்கள்) என்பன மறைமுகமாக வழங்கப்பட்டன.

அமெரிக்காவின் கூற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனை விட்டு வைப்பதனால் தனது நாட்டிற்கும் சர்வதேசத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அச்சுறுத்தலாக இருப்பார்கள் என அமெரிக்கா மட்டுமன்றி அனைத்து நாடுகளும் எண்ணின.

இதற்கு சம்மதம் தெரிவிக்காத பிரபாகரனை எப்படி பேச்சுவார்த்தை மேசைக்கு அழைப்பது என நோர்வேயுடன் கலந்தாலோசித்து இடைக்கால நிர்வாகம் தொடர்பில் உடன்படச் செய்தது. இதனூடாக தனது புலனாய்வு நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் ஊடறுக்கச் செய்து வெற்றி காணலாம் என அமெரிக்கா எண்ணியது.

தமிழீழ விடுதலைப் புலிகள் கரும்புலித் தாக்குதல்களை நடத்துவது போல் இலங்கை அரசாங்கத்தின் இராணுவ புலனாய்வை வைத்து அமெரிக்கா ஆழஊடுருவும் படையணியைப் பயன்படுத்தி ஆங்காங்கே தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகளை இலக்கு வைத்து கொலை செய்ய ஆரம்பித்தது.

இதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானப் படைக்கு பொறுப்பாக இருந்த லெப்ரினன்ட் கேணல் சங்கர் புதுக்குடியிருப்பு வைத்து கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதற்குப் பிறகு படிப்படியாக கேணல் கடாபி, கேணல் மகிந்தி, பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் போன்றோரை ஒன்றன்பின் ஒன்றாக கொலை செய்ய ஆரம்பித்தது.

இக்காலத்தில் வன்னிப் பிரதேசத்தில் பிச்சை எடுத்துக்கொண்டிருந்த பிச்சைக்காரர்களை எல்லாம் கைது செய்து ஒரு முகாமுக்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் அடைத்து வைத்திருந்தனர். ஏனெனில் இவர் களூடாக தகவல்கள் கசிந்துவிடக் கூடாது என்பதற்காக. ஆழஊடுருவும் படையணினருக்கு தகவல் வழங்கியதாக 29 பொதுமக்களை இங்கொன்றும் அங்கொன்றுமாக வைத்து சுட்டுக்கொன்றனர்.

இதனால் ஆழஊடுருவும் படையணி யின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம் என விடுதலைப் புலிகள் நினைத்து இருந்தனர். ஆனால் அது சாத்தியமற்ற தாகியது. அரசதரப்பு தொடர்ந்து முக்கியமானவர்களை கொலை செய்துவர அடுத்தகட்ட நடவடிக்கை களை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளால் திட்டங்கள் தீட்டப்பட்டன. ஆனாலும் பிரபாகரனின் திட்டங்கள் அனைத்தும் விடுதலைப் புலிகள் அமைப்பில் உள்ள பலரினாலும் சுட்டிக்காட்டப்பட்டன.

ஒரு கட்டத்தில் பிரபாகரன் உரையாற்றும்போது, விடுதலைப் புலிகளின் கரும்புலிக் கட்டமைப்பே எனது உயிர்மூச்சு என்று கூறினார். இவர்களை வைத்து தாக்குதலை நடத்திவந்தார். இதனால் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் பகைமை வலுத்தது.

இவ்வாறு பேச்சுவார்த்தைகள் இடம் பெற்ற காலப் பகுதியில் இடைக்கால கட்டமைப்பு உருவாக்கத்திற்கு தாங்கள் ஒத்துழைப்பதாகவும் பொறுத்தவரை உறுதுணையாக இருப்பதாகவும் ஆனால் எமது கட்டுப்பாட்டிற்கும் கோரிக்கைகளுக்கும் செவிசாய்த்து கரும்புலிக் கட்டமைப்பு முழுமையாக கலைப்பதைவிடக் கடற்புலிகளின் நடமாட்டங்களை ஒரு குறுகிய எல்லைக்குள் வரையறுத்து






செயற்படவேண்டும் என்ற கோரிக்கைகள் அமெரிக்காவால் நோர்வேயூடாக தமிழீழ விடுதலைப் புலிகளிடம் திணிக்கப்பட்டது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இவ் நிபந்தனைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் கட்டுப்பட மறுத்ததுடன் நாங்கள் எங்களது போராட்டத்தை உறுதியாக முன்னெடுப்போமே தவிர யாருக்கும் அடிபணியமாட்டோம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்.

பேச்சுவார்த்தை என்ற இடைக்கால நிர்வாக சபை எனும் வலையமைப்பு க்குள் சிக்கிக்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அழிவுகள் அல்லது முள்ளிவாய்க்கால் முடிவுகள் எந்த வகையில் அடுத்தகட்டமாக காத்திருந்தது என்பதனை தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

# உலகத் துயரமாகும் பட்டினிச் சாவு

தொகுப்பு - வேணு கிருஸ்ணா



இந்தியக் குழந்தைகள் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ள அவலக் காட்சி

“சோமாலியாவில் பஞ்சத்தால் பல்லாயிரம் மக்கள் பலி.”

“உணவுப்பொருட்களின் விலையேற்றம்.”

“பங்குச்சந்தையில் குறியீட்டுச் சுட்டெண் அதிகரித்துள்ளது.”

மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களுக்கும் இடையில் தொடர்பிருப்பதாக, யாராவது உணர்ந்துள்ளனரா? படித்தவர்களைக் கேட்டால், பல்வேறு காரணங்களை சொல்லி மறைக்கப்பார்ப்பார்கள். அவர்களிடமிருந்து இவ்வாறான பதில்கள்வரும்.

“சோமாலியாவில் பட்டினிச் சா வு களுக்கு காரணம், அங்கு நில கடும் வரட்சி.”

“உணவுப் பொருட்களின் ல யேற்றத்திற்கு காரணம், அதற் ன கேள்வி அதிகரித்துள்ளது. உ கத்தில் அனைத்து மக்களுக்கும் போத மான உணவு கையிருப்பில் இல்லை.”

“பங்குச்சந்தை சுட்டெண் ஏற்றத்திற்கு காரணம், நெருக்கடியில் இருந்து மீண்ட, முதலாளித்துவத்தின் சாதனை.”

அண்மையில், நெதர்லாந்து நாட்டில், Zembla எனும் தொலைக்காட்சி நிகழ்ச்சியை தயாரிப்பவர்கள் ஆய்வுசெய்ததில், பல திடுக்கிடும் உண்மைகள் வெளியாகின. (HANDEL IN HONGER - 23 DECEMBER, 2011) பங்குச்சந்தையில் உணவுப் பொருட்களின் விலையை செயற்கையா க ஏற்றி வைக்கும், வணிகச் சூதாடிகளால்தான் இத்தனை பிரச்சினைகள் சோமாலியாவில், அல்லது இன்னொரு ஆபிரிக்க நாட்டில், மக்கள் பட்டினியால் இறப்பதைப் பற்றி அவர்களுக்கு கவலை இல்லை. இன்னும் சொல்லப்போனால், பட்டினிச் சாவுகளுக்கு அவர்களும் முக்கிய காரணம். ஒரு பக்கம் மக்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறார்கள் இன்னொரு பக்கம், பங்குச்சந்தை ...ல கோடி கோடியாக பணம் புரள்கின்றது.

உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம், முதலீட்டாளர்கள் குறிப்பிட்டளவு பணத்தை முன்கூட்டியே கொடுத்துவிடுவார்கள். முதலீட்டாளர் கேட்கும் அளவு பண்டத்தை வழங்குவது விவசாயிகளின் பொறுப்பு. கேள்வியே பண்டத்தின் விலையை நிர்ணயம் செய்கின்றது, என்ற மரபுவழி முதலாளித்துவ தத்துவம் இந்த இடத்தில் சரிப்பட்டு வரலாம்.

ஆனால், தற்பொழுதுள்ள நிலைமை வேறு. முதலீட்டாளருக்கும், விவசாயிக்கும் இடையில், ஊக அடிப்படையில் விலையை தீர்மானிக்கும் இடைத்தரகர்கள் நுழைந்துவிட்டனர். இவர்கள், விவசாயியையோ, அல்லது உணவுப் பண்டத்தையோ கண்ணால் காண்பதில்லை. பெருநகரம் ஒன்றில், அலுவலகத்தில் சொகுசாக உட்கார்ந்துகொண்டே, கணனித் திரையில் விரும்பியவாறு விலையைத் தீர்மானிக்கின்றனர். 2004ஆம் ஆண்டுவரையில், வீட்டுமனை போன்ற துறைகளில் இவர்களின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. அமெரிக்காவில் வீட்டுக்கடன் பிரச்சினையால், நிதி நெருக்கடி ஏற்பட்டதால், அதனை பாதுகாப்பற்ற முதலீடாக கருதுகின்றனர்.

உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் எல்லாம், உலகச் சந்தையில் விற்கப்படவேண்டும் என்பது, முதலாளித்துவம் வகுத்த விதியாகும். அரிசி, கோதுமை என்ன விலைக்கு ஏற்றுமதிசெய்யப்பட வேண்டும் என்று, சம்பந்தப்பட்ட நாட்டு அரசுகூட தீர்மானிக்க முடியாது. சிக்காக்கோ, நியூயோர்க்கில் உள்ள சர்வதேச பங்குச்சந்தையில், ஏலத்திற்கு விடவேண்டும். அங்கு வரும் வர்த்தகர்கள் என்ன விலையை கேட்கிறார்களோ, அந்த விலைக்குத்தான் இன்னொரு நாட்டிற்கு விற்கவேண்டும்.

உதாரணத்திற்கு, அதிகளவு தானியம் ஏற்றுமதி செய்யும் உக்ரேன் நாட்டில், பனிப்பொழிவு காரணமாக பயிர்கள் நாசமாகின்றன என்று வைத்துக்கொள்வோம். இதனால், உலகச் சந்தையில் குறிப்பிட்ட தானியத்திற்கு தட்டுப்பாடுவரும் என்ற எதிர்பார்ப்பில், கணினித் திரையில் தானியத்தின் விலையை கூட்டிவிடுவார்கள்.

இது ஒரு சூதாட்டம். ஆமாம், வெறும் ஊகத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு விலையை தீர்மானிப்பதற்குப் பெயர் சூதாட்டம்தான். அதனால் இவர்களை பங்குச்சந்தை சூதாடிகள் என்றும் அழைக்கலாம்.

சிக்காக்கோ பங்குச் சந்தையில் உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பானது, அவற்றை சர்வதேச சந்தையில் வாங்கும் அனைத்து நாடுகளிலும் எதிரொலிக்கின்றது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளே, இதனால் பெருமளவு பாதிக்கப்படுகின்றன. வளர்ச்சி அடைந்த நாடுகளின் மக்களும், வறிய நாடுகளின் மத்தியதர வர்க்கமும், தமது வாங்கும் சக்தி குறைவதை உணர்கின்றனர்.

ஆனால், ஏழைகள்தான் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். வறிய குடும்பத்து பிள்ளைகள், அரைப்பட்டினியுடன் பாடசாலைக்கு செல்லவேண்டிய நிலைமை. நிலையான அரசு இல்லாத சோமாலியா போன்ற நாடுகளில், வரட்சியும் சேர்ந்து கொள்ளவே, நிலைமை மோசமடைகின்றது. வரட்சிப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு தேவைப்படும் உணவை விற்பதற்கு வியாபாரிகள் தயாராகத்தானிருக்கின்றனர். ஆனால், அவர்கள் கேட்கும் விலையை கொடுத்துவாங்குவதற்கு மக்களிடம் பணம் இல்லாவிட்டால், என்ன செய்யமுடியும்? பட்டினி கிடந்தது சாகத்தான் முடியும்.

2006ஆம் ஆண்டு முதல், உலக சந்தையில் உணவுப் பொருட்களின் விலைகள் பல மடங்கு உயர்ந்துள்ளன. ஒரு வருடத்திற்குள், கோதுமையின் விலை 80 வீதம் உயர்ந்தது. அரிசி 320 வீதம் உயர்ந்தது! அதே காலகட்டத்தில், 30 நாடுகளில் 200 மில்லியன் மக்கள் போஷாக்கின்மையால், அல்லது பட்டினியால் வாடினார்கள். உணவுப் பொருட்களின் விலையை தீர்மானிக்கும் சூதாடிகளுடன், மேற்கத்திய நாடுகளின் ஓய்வூதிய நிறுவனங்களும், வங்கிகளும் கூட்டுச் சேர்ந்துள்ளன. இந்த நிறுவனங்கள், தமது பங்குதாரருக்கு கொடுக்கவேண்டிய ஈவுத் தொகையை அதிகப்படுத்துவதற்காக, உணவுப்பொருள் வணிகத்தில் முதலிடுகின்றன. ஒரு நிறுவனம் இலாபத்தை எதிர்பார்ப்பதும், பங்குதாரருக்கு இலாபத்தில் பங்கு கொடுப்பதும், முதலாளித்துவ தர்மப்படி நியாயமானவை.

ஆனால், அதற்காக இலட்சக்கணக்கான பொதுமக்களின் உயிர்களுடன் விளையாடுவது அநியாயமானது. இதிலே ஓய்வூதிய நிறுவனங்களின் பங்கு சர்ச்சைக்குரியது. ஏனெனில், பணக்கார நாடுகளைச் சேர்ந்த மக்களின் வயோதிப கால சுகவாழ்வை உறுதிப்படுத்துவதற்காக, வறிய நாடுகளைச் சேர்ந்த மக்களை பஞ்சத்திற்கு பலி கொடுக்கிறார்கள்.

Zembla தயாரிப்பாளர்கள், நெதர்லாந்தைச் சேர்ந்த நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றனர். மிகப்பெரிய ஓய்வூதிய காப்புறுதி நிறுவனமான Zorg en Welzijn, 700 மில்லியன் யூரோ உணவுப்பொருள் வர்த்தகத்தில் முதலிட்டுள்ளது. அதனோடு போட்டி போட்டுக்கொண்டு, அரசாங்க ஊழியர்களின் காப்புறுதி நிறுவனமான ABP, 500 மில்லியன் யூரோ முதலிட்டுள்ளது. ஐ.நா. சபையில் பணியாற்றும் பொருளாதார நிபுணரான Olivier de Schutter . “ஓய்வூதிய நிறுவனங்கள் உணவுப்பொருள் வர்த்தகத்தில் முதலீடுசெய்வதால், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் ஏழை மக்கள் பாதிக்கப்படுவதாக” தெரிவித்தார். ஐரோப்பிய ஒன்றியம், உணவுப்பொருள் வர்த்தகத்தில் சூதாடுவதை தடுக்கும் சட்டம்கொண்டு வருவதற்கு ஆலோசித்தது.

அதேநேரம், புருசெல்ஸ் நகரில் முகாமிட்டுள்ள ஊக வணிகர்களின் நலன்புரி அமைப்பு, அந்த சட்டத்தை வரவிடாது தடுக்கும் முயற்சியில் இறங்கியது. அவர்களைப் பொறுத்தவரையில், “பங்குச் சந்தைக்கும், பட்டினிச்சாவுக்கும் சம்பந்தம் இல்லை!” எங்கேயோ ஒரு ஆபிரிக்க அல்லது ஆசிய நாட்டு மக்கள் சாவதைப் பற்றி அவர்களுக்கு என்ன கவலை? பிணத்தை, பணமாக்கும் மந்திரவித்தை தெரிந்தவர்கள் அல்லவா?

ஒருபுறம், நிரம்பிவழியும் இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகள் இன்னொருபுறமோ, பல கோடி இந்தியக் குழந்தைகள் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ள அவலக்காட்சி.

◆ உலகெங்கிலும் உள்ள ஏழை நாடுகளில் வயதுக்கு ஏற்ற வளர்ச்சியின்றி வாழும் ஐந்து வயதுக்குக் கீழான குழந்தைகளின் எண்ணிக்கை 19.5 கோடி.

இதில் இந்தியாவில் மட்டும் ஏறத்தாழ 6.1 கோடி குழந்தைகள் வயதுக்கு ஏற்ற வளர்ச்சியின்றி உள்ளனர்.

◆ உலகெங்கிலும் உள்ள ஏழை நாடுகளில் உயரத்துக்கு ஏற்ற எடையின்றி வாழும் ஐந்து வயதுக்குக் கீழான குழந்தைகளின் எண்ணிக்கை 7.1 கோடி.

இதில் இந்தியாவில் மட்டும் ஏறத்தாழ 2.5 கோடி குழந்தைகள் உயரத்துக்கு ஏற்ற எடையின்றி உள்ளனர்.

◆ உலகெங்கிலும் உள்ள ஏழை நாடுகளில் வயதுக்கு ஏற்ற எடையின்றி வாழும் ஐந்து வயதுக்குக் கீழான குழந்தைகளின் எண்ணிக்கை 12.9 கோடி.

இதில் இந்தியாவில் மட்டும் ஏறத்தாழ 5.4 கோடி குழந்தைகள் வயதுக்கு ஏற்ற எடையின்றி உள்ளனர்.

ஆபிரிக்கா கண்டத்தைச் சேர்ந்த பல ஏழை நாடுகளைவிட, வல்லரசு இந்தியா பட்டினி இந்தியாவாக இருக்கிறது என்பதைத்தான் இந்தப் புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

ஒருபுறம், நிரம்பிவழியும் இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகள் இன்னொருபுறமோ, பல கோடி இந்தியக் குழந்தைகள் பட்டினிச்சாவை எதிர்கொண்டுள்ள அவலக்காட்சி. ஏழைக் குழந்தைகளின் பட்டினியைப் போக்கப் பயன்படாத இந்த உணவு தானியக் கையிருப்பு யாருக்குப் பயன்படப்போகிறது? அதோ, உணவு தானியங்களை ஏற்றுமதிசெய்து அமெரிக்க டொலரைச் சம்பாதிக்கும் பசியோடு காத்துக் கிடக்கிறார்கள் முதலாளிகள்.

## 2020-இல் இந்தியாவை வல்லரசாக்க கனவு காணமுடியுமா?

அப்துல் கலாம் சென்னை வரும் போதெல்லாம் விரும்பிச் சென்று சாப்பிடும் உணவகம் அன்னலட்சுமி. அங்கு ஒரு சாப்பாட்டின் விலை 750 ரூபா. எளிமையின் சிகரமான கலாம், அன்னலட்சுமியில் உணவருந்திக் கொண்டிருக்க, 2020இல் இந்தியாவை வல்லரசாக்க கனவு காணுங்கள் என அவர் கோரிய இந்தியக் குழந்தைகளோ 2 ரூபா கொடுத்து ரேசன் அரிசி வாங்க இயலாத வறுமையால் பட்டினியில் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

“பருவ மழை பொய்த்து வறட்சி ஏற்பட்டாலும் மக்கள் எவரும் பட்டினி கிடக்கும் நிலை ஏற்பட அனுமதிக்க மாட்டோம்” என முன்பு மன்மோகன் சிங் முழங்கிக் கொண்டிருந்தபோதே, இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் பட்டினிச் சாவுச் செய்திகள் வெளிவரத் தொடங்கியிருந்தன.

மத்தியப் பிரதேச மாநிலத்தில மட்டும் ஜூலை 2008 முதல் ஜனவரி 2009 வரை, சத்தான உணவின்றி உயிரிழந்த குழந்தைகளின் எண்ணிக்கை 676. அங்கு கர்ப்பிணிகளுக்குப் போதிய ஊட்டச்சத்தான உணவு இல்லாததால், ஒவ்வொரு நாலு நிமிடத்திற்கும் ஒரு குழந்தை இறந்தே பிறக்கிறது. தப்பிப் பிழைக்கும் குழந்தைகளில் 14 சதவீதம், தங்களது ஆறு வயதிற்குள் மடிந்துபோகின்றன. ஊட்டச்சத்தின்மையால் வாடும் குழந்தைகளின் சதவீதம் 45இல் இருந்து 60ஆக இப்போது உயர்ந்துள்ளது.

அம்மாநிலத்தில் கிராமங்களைப் பெயர் சொல்லி அழைக்கும் வழக்கொழிந்து, பசியின் கொடுமையால் அண்மையில் இறந்துபோன குழந்தைகளின் எண்ணிக்கையைக் கொண்டு அழைக்கும் வழக்கம் உருவாகி உள்ளது. அவற்றை ‘ஆறு பிள்ளைகளின் கிராமம்’ என்றும் ‘பத்து பிள்ளைகளின் கிராமம்’ என்றும் அழைப்பதைக் கேட்கவே கொடுமையாக உள்ளது. அந்தக் கிராமங்களில் உள்ள குழந்தைகள், உப்பிய வயிறோடும் வதங்கிய கை-கால்களோடும் பிதுங்கிய விழிகளோடும் அவை மனிதக் குழந்தைகள்தானா என்று சந்தேகம் எழும் அளவு பட்டினியால் ஒடுங்கிப் போய்க்காணப்படுகின்றன.

‘உணவுக்கான உரிமை’ என்ற பிரசார குழுவைச் சேர்ந்த சச்சின் ஜெயின், “இனம், மொழி, நிற பேதமின்றி அனைத்து தேசங்களிலும், குழந்தைகளுக்கு உணவளிப்பதைத்தான் தமது முதல் கடமையாகப் பெற்றோர்கள் கருதுகின்றனர். இங்கே குழந்தைகள் பஞ்சத்தில் மடிகிறார்கள் எனில், அதுதான் பஞ்சத்தின் உச்சம். இங்கு ஒட்டுமொத்த சமூகமே உணவின்றி வாடுகிறது என்று பொருள்” என்கிறார்.

மத்தியப் பிரதேசத்தில் மட்டுமல்ல, நாடுமுழுவதும் பட்டினிச் சாவுகள் நடந்தவண்ணம் உள்ளன. உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுவிட்டோம். கிடங்குகளில் உள்ள தானிய மூட்டைகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கினால் நிலவுக்கேகூட போய்வரலாம் என இந்திய பொருளாதார மேதைகள் தம்பட்டம் அடித்துக்கொண்டிருக்கும்போதே, திசைகள் எங்கும் பட்டினிக் கொடுமை நீக்கமற நிறைந்திருக்கிறது. நெல்லின் பிறப்பிடமான ஒரிசாதான் இந்தியாவிலேயே பட்டினிக் கொடுமையில் முதலிடத்தைப் பிடித்திருக்கிறது. இந்தியாவிலேயே அதிகபட்ச இறப்பு விகிதம் உள்ள மாவட்டம் ஒரிசாவின் காலகந்தி ஆகும் (ஒவ்வொரு ஆயிரம் பேருக்கும் 140 பேர் செத்துப் போகிறார்கள்).

காலகந்திக்கு அருகிலே உள்ள காசிப்பூர் பகுதியில் விவசாயம் பொய்த்துப் போனதால், உணவுக்கு வழியின்றி மக்கள் அல்லாடுகின்றனர். நிலச் சீர்திருத்தத்தை முறையாகச் செய்த ஒரே மாநிலம் என சி.பி.எம். கட்சியினர் பெருமையுடன் பீற்றிக்கொள்ளும் மேற்கு வங்கத்தின், மேற்கு மித்னாபூரில் உள்ள அம்லாசோல் கிராமத்தில் கடந்த 2004ஆம் ஆண்டிலிருந்தே பட்டினிச் சாவுகள் நிகழ்ந்துவருகின்றன.

இம்மூன்று மாநிலங்களில் மட்டுமல்லாது இன்னும் பிற மாநிலங்களிலும் விவசாயக் கூலிகளும் அவர்களது குழந்தைகளும் பட்டினியால் மரணமடைந்துவருகின்றனர். விஷம்போல ஏறும் விலைவாசி அவர்களது மரணத்தைத் துரிதப்படுத்திவருகிறது. இந்தியாவை ஒரு வல்லரசாக மாற்றி வருவதாக ஆளும் வர்க்கம் கூறிவருகிறது.

ஆனால் உண்மையில் “மக்களின் வாழ்கைத்தரத்திலும், சுகாதாரத்திலும், குழந்தைகளுக்கான ஊட்டச்சத்திலும் இந்தியா பஞ்சத்தில் அடிபட்ட ஆபிரிக்காவின் சஹாராப் பாலைவனப் பிரதேசங்களைப் போன்று நலிவுற்று உள்ளது” என நோபல் பரிசு பெற்ற பொருளாதாரப் பேராசிரியர் அமர்த்யா சென் கூறியுள்ளார். இதுதான் வல்லரசுக் கனவுகளோடு நோஞ்சான் தலைமுறையை அடைகாக்கும் இந்தியாவின் நிலைமை. வயிற்றை நிரப்ப உணவின்றிப் பச்சிளங்குழந்தைகள் ஒவ்வொரு நொடியும் செத்துக்கொண்டிருக்கும் போது நாட்டை வல்லரசாக்குவதையும், சந்திரனுக்கு மனிதனை அனுப்புவதையும் பற்றி மேதாவிகள் அளந்துகொண்டு இருக்கின்றனர். நாவு கூழுக்கு அழுகிறதாம்! பூவுக்கு அழுகிறதாம் கொண்டை!



# மாவையின் அகிம்சைப் போர் வெடிக்குமா?

**வே. அர்ச்சுணன்**

> **நாங்கள் பாண்டவர்களைப் போன்றவர்கள். எங்களால் வெற்றிபெற முடியும். அறம் பிழைப்போரே கஷ்ரங்களை அனுபவிப்பார்கள். தமிழ் மக்களாகிய நாங்கள் யாரும் தூங்கிவிடக் கூடாது. எமது இலக்கை நோக்கி நகரவேண்டியது அவசியமாகும். சில நாட்களுக்கு முன்னர் ஒரு நாட்டின் தூதுவர் என்னோடு தனியாகப் பேசினார். உள்நாட்டு பிரச்சினைகளில் உங்கள் தலையீடுகள் இருப்பதை இலங்கை அரசு விரும்பவில்லை என எனக்கு கூறினார். இன்று எமக்கு போடப்படும் மாலைகளும் பொன்னாடைகளும் எம்மை மேலும் போராடவேண்டும் என்றே தூண்டுகின்றன. போராடுவதற்கான தூண்டுதலாகவே அவை அமைகின்றது. எமது சிறுபிள்ளைகள் மீண்டும் ஆயதப் போராட்டத்திற்கு செல்லும் நிலைமைக்கு செல்லவிடாது, நாம் இந்தப் போராட்டத்தை நடத்தி அவர்களை நல்ல முறையில் வாழ வழி செய்யவேண்டியது அவசியமாகும்.**

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா புதுவருடத்துடன் அகிம்சைப் போர் வெடிக்கும் என்று குறிப்பிட்டிருந்தார். இவ் அகிம்சைப்போர் எங்கு வெடிக்கும்?, எப்படி வெடிக்கும் என்ற விடயங்களை அவர் வெளிப்படுத்தாதபோதிலும் தற்போது அவர்களது கட்சிக்குள்ளேயே குறிப்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்குள் அகிம்சைப் போர் மட்டுமல்ல, வன்முறைப் போர்களும் வெடிப்பதற்கு வாய்ப்புக்கள் வலுவாகத் தோன்றத் தொடங்கியுள்ளது.

அதாவது, தமிழ் தேசிய கூட்டமைப்பின் குறிப்பாக தமிழரசுக் கட்சியின் தலைவர் தற்போதைய ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்தி ஆளும் கட்சியிடமும் எதிரணிக் கூட்டுக் குழுவிடமும் பெருந் தொகையான நிதிகளை பணமாகவும் வேறு சொத்துக்களாகவும் வாங்கிக் கொண்டதாகவும் இவற்றைப் பங்கீடு செய்வதில் பெரும் பிணக்குகளும் பிரச்சினைகளும் உருவாகத் தொடங்கி உள்ளதாகவும் இவை மாவையின் அகிம்சைப் போருக்கு முன்னர் சில வேளைகளில் பெரும் போராக வெடித்து விடுமோ என்ற அச்சமும் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஏற்பட்டு இருக்கின்றது என்பதை அறியமுடிகின்றது.

அதாவது இந்தப் பணப்பரிமாற்றங்கள் தொடர்பில் புளொட் இயக்கத் தலைவர் சித்தார்த்தனும், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் தமிழரசுக் கட்சியினர்மீது சீறிப்பாய்ந்து பெரும் போர்க்கொடி தூக்கியுள்ளதாக அறிய முடிகின்றது. எதுஎப்படியோ எந்த சவால் களையும் சமாளித்துக் கொண்டு

அடுத்தகட்டம் தொடர்பில் முடிவெடுப்போம் என்று மாவை சேனாதிராஜா இறுமாப்புடன் தனது கட்சித் தொண்டர்களிடம் கூறியதாகவும் ஒரு தகவல் உண்டு.

ஆனால் மாவையர் அடிக்கடி தமிழ் மக்களை அந்தப் போராட்டம் இந்தப் போராட்டம் என்று உசுப்பேத்தி அரசியல் செய்தல் போன்று இம்முறையும் மக்களை ஏமாற்றிவிடுவாரோ என்ற கேள்வி பலரிடம் இருக்கின்றபோதிலும் மாவையர் தனது அகிம்சைப்போரை நடத்தாவிட்டாலும் அவரின் தொண்டர்கள் அவரை விடுவதாக இல்லை என்று கூறப்படுகிறது. அதாவது நீங்கள் இந்தப் போராட்டத்தை நடத்தா விட்டால் உங்களுடன் நாங்கள் நிற்பது எங்களுக்கு மரியாதை இல்லை.

எனவே இவ் அகிம்சைப் போரை கட்டாயம் நடத்துங்கள் என்று அவரின் தொண்டர்கள் மாவையை சீண்டத்தொடங்கி உள்ளதாகவும் தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன. ஆனால் மாவையரோ ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பெப்ரவரியில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தையும் அவதானித்தே அகிம்சைப் போரைத் தொடங்கவேண்டும் எனக் கட்சித் தொண்டர்களை சமாளித்துவருவதாகவும் கூறப்படுகின்றது.

ஆனால் தமிழர்களை தூங்கிவிடக் கூடாது இலக்கைநோக்கி நகரும்வரை ஓயக்கூடாது என மா.வை முழங்கியதையும் இந்தவேளையில் மேலோட்டமாக பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

அதாவது தமிழ் மக்களாகிய நாங்கள் தூங்கிவிடக் கூடாது எமது இலக்கை நோக்கி நகரவேண்டியது அவசியமாகும். நாங்கள் பாண்டவர்களைப் போன்றவர்கள். எங்களால் வெற்றி பெறமுடியும் என்றும் புலிகளின் இயக்கம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் எமது பிரதேசங்களில் எந்த ஒரு வெற்றியினையும் பெறமுடியாமல் போனது என்றும் இலங்கையின் தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜா தெரிவு செய்யப்பட்டமையைப் பாராட்டி காங்கேசன் துறை தமிழரசுக் கட்சி அலுவலகத்தால் வழங்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றியபோது. அவர் நாங்கள் பாண்டவர்களைப் போன்றவர்கள் எங்களால் வெற்றி பெற முடியும் அறம் பிழைப்போரே கஷ்ரங் களை அனுபவிப்பார்கள். தமிழ் மக்களாகிய நாங்கள் யாரும் தூங்கி விடக்கூடாது. எமது இலக்கைநோக்கி நகரவேண்டியது அவசியமாகும். சில நாட்களுக்கு முன்னர் ஒரு நாட்டின் தூதுவர் என்னோடு தனியாகப் பேசினார்.

உள்நாட்டு பிரச்சினைகளில் உங்கள் தலையீடுகள் இருப்பதை இலங்கை அரசு விரும்பவில்லை என எனக்கு கூறினார். இன்று எமக்கு போடப்படும் மாலைகளும் பொன்னாடைகளும் எம்மை மேலும் போராடவேண்டும் என்றே தூண்டுகின்றன. போராடுவதற்கான தூண்டுதலாகவே அவை அமைகின்றது.

எமது சிறு பிள்ளைகள் மீண்டும் ஆயுதப் போராட்டத்திற்கு செல்லும் நிலைமைக்கு செல்லவிடாது. நாம் இந்தப் போராட்டத்தை நடத்தி அவர்களை நல்ல முறையில் வாழ வழி செய்யவேண்டியது அவசியமாகும். எமக்கு கிடைக்கப்போகும் தமிழீழம் எமது மண்ணில்தான் கிடைக்கவேண்டும். இதனைவிடுத்து எங்கள் மொழியை இழந்து மண்ணை இழந்து வேறு எங்கும் செல்லமுடியாது. எமது மண்ணை இராணுவம் ஆளுகின்றது. இராணுவத்தி னரின் உல்லாச வாழ்க்கைக்காக இதனை நாம் அங்கிகரிக்கமுடியாது. இதனைத் தடுக்கவேண்டியது எமது கடமையாகும்.

நாங்கள் தோற்றுப்போனவர்கள் அல்ல; இன்று நாங்கள் அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபடவேண்டும். அகிம்சைப் போராட்டம் எப்போதும் தோற்றுப் போனதில்லை என மாவை சேனாதிராஜா முழங்கியபோதிலும் இன்று சில வேளைகளில் தனது முழக்கத்தை மறந்து தற்போதைய பணப் பங்கீடு தொடர்பான சிக்கல்களை எப்படித் தீர்ப்பது என்பது தொடர்பில் குழம்பிப் போயுள்ளாரோ தெரியாது.

ஆனால் மா.வையரின் அகிம்சைப் போரை மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அது நடக்குமோ நடக்காதோ என்று சிலவேளைகளில் மாவையும் இந்தியாவின் திரைப்பட இயக்குனரும் நடிகருமான நடிகர் வடிவேலுவின் பாணியில் வரும். ஆனால் வராது போன்று நானும் அகிம்சைப் போரில் குதிப்பேன் அல்லது குதிக்க மாட்டேன் என்று எண்ணுகிறாரோ தெரியவில்லை.

-ஜனதா-



# ஒளி பிறந்தது; வழி பிறக்குமா?

தற்பொழுது புதிய ஆண்டொன்று மலர்ந்துள்ளது. எல்லோர் முகங்களிலும் ஒரு புத்துணர்ச்சி, புதுப்பொலிவு, கிறிஸ்து பிறப்பினால் மனிதவாழ்வில் ஒளியும், தை பிறந்தால் நல்வழியும் பிறந்துள்ளது. ஆதலால் நாம் அனை வரும் பழையன களைவோம், புதிய புகுவோம். அதாவது இதுவரையில் எம்மையம் எம்மைச் சூழ்ந்திருந்த தீய சிந்தனைகள், செயல்கள் யாவையும் கைவிட்டு புதியதான, முற்போக்கான சிந்தனைகள் பற்றி சிந்திப்போம். அதன் வழி வாழ்வோம் என்பதாம்.

மார்கழி பிறந்தாலே எல்லோர் இல்லங்களும் புதுப்பொலிவு பெறும். ஒரே குதூகலமும் கொண்டாட்டமும்தான். கிறிஸ்து பிறப்பு, புத்தாண்டு பிறப்பு தைப்பொங்கல் என வரிசையாக பெரு விழாக்களை இன மத வேறுபாடின்றி உலக மக்கள் அனைவரும் கொண்டாடி மகிழ்வர். புத்தாடை அணிந்து, புதுப்பொலிவு பூண்டு, ஆலய தரிசனம் செய்வதும், பரிசுகள் பட்சணங்களை குடும்பத்தவர், உறவினர் நண்பர்கள் என அனைவருக்கும் பரிமாறி ஒருவருக்கொருவர் வாழ்த்துக்கள்கூறி மகிழ்வதும், இவற்றுக்கும் அப்பால் விருந்து கேளிக்கைகள் களியாட்டங்களென கூடி மகிழ்வதுமாக ஒவ்வொரு குடும்பங்களும் அவரவர் வசதிகளுக்கேற்ப இவ் விழாக்களை கொண்டாடி மகிழ்கின்றனர்.


ஆனால், இவையெல்லாம் விழாக் காலங்களில் மட்டும் நாம் புனையும் ஒப்பனைகளா? அல்லது வெளி அடையாளங்களா? ஆண்டில் ஒரு தடவை வந்துபோகும் இவ்விழாக்களை ஒரு மாற்றுதல்வேண்டி நாம் குடும்பங்களுடன் சேர்ந்து கொண்டாடி மகிழத்தான் வேண்டும். ஆனால் மாறுதல் என்பதும், மகிழ்ச்சி என்பதும் ஒரு சில நாட்களோடு மட்டும் மறைந்துவிடக் கூடியவைதானா? சமாதானம், சகவாழ்வு, உறவுகளுடனான உறவாடல்கள் இவையனைத்தும் குறித்த கால வரையறைக்குள் மட்டுப்படுத்தப்பட்டவையா?

விழாக்கள் முடிந்ததும் நாடகம்முடிந்து ஒப்பனைகளைக் கலைத்துவிடுவது போல பலரும் முன்பிருந்த நிலைக்குள், அந்த பழமைக்குள் அந்நியப்பட்டுப் போகிறார்களே! இந்த நிலை ஏன்? மாறுதல், மாற்றம் எல்லாம் இந்த வெளி அடையாளங்களில் இருந்தால்போதும் என எல்லோரும் எண்ணி விடுகிறார் களோ? அல்ல மனமாற்றமே மெய்யான இன்பம். அது என்றும் தொடர வேண்டியது. புத்தாண்டு பிறந்துவிட்டது. புதுப்பொங்கலை அனைவரும் கூடி உண்டு மகிழவிருக்கும் இந்த நன்நாட்களில் இது பற்றி அன்னவரும் சிந்திப்போம்.

இற்றைக்கு 2014ஆம் ஆண்டு காலமாக தலைமுறை தலைமுறையாக கொண்டாடி மகிழும் கிறிஸ்துவின் அந்த எளிமையான பிறப்பு, அவரின் வாழ்வு, அவரின் போதனைகள், மனிதரில் எந்த மாற்றங்களையும் ஏற்படுத்தியதாகக் காணோம். மாறாக சமூகத்துக்கு நல்லன உரைத்தமைக்காக, அதன்படி வாழ்ந்ததற்காகக்கூட இருந்தவர்களாலேயே பணத்துக்காக, நன்றியற்றதனமாக காட்டிக் கொடுத்தான் மனிதன்; கொலைத்தீர்ப்பளிக்கப்பட்டார் யேசு.

(21ஆம் பக்கம் பார்க்க...)




# பசி!

மன்னன் தேனமுதன் சாப்பாட்டுப் பிரியன். அவனுக்கு சிலநாட்களாக எந்த உணவும் பிடிக்கவில்லை! நாக்கில் ருசி தெரியவில்லை. சமையல்காரர்கள் எவ்வளவு முயற்சி எடுத்தும் அவனைத் திருப்திப்படுத்த முடியவில்லை.

ஒருநாள் வெள்ளித்தட்டில் நெய்யில் வறுத்த முந்திரி, தேனில் ஊறவைத்த பேரீச்சை, வெண்ணெய் கலந்த தேன்குழல் இவற்றை வைத்தார் தலைமை சமயல்காரர்.

சிறிது எடுத்து வாயில் போட்ட மன்னர் "என்னய்யா சமைக்கிறீர்கள்? ஒரு ருசியும் தெரியவில்லையே..." என்று தள்ளிவைத்தான்.

மன்னனுக்கு உடலில் ஏதோ கோளாறு இருக்கிறது என்று தெரிந்தாலும் வெளியில் காட்டிக்கொள்ளாமல், "மன்னா, கொஞ்சம் பழச்சாறு சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்டார் தலைமை சமையல்காரர்.

"வேண்டாம்..., வேண்டவே வேண்டாம்.., அந்த வாசனை கிட்டே வந்தாலே குமட்டுகிறது" என்றான் மன்னன்.

குழம்பிப்போன மந்திரிகளும் பரிசாரகர் களும் என்னசெய்வது எனப் புரியாமல் விழித்தனர்.

ஒரு நாள் குலகுரு முனிவரிடம் இந்த விஷயத்தை சொன்னதும், "ஓஹோ, இவ்வளவு தானா... ஒரு வாரம் மன்னர் என் ஆசிரமத்திற்கு வரட்டும்..., சரி செய்துவிடலாம்" என்றார்.

மெதுவாக மன்னரிடம் சொன்னதும் அவனும் சரியென்று ஆசிரமத்திற்குப் போனான்.

"மன்னா, மலைமேல் உள்ள காளி கோயிலுக்கு ஒரு பூஜை செய்ய உள்ளேன். பல்லக்கு இல்லாமல் தாங்கள் நடந்து வந்தால்தான் பலன்" என்றார் முனிவர்.

அதற்கு ஒப்புக்கொண்ட மன்னன் மலை மேல் இருந்த கரடுமுரடான பாதையில் முனிவருடன் ஏறினான். பாதி மலை ஏறியதும் தாகத்தால் தவித்தான். வெறும் வயிற்றோடு பூஜையில் கலந்துகொண்டால்தான் பலன் என்று முனிவர் கூறிவிட்டார்.

பல்லைக் கடித்தபடி பொறுத்துக்கொண்டான். கோயிலில் பூஜையை ஆரம்பித்த முனிவர் அதை நான்கு நாழிகை நடத்தினார். மன்னனுக்கு பசி வயிற்றைக் கிள்ள ஆரம்பித்தது. உடல் வியர்த்தது.

பூஜை முடிந்ததும் தொன்னையில் ஒரு சிறிய கரண்டி வெண்பொங்கலும் ஒரு சிறிய தொன்னையில் பானகமும் தந்தார் முனிவர்.

அதைச் சாப்பிட்ட மன்னன், "ஆஹா, அமிர்தம் என்றால் இதுதான் போலிருக்கிறது." என நினைத்துக்கொண்டான்.

அம்பாள் பிரசாதம் சிறிதளவே எல்லோருக்கும் தரப்பட்டது. சுனையில் கொட்டிய நீரைப் பருகினான் மன்னன். ஆஹா பழச்சாறுகளில் இல்லாத ருசி இந்த வெறும் சுனைநீரில் உள்ளதே என வியந்தான். ஆசிரமத்திற்கு திரும்பியபின் அனைவருக்கும் இலைபோட்டு உணவு பரிமாறப்பட்டது.

நெய், திராட்சை, முந்திரி, சர்க்கரை, கற்கண்டு இவைகளையே உண்ட மன்னன், நாக்குக்கு பசியால் அங்கு பரிமாறப்பட்ட மிக எளிதான உணவு அமிர்தமாகச் சுவைத்தது. இன்னும் கொஞ்சம் கிடைக்காதா என்ற ஏக்கத்துடன் எழுந்தான் கை கழுவ.

அரண்மனைக்குச் சென்று புளியோதரை சர்க்கரைப் பொங்கலை ஒரு கை பார்க்க வேண்டும் என்று தீர்மானித்தான். புறப்படும் போது, முனிவர், "மன்னா..., மாதாமாதம் மலைமேல் நடக்கும் பௌர்ணமி பூஜைக்கு இதுபோல் வந்து கலந்துகொள்ளுங்கள்...., வயிற்றில் உள்ள பிரச்சினை தீரும்..., தங்களுக்கு உணவு ருசிக்கும்" என்றார்.

மன்னனும் தவறாமல் கலந்துகொண்டான். உணவும் ருசித்தது. பரி சாரகர்களும் அமைச்சரும் குருவை வணங்கி, "தவசீலரே, என்ன மாயம் செய்தீர்கள்?" என்று கேட்டனர். "பசி இருந்தால்தான் உணவின் ருசி தெரியும்..., அதைப் புரியவைத்தேன்" என்றார் குரு.



## என்ன நியாயம்?

மகாத்மா காந்தி ஒருமுறை. டில்லியிலிருந்து கொல்கத்தாவிற்கு ரயிலில் பயணம் செய்துகொண்டிருந்தார்.

ரயில் பாட்னா புகைவண்டி நிலையத்தை அடைந்தபோது சில அமைச்சர்கள் அவரை சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

நிலைய அதிகாரி காந்தியிடம் வந்து. "ரயில் புறப்படவேண்டிய நேரம் வந்துவிட்டது. தாங்கள் எப்போது விரும்புகிறீர்களோ அப்போது ரயில் புறப்பட அனுமதிக்கிறேன்..." என்றார். காந்தியடிகள். "இது என்ன நியாயம்? என் விருப்பத்தைக் கேட்பதுபோல் ஒவ்வொருவரிடமும் கேட்பீர்களா? நான் உங்கள் அதிகாரி அல்ல. உங்கள் கடமை சட்டப்படி நடப்பதுதான். ரயில் சரியான நேரத்துக்குக் கிளம்பட்டும். என்றார்.

## என்ன காரணம்?

மறைந்த ஹொலிவூட் இயக்குநர் ரிச்சர்ட் அட்டன்பரோ இயக்கிய படங்களிலேயே மிகவும் பிரபலமானது 'காந்தி' படம்.

அந்தப் படத்தை அவர் தயாரித்துக் கொண்டிருந்த காலத்தில், நமது நாட்டில் பலர், "நம்மை அடிமைப்படுத்திய நாட்டைச் சேர்ந்த ஒருவர் எதற்காக நம் தலைவரைப் பற்றி படம் எடுக்கவேண்டும்?" என்று கொதித்தனர். இந்திய அரசாங்கம் அவருக்குப் பண உதவிசெய்ததையும் எதிர்த்தனர்.

இந்நிலையில் அந்தப் படம் வெளிவந்து அமோக வெற்றிபெற்றது. விருதுகளிலேயே முதன்மையான ஒஸ்கார் விருதுகளில் பல்வேறு பிரிவுகளில் எட்டு விருதுகளையும் வென்றது.

அந்தச் சமயத்தில் ரிச்சர்ட் அட்டன்பரோவைத் தொலைக்காட்சிக்காக பேட்டி கண்டபோது, "எதற்காக 'காந்தி' படம் எடுத்தீர்கள்?" என்று கேட்கப்பட்டது.

அதற்கு அட்டன்பரோ, "எனக்கு அவரை ரொம்பப் பிடிக்கும்" என்று சொல்லிக் கதறி அழுதுவிட்டார்.



## கோதுமையின் முன்னோர்கள்!



மெடிடெரேனிய பகுதியின் காட்டுப்புல் வகைகளில் கோதுமை மற்றும் பார்லியின் முன்னோரும் உண்டு. இவை இரண்டும் மனிதனால் பயிரிடப்பட்ட முதன்மை தாவரங்களை சேர்ந்தவைகளாகும்.

சமையல் சார்ந்த, மருத்துவம் சார்ந்த மணமூட்டக்கூடியவை சார்ந்த தாவரங்கள், இங்கே நீர்ப்படுகைகளில், புதர்களில் தோட்டச்செடிகளில் காணப்படுகிறது.

## விடுகதைகள்

1) நிலையில்லா வெள்ளலைகள் நிலையாக இருக்காது.
2) நோயில்லை, நொழயில்லை தினமும் மெலிகிறான்.
3) வெழத்துச் சிதறி, பையில் புகுந்து, தலையுடல் தாங்குவேன்.
4) அப்பா பணத்தை எண்ணமுழயாது, அம்மா புடவையை மழக்க முழயாது.
5) காட்டுக்குள் கறுப்பழகி கானம் இசைக்கிறாள்.
6) போடாத சட்டையை கழற்றிப் போடுவான்.
7) தண்ணீரில் எறிந்த ஓட்டைப் பாய், திரும்ப எடுத்த ஓட்டைப்பாய்.
8) பச்சைப் பட்டைப் பெட்ழக்குள் வெள்ளைக் குட்ழ முத்துக்கள்.
9) கண்கள் அருகில் அமர்வேன் காட்சிகள் தெளிவாய்த் தெரிய.
10) ஆழ்கடலில் பிறந்த என்னை ஆரணங்கு கழுத்தில் அணிந்தாள்.

### விடைகள்


1)மேகம் 2)தினசரி நாட்காட்ழ 3)இலவம்பஞ்சு 4) வானம், நட்சத்திரம் 5)குயில் 6)பாம்புச்சட்டை 7)மீன்வலை 8) வெண்டைக்காய் 9)மூக்குக் கண்ணாழ 10)முத்து.

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 19.01.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1078**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1076**

த.மரியடெனிச்சன்,
வன்னேரிக்குளம், கிளிநொச்சி.
பரிசுக்குரியவர்: 1076

### பாராட்டுக்குரியவர்கள்

01. கே.சாமினா, நியூஎல்பிட்டிய, கெலிஓயா.
02. எம்.முஹம்மட், பள்ளிவாசல்துறை, கற்பிட்டிய.
03. ச.வந்தனா, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
04. ம.ருக்மணி, மந்துவில், புதுக்குழயிருப்பு.
05. றே.மதுஸன், பிரதான வீதி, நீர்கொழும்பு.
07. ஏ.எச்.றசீம், உடப்பு, புத்தளம்.
08. சிறி குகன், முள்ளியவளை, முல்லைத்தீவு.

## உண்மைத் தொடர்

அதிர் இடி 72

இராணுவ அணி தோற்றால் இராணுவமே தோற்ற மாதிரித் தானே? அந்த எக்ஸ்பிரஸ் குழுவுக்கு என்ன துணிச்சல். நீர் போனை வையும். நான் அவர்களை கவனித்துக் கொள்கிறேன்! என்றவன், உடனடியாக இராணுவ அதிகாரிகளுக்கு உத்தரவுகளைப் பிறப்பித்தான்.

இனி...



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

கலாசார அமைச்சர் ஹென்ரி சியம்பா கூறிய யோசனை அமீனுக்கு பிடித்திருந்தது.

``இராணுவத்தினருக்கும், மக்களுக்கும் இடையே நல்லுறவு கெட்டுவருகிறது. இதனைச் சீர்படுத்தியாகவேண்டும்`` என்றார் சியம்பா.

``சீர்படுத்தலாம். என்ன யோசனை வைத்திருக்கிறீர்?`` அமீன் கேட்டான்.

``இராணுவத்தினருக்கும் சிவிலியன்களுக்கும் இடையே விளையாட்டுப் போட்டிகள் நடத்தலாம்.``

சியம்பாகூற, அமீன் தன் கண்களை சிமிட்டிக்கொண்டு அதுதான் அடிக்கடி விளையாட்டுக் காண்பிக்கிறார்களே!`` என்று நகைத்தவன், ``சும்மா தமாஸ் பண்ணினேன். என்ன விளையாட்டு விளையாடலாம் என்கிறீர்?``

``உதைபந்தாட்டம் என்றார் சியம்பா. நல்ல யோசனை என்று ஆமோதித்த அமீன் இராணுவத்திற்குள் பல உதைபந்தாட்ட அணிகள் இருக்கின்றன. எனவே உமது யோசனையை உடனடியாக அமுல்படுத்தலாம்! என்று அனுமதியும் வழங்கினான்.

உகண்டா மக்கள் உதைபந்தாட்டத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். உகண்டாவில் அடிக்கடி உதைபந்தாட்டப் போட்டிகள் நடப்பதுண்டு.

இராணுவ உதைபந்தாட்ட அணிக்கும் பொதுமக்கள் அணியான எக்ஸ்பிரஸ் அணிக்கும் இடையே முதலாவது போட்டி நடைபெற்றது.

ஏராளமான மக்கள் போட்டிகளைக் கண்டுகளிக்கத் திரண்டு வந்திருந்தனர். உகண்டாவின் உதைபந்தாட்ட அணிகளுக்குள் சிறப்பானது எக்ஸ்பிரஸ் அணி.

போட்டி ஆரம்பமானதில் இருந்தே எக்ஸ்பிரஸ் அணிக்கு ஆதரவாகவே ரசிகர்கள் ஆரவாரம் செய்தனர்.

ஆட்டத்தின் முதல் பாதியில் எக்ஸ்பிரஸ் அணி திறமையாக ஆடி பல கோல்களைப்போட்டது.

போட்டியின் இடைவேளையில் இராணுவ அணியினர் கூடிப் பேசினர். எக்ஸ்பிரஸ் அணிக்காரர்களை உதைபந்தாட்டத்தில் வெல்லமுடியாவிட்டாலும், உதைகொடுத்து வெல்லவேண்டும் என்று முடிவு செய்தனர்.

விளையாட்டின் இரண்டாவது பாதி ஆரம்பமானபோது இராணுவ அணியினர் தாறுமாறாக விளையாட ஆரம்பித்தனர்.

எக்ஸ்பிரஸ் அணியினரை முட்டிமோதினர். நடுவர் தடுத்தபோது அவருக்கும் உதை விழுந்தது.

மைதானத்தில் இராணுவ அணி முறைகேடாக ஆட ஆரம்பித்ததும், அரங்கில் இருந்த மக்கள், இராணுவ அணிக்கு எதிராகக் கூச்சல் போடத் தொடங்கிவிட்டனர்.

ஆட்டத்தைப் பார்வையிட வந்த இராணுவத்தினர் மக்களைத் தாக்க ஆரம்பித்தனர். மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள்.



மைதானத்தில் தம்மைத் தாக்கிய இராணுவ அணியை எக்ஸ்பிரஸ் அணியினர் திரும்பித் தாக்கினார்கள். இதனால் இராணுவ அணியைச் சேர்ந்த பலர் காயமடைந்தனர்.

மக்கள்மீது இராணுவம் நடத்திய தாக்குதலால் பலர் படுகாயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அமீனுக்குத் தகவல் போனது. சியம்பாவே தொலைபேசியில் தகவல் கூறினார்.

இராணுவத்தினர்மீதுதான் தவறு என்று சியம்பா கூறத் தொடங்குமுன்னரே அமீனின் குரல் கோபத்துடன் ஒலித்தது.

இராணுவ அணிதோற்றால் இராணுவமே தோற்ற மாதிரித் தானே? அந்த எக்ஸ்பிரஸ் குழுவுக்கு என்ன துணிச்சல். நீர் போனை வையும். நான் அவர்களை கவனித்துக் கொள்கிறேன்! என்றவன், உடனடியாக இராணுவ அதிகாரிகளுக்கு உத்தரவுகளைப் பிறப்பித்தான்.

அன்றே இரவோடு இரவாக எக்ஸ்பிரஸ் அணியினர் அனைவரும் கைதுசெய்யப்பட்டனர்.

கைது நடந்துகொண்டிருந்தபோதே உகண்டா வானொலி அறிவித்த செய்தியைக் கேட்டு உகண்டா மக்கள் வெறுப்புற்றனர்.

`எக்ஸ்பிரஸ்` உதைபந்தாட்ட அணி சட்டவிரோத அணியாக கருதி தடைசெய்யப்பட்டுள்ளது. விளையாட்டுப் போட்டியில் இராணுவ அணியினரைத் தாக்கி கலவரத்தை தூண்டியுள்ளது. எக்ஸ்பிரஸ் குழு, அந்நிய சக்திகளது தூண்டுதலே இதற்கான காரணம் என்று விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது. `எக்ஸ்பிரஸ்` குழுவினர் நாட்டு நலனை முன்னிட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்படியும் அப்பட்டமாகப் பொய்கூற மலைத்து நின்றனர். `எக்ஸ்பிரஸ்` குழுவில் எந்தவித தவறும் கிடையாது என்பது ஆட்டத்தை நேரில் கண்ட பல்லாயிரம் மக்கள்மூலம் நாடெங்கும் பரவியிருந்தது.

கைதான `எக்ஸ்பிரஸ்` குழு உறுப்பினர்களை விடுதலை செய்யுமாறு கலாசார அமைச்சர் சியம்பா அமீனிடம் வேண்டுகோள் விடுத்தார்.

`சியம்பா! இதனை வேறு யாராவது என்னிடம் கூறியிருந்தால் என்ன செய்திருப்பேன் என்பது எனக்கே தெரியாது. உம்மீதுள்ள மரியாதையால் விடுகிறேன். என்ன செய்யவேண்டும் என்று எனக்கு எவரும் போதிக்கவேண்டியதில்லை புரிந்ததா? என்றான்.

புரிந்தது... என்றார் சியம்பா உள்ளூர நடுக்கத்துடன்.

அத்தோடு நிறுத்தவில்லை. சியம்பா முன்பாகவே பயங்கரமான உத்தரவையும் தொலைபேசியூடாகப் பிறப்பித்தான்!

எக்ஸ்பிரஸ் குழுவில் கைதான அனைவருக்கும் `விசா` கொடுத்து அனுப்பி விடுங்கள்! என்றான்.

விசா கொடுப்பது என்றால், கொலை செய்வது என்று தான் அர்த்தம் என்பது சியம்பாவுக்கும் தெரியும்.

ஆட்களைத் தீர்த்துக் கட்டுமாறு கூறுவதற்கான சங்கேத வார்த்தைகளை அடிக்கடி மாற்றிக் கொள்ளுவான் அமீன்.

`எக்ஸ்பிரஸ்` குழுவுக்கு `விசா` கொடுக்குமாறு கூறிவிட்டு சியம்பா பக்கம் திரும்பிய அமீன் விசித்திரமான உத்தரவொன்றைப் பிறப்பித்தான்.

சியம்பா வாரத்தில் ஒரு தடவையாயினும் உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற ஏற்பாடு செய்யும். ஆனால் ஒரு நிபந்தனை என்ற அமீனை வினாக்குறியோடு ஏறிட்டார் சியம்பா.

**(தொடரும்)**

---

வாசக நெஞ்சங்களே!

உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 607

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | |
| 13 | 14 | 15 | 16 | | 18 |
| 19 | 20 | | 22 | 23 | 24 |
| | 26 | 27 | | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 605 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 றி | 3 வு | 4 க் | 5 கு | 6 த் |
| 7 ச் | 8 ச | 9 இ | 10 ல | 11 ட் | |
| 13 செ | 14 ல் | 15 டி | | 17 ச | 18 பி |
| 19 ழு | 20 ம | | 22 கை | 23 த | 24 ரு |
| 25 த் | | 27 சா | | 29 ணை | 30 வி |
| 31 து | 32 வ | 33 து | 34 த் | 35 ரு | 36 தி |

**இடமிருந்து வலம்**

01. ............ புலவர் நவாலியூரில் பிறந்தார்.
07. ஜீவகாருண்யம்.
13. அருகு; காது. (குழம்பியுள்ளது)
18. மலர்.
19. அறிவு; ஆகாயம்; நீர். (திரும்பியுள்ளது)
22. பொய். (திரும்பியுள்ளது)
26. வேட்டி வகை ஒன்று. (திரும்பியுள்ளது)
29. சூரியன்; பிரபஞ்சம். (திரும்பியுள்ளது)
31. திருமால் திருநாமம்.

**மேலிருந்து கீழ்**

01. சுத்தம் செய்தல் ; புடமிடுகை.
02. இந்தியா அண்மையில் செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பிய செயற்கைக் கோள். (குழம்பியுள்ளது)
03. கிளி.
04. ஒரு பூடு: திருநீற்றுப் பச்சை (குழம்பியுள்ளது)
05. தாம் என்பதன் திரிபு.
18. தாய்லாந்து நாட்டு மன்னன்.
22. மாதங்களில் ஒன்று.
23. மாதா: தாய்வருக்கும். (குழம்பியுள்ளது).
27. இளமை ; பிள்ளை.

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **19.01.2015** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 607
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.


சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 605 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.**

என்.கவிதாயினி, 5ஆம் ஒழுங்கை, அநுராதபுரம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. சி.கிருசாந்தி, வண்ணார் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
02. மு.அபிசன், மாரீசன்கூடல், இளவாலை.
03. பூ. நெவின், விடத்தற்பளை, மன்னார்.
04. க.டின்சியானா, பிரதான வீதி, கேகாலை.
05. கு. ரிசாந்தன், ஜின்னாநகர், திருகோணமலை.
06. பி.லன்சிகா, பூவரசங்குளம், வவுனியா.
07. எச்.எம்.ஏ. அஜ்மல், உடப்பு, புத்தளம்.
08. கே. நிலைக்சினி, பசல்ஸ் லேன், கொழும்பு -06.
09. கு. நந்தினி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.





## இரண்டாவது இன்னிங்ஸ்!

பிரமாண்ட இயக்குனர் ஷங்கர் சமீபத்தில் அளித்த ஒரு பேட்டியில் வரும் பொங்கலுக்கு வெளிவரும் 'ஐ' திரைப்படம் தன்னுடைய இரண்டாவது படம் என்று கூறியுள்ளார். இதுவரை 'ஐ' படத்துடன் சேர்த்து இதுவரை 12 படங்கள் இயக்கியுள்ள ஷங்கர் இந்த படத்தை தனது இரண்டாவது படம் என்றுகூற என்ன காரணம் என்பதையும் அவரே விளக்கியுள்ளார்.

ஜெண்டில்மேன் முதல் சிவாஜிவரை தன்னுடைய திரையுலகம் பர்ஸ்ட் இன்னிங்ஸ் என்றும், எந்திரன் படத்தில் இருந்து தன்னுடைய பாணி முற்றிலும் மாறியுள்ளதால் தற்போது நடந்துவருவது இரண்டாவது இன்னிங்ஸ் என்று கூறிய ஷங்கர், இரண்டாவது இன்னிங்ஸில் 'ஐ' தனது இரண்டாவது படம் என்று கூறியுள்ளார். விஜய் நடித்த நண்பன் திரைப்படம் ரீமேக் என்பதால் அந்த படத்தை தன்னுடைய இரண்டாவது இன்னிங்ஸில் சேர்க்கவில்லை என்றும் அவர் விளக்கமளித்துள்ளார்.

'ஐ' படத்தின் கதை தன்னுடைய மனதில் 15 வருடங்களுக்கு முன்பே தோன்றியது என்றும் ஒவ்வொரு காலகட்டத்திலும் படத்தின் கதையில் சிறுசிறு மாற்றங்கள் ஏற்படுத்தி தற்போது அதற்கு முழு உருவம் கொடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.





## மைசூர் அரண்மனையில் விஜய்

மைசூரின் உள்ள அரண்மனையை அடுத்து சுற்றுலாப்பயணிகளை பெரிதும் கவர்ந்த இடம் லலிதா மஹால் என்ற பிரமாண்ட அரண்மனைதான். இந்த அரண்மனையில் முதன்முதலாக சிவாஜி கணேசன், வாணிஸ்ரீ நடித்த 'வசந்த மாளிகை' திரைப்படத்தின் படப்பிடிப்பு நடைபெற்றது. அதன்பின்னர் பல படங்களின் படப்பிடிப்புகள் இந்த அரண்மனையில் நடைபெற்றது. சமீபத்தில் ரிலீஸான ரஜினியின் 'லிங்கா' படத்திலும் இந்த அரணமனை இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் விஜய் 58 படப்பிடிப்பும் இந்த அரண்மனையில் நடைபெறவுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளது. ஏற்கனவே விஜய் நடித்த வில்லு படத்தில் ஒருசில காட்சிகள் இந்த படத்தில் இடம் பெற்றுள்ளது என்பது அனைவரும் அறிந்ததே.

மன்னர் காலத்து கதையான 'விஜய் 58' திரைப்படத்திற்காக விஜய், ஸ்ருதிஹாசன் சம்பந்தப்பட்ட காட்சிகள் லலிதா மஹாலில் படமாக்க சிம்புதேவன் அனுமதிபெற்றுள்ளார் என்று படக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

### தனுஷுடன் இணைகிறது கத்தி குழு

விஜய் மற்றும் சமந்தா நடித்த 'கத்தி' படத்தில் பணிபுரிந்து மூன்று முக்கிய கலைஞர்கள் மீண்டும் ஒரு படத்தில் சேர்ந்து பணிபுரியவுள்ளனர். அவர்கள் சமந்தா, அனிருத் மற்றும் சதஷ். தனுஷ் நடிப்பில் வெளிவந்த வேலையில்லா பட்டதாரி படத்தை இயக்கிய வேல்ராஜ் இயக்கும் அடுத்த படத்தில்தான் மேற்கண்ட கத்தி படக்குழுவினர் நடிக்கவுள்ளனர். தனுஷ் நடிக்கும் இந்த படத்தில் அவருக்கு ஜோடியாக ஏற்கனவே எமி ஜாக்சன் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கும் நிலையில் சமந்தாவும் ஒரு நாயகியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

இந்நிலையில் காமெடி வேடத்தில் நடிக்க சதீஷை ஒப்பந்தம் செய்துள்ளதாக வேல்ராஜ் தனது டுவிட்டரில் பதிவுசெய்துள்ளார். எதிர்வரும் தீபாவளிக்கு இந்த படம் வெளியாகும் என்று கூறப்படுகிறது.

## கோலி சோடா தந்த பரி

கடந்த 2014ஆம் ஆண்டின் உண்மையான சூப்பர் ஹிட் ப என்றால் அது கோலி சோடா படம் மட்டும்தான். தயாரிப்பு செலவில் இருந்து 14 மடங்கு இலாபம் கொடுத்த ஒரே தமிழ்ப மிகவும் குறைந்த பொருட்செலவில் படத்தின் பெரும்பகுதி கோயம்பேடு மார்க்கெட்டிலேயே எடுக்கப்பட்ட படம் கோலிசே

இந்த படம் குறித்து விஜய் மில்டன் கூறியபோது, நான் ஒளிப்பதிவாளராக இருந்தாலும் எனக்கு இயக்குன ஆகவேண்டும் என்பதே பெரிய ஆசையாக இருந்தது. ஒளிப் செய்துகொண்டே உருவாக்கிய திரைக்கதைதான் கோலிசே


பிரபல நட்சத்திரங்கள் யாரும் இன்றி புதுமுகங்களை வைத்தே வெற்றி பெற்றோம். கோலி சோடா படக்குழுவி மொத்தமே 20 பேர்கள்தான். மிகக்குறுகிய நாட்களில் படப்பிடிப்பை முடித்தோம். எனக்கு கோலி சோடா படத்திற்காக பெரிய அளவில் சம்பளம் கிடைக்காவிட்டா விக்ரம் நடிக்கும் '10 எண்றதுக்குள்ள' பட வாய்ப்பு கோலிசோடாவின் வெற்றியில் வந்ததுதான். அதுதான் கோலிசோடா படத்திற்காக எனக்கு கிடைத்த மிகப்பெரிய சம்பளம் ஆகும்.

நடிப்புக்காக பல ரிஸ்க்குகளை எடுக்கும் விக்ரம் போ பெரிய நடிகர் என் இயக்கத்தில் நடிப்பது எனக்கு கிடைத்த பெரிய வரம். இந்த படத்தின் பெரும்பாலான படப்பிடிப்பு முடிந்துவிட்டது. விரைவில் படத்தை ரிலீஸ் செய்ய முயற்சிசெய்வோம் என்று இயக்குனர் விஜய்மில்டன் கூறியுள்ளார்.



அஞ்சான் படத்தை அடுத்து லி திரைக்கதைகளை தயார்நிலையில் வை கார்த்திக்காக தயார்செய்யப்பட்ட பை இரண்டாம் பாகம். மற்றொன்று தயார்செய்யப்பட்ட சண் இரண்டாம் பாகம். ஆ படத்தை முதலில் எடு என்பது குறித்து லிங் முடிவு செய்யவில்லை கூறப்படுகிறது.

கார்த்தி தற்போது இ இயக்கத்தில் காஷ்மோரா என்ற படத் வருகிறார். ஆனால் விஷால் 'ஆம்பள' முடித்துவிட்டு இருப்பதால் விஷாலின் படத்தைதான் லிங்குசாமி முதலில் இ கூறப்படுகிறது. சண்டக்கோழி 2 படத்த ஜோடியாக சமந்தா நடிப்பார் என எதி



# ரஜினி அள்ளிய கோடிகள்

இந்திய சினிமாக்கள் தற்போது உலக அளவில் வியாபாரம் ஆவதால் மிக எளிதாக ரூ.100 கோடி வசூலை எட்டிவிடுகிறது. ஆனால் இந்திய அளவில் இதுவரை ஐந்து தென்னிந்திய படங்கள் மட்டுமே ரூ.100 கோடி வசூலை தாண்டியுள்ளது என்பது குறித்த தகவல்கள் தற்போது வெளிவந்துள்ளது. அவை சிவாஜி, மகதீரா, எந்திரன், அட்டரிண்டிகி டாரிடி மற்றும் லிங்கா ஆகிய ஐந்து படங்கள் மட்டுமே இந்தியாவில் மட்டும் ரூ.100 கோடியை வசூலித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட ஐந்து படங்களில் மூன்று ரஜினி நடித்தவை என்றும், மற்ற இரண்டில் ஒன்று ராம்சரண் தேஜா மற்றும் பவன் கல்யாண் நடித்த திரைப்படங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. கத்தி, வீரம் போன்ற விஜய் மற்றும் அஜீத் படங்கள் ரூ.100 கோடி கிளப்பில் இணைந்திருந்தாலும், அந்த வசூல் வெளிநாட்டு வசூலையும் சேர்த்து கணக்கிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



## ...த பரிசு

...ப்பர் ஹிட் படம்
...தயாரிப்பு
...ஒரே தமிழ்ப்படம்.
...ரும்பகுதி
...ம் கோலிசோடா.
...யபோது,
...இயக்குன...
...ந்தது. ஒளிப்பதிவு
...ன் கோலிசோடா.
...முகங்களை
... படக்குழுவினர்
...நாட்களில்
...சாடா
...டக்காவிட்டாலும்,
...வாய்ப்பு
...அதுதான்
...மிகப்பெரிய

... விக்ரம் போன்ற
...

## விலகியது ஏன்?

வெங்கட்பிரபு இயக்கத்தில் உருவாகி வரும் ‘மாஸ்’ திரைப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்றுவருகிறது. சூர்யா, நயன்தாரா, ப்ரணிதா, பிரேம்ஜி அமரன் மற்றும் பலர் நடித்துவரும் இந்த படத்தில் முதலில் இரண்டாவது நாயகியாக எமி ஜாக்சன் நடிக்க ஒப்பந்தமாகியிருந்தார். ஆனால் திடீரென அவர் அந்த படத்தில் இருந்து தூக்கப்பட்டு தற்போது அந்த கேரக்டரில் ப்ரணிதா நடித்துவருகிறார்.

மாஸ் படத்தில் இருந்து விலகியது குறித்து கருத்து தெரிவித்துள்ள எமி ஜாக்சன், சூர்யா படத்தில் வாய்ப்பு கிடைத்தபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்ததாகவும், ஆனால் எதிர்பாராத காரணத்தால் அந்த படத்தில் இருந்து விலகும்படி நேர்ந்ததாகவும் கூறினார். ‘ஐ’ போன்ற பெரிய படங்களில் நடித்துவிட்டு அதன்பின்னர் இரண்டாவது ஹீரோயினியாக நடிக்கவேண்டாம் என்ற கருத்தை தனது நண்பர்கள் முன்வைத்ததாகவும், அதன்காரணமாகவே அந்த படத்தில் இருந்து விலகியதாகவும் அவர் கூறியுள்ளார்.



...

...அடுத்து லிங்குசாமி இரண்டு
...லையில் வைத்துள்ளார். ஒன்று
...பப்பட்ட பையா படத்தின்
...ற்றொன்று விஷாலுக்காக
...யப்பட்ட சண்டக்கோழி
... பாகம். ஆனால் இதில் எந்த
...முதலில் எடுக்கப்போகிறார்
...குறித்து லிங்குசாமி இன்னும்
...செய்யவில்லை என்று
...கிறது.
...தற்போது இயக்குனர் கோகுல்
...என்ற படத்தில் நடித்து
... ‘ஆம்பள’ படத்தில் நடித்து
...விஷாலின் சண்டீக்கோழி 2
...முதலில் இயக்குவார் என
...ழி 2 படத்தில் விஷாலுக்கு
...ர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நாடக கலைஞர்களுக்கு அங்கீகாரம்

உலக நாயகன் கமல்ஹாசன் தன்னுடைய குருவாக மதிப்பது இருவரைத்தான். ஒருவர் நாடக உலகின் பிதாமகன் அவ்வை சண்முகம். மற்றொருவர் இயக்குனர் சிகரம் கே.பாலசந்தர்.

இருவருமே நாடக உலகில் பெரும் புகழ் பெற்றவர்கள் என்பதால் அவர்களுடைய பெயரில் ஒரு புதிய அமைப்பு ஒன்றை கமல்ஹாசன் ஆரம்பிக்க உள்ளார். பாலசண்முகம் என்றபெயரில் ஆரம்பமாகவுள்ள இந்த அமைப்பில் தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் உள்ள மேடை நாடக கலைஞர்கள் தேர்வுசெய்யப்பட்டு அவர்களுடைய நாடகத்திற்கு தேவையான ஆலோசனை களும், பொருளாதார உதவிகளும் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளது.

கமல்ஹாசனின் இந்த புதிய முயற்சிக்கு மேடை நாடக நட்சத்திரங்களிடம் இருந்து பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. முதன்முதலாக உலகநாயகன்மூலம் தங்களுக்கு ஒரு அங்கீகாரம் கிடைத்துள்ளதாக நாடக நடிகர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# தேன் கிண்ணம்

## நிலவில் நிலம்



நிலவில் நிலம்
வாங்கி விட்டேன்
என்னவளோடு
குடிபுக - ஆனால்
முதலில் என்னவள்
இதய வீட்டில்
இடம்வேண்டுமே
எப்படி காதலை
அவளிடம் சொல்ல...

J.சிந்து,
வேலணை -02

## இப்படி மழை அடித்தால்...



அப்படி என்னடி சொல்லிவிட்டேன் - உன்
சொற்படி தானே நடந்துகொண்டேன்.
இப்படி என்னை ஏசிவிட்டால் - நானும்
எப்படி உன்னைக் கைப்பிடிப்பேன்.
இப்படி மழை அடித்தால் - நானும்
எப்படி அங்கே வருவேன் - என
கண்டபடி நீயும் உன்
எண்ணப்படி இருந்துவிடாதே - நான்
சொன்னபடி உன் வாசற்படியில் - என்னை
காத்தபடி நீயும் நில்லடி - உன்
வீட்டடி வந்து நானும் - உன்
முன்னாடி நிற்பேனடி - உன்
எண்ணப்படி நீயும் - அப்போது
ஏத்துக்கடி என்னை.

இளம்பிறை யோகன், புத்தளம்

## காதல் பரிணாமம்

அன்று அவர் என்னைக்
காதலித்த நாட்களில்
தன் கரத்தால் என் இடையை
வளைத்து அணைத்து
அன்போடு அழைத்துச் சென்றார்.

திருமணமானதும் என் கையோடு
தன் கையை இணைத்தவாறு
ஆறுதலாக எனை அழைத்துச் சென்றார்.

முதற் குழந்தை பிறந்தபின்
என்னைத் திரும்பித் திரும்பிப்
பார்த்தவாறு எனக்கு முன்னால்
ஐந்தடித் தள்ளி விரைந்தார்.

இரண்டாவது குழந்தை
ஜனித்த பின்னர்
பத்தடி அவர் முன்னால் செல்ல
பின்னால் விரைந்த என்னை
"வாயேன் வெரசா" எனக்கூவி
முகம் சுளித்தார்.

இப்போதெல்லாம்
இரு குழந்தைகளையும்
இழுத்துக்கொண்டு நான்
தள்ளாடித் தள்ளாடிப் பின்னால் ஓட
அவரோ ஐம்பதடிக்கு அப்பால் நின்று
"வாயேண்டி வெரசா" எனக் கத்துகிறார்.

அ.சந்தியாகோ, கண்டி.

## பாலையில் கருகும் பாவையர் நிலை கேளீர்...

உலக வர்த்தக வலயத்தில்
ஏலம் நடக்கிறது; எங்கள்
மாதர் திலகங்களை விலைபேசி விற்கும்
ஏற்றுமதிச்சரக்காய் சோரம் போகிறது
மத்திய கிழக்கிற்கு ஹவுஸ் மாடுகளாக...

அப்பாவிப் பெண்களிடம்
ஆசைகாட்டி, மோசம் செய்யும்
ஐயறிவுத் தரகர்களின்
கையாலாகாத் திருகுதாளத்தில்
கட்டுண்டு... மதிமயங்கி...
தலைநகர் கொழும்பில்
தஞ்சம் அடைகிறார்கள்...
தாய் முதலைகளிடம் தன்னை
தாரை வார்ப்பதற்காக.
பாவம். ஒன்றும் அறியாப் பரதேசிகள்
வாடகை வீட்டிற்குள்...
வழுக்கி விழுந்து.
ஊடல் நாடகம் உஷாராக
காமவேட்கைக்கு களம்தந்து
பயிற்சிபெற்று 'சேசிபிகேற்' …த்ததும்
ஏயாபோட்டிற்கு இழுத்துச் …கிறார்கள்;
குர்பான் கொடுக்கும் ஹவுஸ் மாடுகளாக....

பொந்துக்குள் வாழ்ந்தவர்கள்
புதிய இடம் காண
அந்தரத்தில்... அல்லாடும் அடிமாடுகளாக
விமானத்தில் நுழைந்ததும்... சா...
சொர்க்கத்தில் மிதந்த சுகானுபவம் இவர்களுக்கு.
பல மணித்தியாலம் பறந்து...
பாலையில் தரை இறங்கியதும்
வல்லூறுகளாகக் காத்துக் கிடக்கிறது காரில்
வனிதையை அழைத்துச் செல்வதற்காக.

எவனோ ஒருவன் எங்கிருந்த
ஒருவனிடம் பண்டமாற்றாகிய பாவையர்
எண்ணெய் வளம்மிக்க நாட்டில்
ஏற்றுமதி ஆவது எரிகிற நெருப்பில்...
எண்ணெய் ஊற்றத்தான் என்பது
இவர்களுக்குப் புரியவா போகிறது?

அடுத்த சில நாட்கள் அகன்று...
குடலைக்கு மட்டும் செய்தி ஊடகங்களில்
கொட்டை எழுத்துக்களாய்
பட்டை தீட்டப்படுகிறது
மிகப் பரிதாபகரமாக.

பணநாணயத்திற்காக உடல் நாணயத்தை
சவக்குழியாக்கிய சித்திரவதைக்குள்
சிறைப்பட்டு, உதைபட்டு, அடிபட்டு
வதைபட்ட நெஞ்சோடு கழிவறைவயில்
கழுத்தில்... சுருக்கிட்டுத் தொங்கிய;
ஆணி அறைந்த அவலச் செய்திகள்
ஒன்றன்பின் ஒன்றாய் கண்சிமிட்ட
அட! கேடுகெட்ட சமுதாயமே, இன்னுமா
ஏற்றுமதி செய்கிறாய்? எங்கள்
தாய்க்குலத்தை ஹவுஸ் மாடுகளாக
மத்திய கிழக்கிற்கு? இதைவிட
ஆற்றில் தள்ளிவிடலாம்
கழுத்தை நெரித்து இங்கேயே கொன்றுவிடலாம்
இது... அனுபவத்தின் அறைகூவல்
புரிகிறதா? பாலையில் கருகும் எங்கள்
பாவையர் பரிதாப நிலை பற்றி
சிந்திப்போம். செயற்படுவோம்.



சாய்ந்தமருதூர்.
கேயெம்மே அஸீஸ்.

## என் மனம் இறைவனோடு...



தினம் ஒரு விடியலிலே
பறவைகளின் ஓசை – அந்த
நிமிடம் என்மனம் இறைவனோடு
கண் விழித்து பல் துலக்குகையில்
என் தோட்டத்தில் பூத்த
மலர்களை பார்த்து ரசிக்கையில்
என் மனம் இறைவனோடு.
காலைக் கடமைகளை நிறைவு
செய்த பின்னர்
சகோதரர்களுடன் சிரித்து மகிழ்கையில்
என் மனம் இறைவனோடு.
காலை உணவை உண்ணும்போதும்
என் மனம் இறைவனோடு.
பாடசாலை சென்று நண்பர்களுடன்
சந்தோசமாய் இருக்கையில்
என் மனம் இறைவனோடு – ஏனெனில்
இதன் அனைத்திற்கும் காரணம் இறைவனே...

ரா. அக்ஷா,
யாழ்ப்பாணம்.



# விளையாட்டு

ஜோசெப் கிருஷ்ணா



2014ஆம் ஆண்டு இலக்கைக் கிரிக்கெட் பொறுத்து பெறுமதி வாய்ந்த பதிவுகளை ஏற்படுத்தியுள்ளனர் கிரிக்கெட் அணியினர். உலகக் கிண்ண இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டிகளில் இரண்டு முறை இறுதிப்போட்டிக்கு வந்தும் வெற்றிக் கிண்ணத்தை தவறவிட்டவர்கள். இம்முறை பங்களாதேஷில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்தியாவைத் தோற்கடித்துக் கிண்ணம் வென்றார்கள்.

இந்தச் சுற்றுப்போட்டியின் முடிவிலேயே மஹேல ஜயவர்த்தனவும், குமார் சங்கக்காரவும் இருபதுக்கு இருபது போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுவதை அறிவித்தார்கள்.

இதேவேளை இன்சியான் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், பங்களாதேஷ் அணியைத் தோற்கடித்து, இலங்கை தங்கம்வென்றது.

அதன்பின் இங்கிலாந்து சென்ற இலங்கைக் கிரிக்கெட் அணியினர் இருவகைக் கிரிக்கெட்டிலும் வெற்றிகண்டனர். குறிப்பாக

# இலங்கையில் வசந்தம்

டெஸ்ட் தொடரை 1-0 என்று வென்றதைக் குறிப்பிடலாம். ஒருநாள் தொடரை 3-2 என்று வென்றார்கள்.




இருந்தாலும் பலமிக்க தென் ஆபிரிக்க அணியை இலங்கையால் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஒரு நாள் போட்டித் தொடரை 2-1 என்றும் டெஸ்ட் தொடரை 1-0 என்றும் இலங்கை இழந்தது.

இதேவேளை இலங்கையில் பாகிஸ்தான் விளையாடிய டெஸ்ட் தொடரில் இலங்கை 1-0 என்று டெஸ்ட் தொடரை வென்றது. இதுவே மஹேலவின் இறுதி டெஸ்ட் போட்டித் தொடராகவும் அமைந்தது. ஒரு நாள் போட்டித்தொடரை 2-1 என்று இலங்கை அணி வென்றது. இன்னொருபுறம் இன்சியான் ஆகிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி பதக்கம் வென்று அசத்தியது.

ஆனால், அவசர அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தியாவிற்கு எதிரான ஒரு நாள் போட்டித் தொடரில் 5-0 என்று இந்தியா, இலங்கையைத் தோற்கடித்தது. இந்தத் தொடரிலேயே இந்தியாவின் றோகித் சர்மா 264 ஓட்டங்கள் குவித்து சாதனைகளைப் படைத்தார்.

தொடர்ந்து 7 ஒரு நாள் போட்டிகளுக்காக இங்கிலாந்து அணி இலங்கை வந்திருந்தது. இதில் 5-2 என்று அபாரமாக இங்கிலாந்தை இலங்கை கவிழ்த்தது. (இதுவே இங்கிலாந்து அணித் தலைவர் அலிஸ்ரர் குக் அணியில் இருந்து வெளியேறக் காரணமாக அமைந்தது) மேலும் சங்கக்காரவும், மஹேலவும் தாய் மண்ணில் விளையாடும் இறுதி ஒரு நாள் தொடராகவும் இது அமைந்தது.

ஆனால், வருடம் முடியும்போது நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை தோல்விகண்டது. மொத்தத்தில் பார்க்கும்போது 2014 இலங்கை கிரிக்கெட்டுக்கு வெற்றிகள் அதிகம் குவிந்த ஆண்டென்பதை மறுப்பதற்கில்லை.



**அவுஸ்திரேலிய** இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடர் (போடர், கவாஸ்கர் தொடர்) மிக ஆர்வத்துக்குரியது. அதுவும் இம்முறை மெல்பேர்ண் மைதானத்தில், பொக்சிங் டே டெஸ்ட் போட்டி இன்னும் சுவாரஷ்யமாயிற்று. ஆனால் ஆட்டம் சமநிலையாக முடிவடைந்த நிலையில், இந்திய அணித்தலைவர் சற்றும் எதிர்பாராமல் தான் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். இந்த அறிவிப்பு சகலமட்டங்களிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இது தொடர்பில் கிரிக்கெட் துறை சார்ந்தவர்களின் கருத்துக்கள் தொடர்ந்தும் வந்துகொண்டிருக்கின்றன.

2008இல் டெஸ்ட் அணித்தலைவராகப் பொறுப்பேற்ற டோனி, எல்லா வகைக் கிரிக்கெட்டுக்களிலும் பிரகாசித்தார் என்பது உண்மை. இவரது அணித்தலைமையிலேயே இந்தியா டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பிடித்தது. 2007 இருபதுக்கு இருபது உலகக் கிண்ணத்தை வென்றது. அதியுயர் கிண்ணமான ஒரு நாள் கிண்ணத்தை 2011இல் இந்தியா வென்றது. எல்லாம் டோனியின் தலைமையிலேயே நடைபெற்றன. டெஸ்ட் பொறுத்து, இவர் தலைமைதாங்கிய 60 டெஸ்ட் போட்டிகளில் 27இல் வெற்றிகொண்டார்.



# இதுதான் அதிரடி

ஆனால் அண்மைக்காலமாக இந்திய டெஸ்ட் அணியில் ஒரு தொய்வுகாணப்பட்டது. குறிப்பாக 2011இல் 4-0 என்று இங்கிலாந்து மண்ணில் டெஸ்ட் தொடரை இழந்தனர். அதோடு அவுஸ்திரேலியாவிலும் இதேபோலத் தோன்றினர். இவ்வருட ஆரம்பத்தில் மீண்டும் இங்கிலாந்தில் தோல்விகளை எதிர்கொண்டனர். இவையெல்லாம் டோனியின் அணித் தலைமைமீது விமர்சகர்கள் கண்டபாட்டில் கருத்துச்சொல்லும் கருப்பொருளாகிவிட்டது. இங்குதான் டோனி வித்தியாசமான மனிதராகத் தன்னை வெளிப்படுத்தியுள்ளார்.

விமர்சகர்கள் சகலரதும் வாய்களை அடைக்கப்பண்ணி இருக்கிறார். சர்வசாதாரணமாக டெஸ்ட் அணித் தலைவர் பதவியைத் தூக்கியெறிந்துள்ளார். அவுஸ்திரேலிய தொடர் நான்கு டெஸ்ட் போட்டிகளைக் கொண்டது. இதில் இரண்டு போட்டிகளில் மட்டுமே டோனி அணித் தலைவராக இருந்தார். ஆகவே இனிமேலும் விமர்சகர்கள் டோனியை மட்டும் குத்திக்குதற முடியாது. இப்பொழுது டோனி பந்தை விமர்சகர்களின் பக்கம் தூக்கிப்போட்டுவிட்டார். அதுவும் அதிரடியாக.

வேண்டுமென்றால், இந்திய அவுஸ்திரேலிய தொடர் முடிந்தபின், அதாவது சிட்னி டெஸ்ட் போட்டி முடிவடைந்தபின் பதவி விலகலை அறிவித்திருக்கலாமே என்று ஒரு புதிய குற்றச்சாட்டை முன்வைக்கலாம். அதுவும் எடுபடாது. டோனி இல்லாமலேயே அணியைச் சிறப்பாக வழிநடத்திய விராட் ஹோலி கைவசம் இருக்கிறார். எனவே விமர்சகர்கள் பக்கம் ரொம்பவும் பலவீனம்தான்.



## 2014 சில துளிகள்

### ஜனவரி

♦ சாஹிட் அப்ரிடி தன்வசம் வைத்திருந்த அதிவேக ஒரு நாள் சதம் என்ற சாதனையை நியூசிலாந்தின் கோரி அண்டர்சன் முறியடித்தார். இவர் 47 பந்துகளில் சதம் கடந்து 131 ஓட்டங்கள் பெற்றார்.

♦ போர்த்துக்கல் மற்றும் ரியல் மெட்ரிட் நட்சத்திரம் கிறிஸ்ரியானோ றொனால்டோ உதைபந்தாட்ட வாழ்க்கையில் 400 கோல்களைக் கடந்தார்.

♦ இலங்கை கிரிக்கெட் அணி துபாயில் பாகிஸ்தானுக்கு எதிராக முதலாவது டெஸ்ட் வெற்றியைப் பதிவுசெய்தது.

### பெப்ரவரி

♦ குமார் சங்கக்காரா, பங்களாதேஷ் அணிக்கு எதிராக தனது முதலாவது முச்சதம் பெற்றார். (319)

### மார்ச்

♦ 19 வயதுக்குட்பட்டோர் ஐ.சி.சி. கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை தென்னாபிரிக்கா வென்றது.

♦ தென்னாபிரிக்க கிரிக்கெட் அணித்தலைவர் கிரேம் ஸ்மித் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்றார்.

♦ பாகிஸ்தானைத் தோற்கடித்து இலங்கை கிரிக்கெட் அணி ஆசியக் கிண்ணத்தை வென்றது.

### ஏப்ரல்

♦ ஐ.சி.சி. மகளிர் இருபதுக்கு இருபது உலகக் கிரிக்கெட் கிண்ணத்தை அவுஸ்திரேலியா வென்றது.

♦ இலங்கை ஆடவர் இருபதுக்கு இருபது கிரிக்கெட் அணி, இருபதுக்கு இருபது உலகக் கிண்ணத்தை வென்றது.

### மே

♦ சாந்திக ஹத்துருசிங்க பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்றுனராக நியமிக்கப்பட்டார்.

♦ தென்னாசிய பாஸ்கட்போல் சம்பியன்ஷிப் போட்டிகளில் இலங்கை வெள்ளிப் பதக்கம் வென்றது.

### ஜூலை

♦ நோவக் ஜோகோவிச், றொஜர் பெடரரைத் தோற்கடித்து விம்பிள்டன் கிராண்ட் ஸ்லாம் வென்றார்.

♦ உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் ஜேர்மனி, ஆர்ஜென்ரீனாவைத் தோற்கடித்து உலகக் கிண்ணம் வென்றது.

♦ மஹேல ஜயவர்த்தன தான் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.

### ஓகஸ்ட்

♦ ஜேர்மனிக்காக இதுவரையில் அதிக கோல்கள் பெற்றிருந்த மிரஸ்லோவ் குளோஸ், சர்வதேச உதைபந்தாட்டத்தில் இருந்து தனது ஓய்வை அறிவித்தார்.

### ஒக்டோபர்

♦ ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை கிரிக்கெட் போட்டியில் தங்கம் வென்றது.

### நவம்பர்

♦ பிரேசிலில் நடைபெற்ற உலக பொடிபில்டிங் போட்டிகளில் இலங்கையின் சுபாஸ் சிறிவர்த்தன வெண்கலம் வென்றார்.

### டிசம்பர்

♦ ஐக்கிய அரபு எமிரேட்சின் குரம்கான் அதி கூடிய வயதில் ஒரு நாள் போட்டியொன்றில் சதம் அடித்தவர் என்ற பெருமையைப் பெற்றார்.








# குளிர் காலத்தில் சருமம் வறண்டு போகாமல் இருக்க...

குளிர் காலத்தில் பலருக்கு ;உடம்புமுழுவதுமே வறண்டு காணப்படும். அதிலும் இயற்கையிலேயே வறண்ட சருமம் உடையவர்களுக்கு கேட்கவே வேண்டாம். முகம் அதிகளவில் வறண்டு போய் விடுவதால், ஒருவித அசௌகரியத்தை அவர்கள் உணர்வார்கள்.

★ ஒரேஞ்சு பழத்தில் சுளை சுளையாக காணப்படும் ஒரேஞ்சு இந்த குளிர்காலத்தில் அதிக மாகவே சந்தைகளில் கிடைக்கும். விற்றமின் ஏ மற்றும் சி சத்துக்கள் அதிகம் நிறைந்த இந்த பழத்தைத் தொடர்ந்து சாப்பிட்டுவந்தால் சருமம் பளபளப்படையும்.

★ பொதுவாக சருமம் வறண்டுபோகாமல் இருக்க வழக்கமாக கூறப்படும் ஆலோசனை, அதிகளவில் தண்ணீர் அருந்துவது. அது ஒரு வகையில் பலனளிக்கும் என்றாலும், ஒரேஞ்சு மற்றும் தேன் சாப்பிட்டால் அதிக பலன்களை அடையலாம்.

★ ஒரேஞ்சு பழ தோலை தூக்கி எறிந்து விடாமல், அதனை காயவைத்து பவுடராக்கி தண்ணீருடன் குழைத்து முகம் மற்றும் கைக-ளில் தடவி, சிறிது நேரம் கழித்து கழுவினால் வறண்ட சருமத்திற்கு நல்ல பலன் அளிக்கும்.

★ அரை மூடி எலுமிச்சை பழச்சாறில் ஒரு டம்ளர் சுடு நீரை கலந்து, அதனுடன் ஓரிரு ஸ்பூன் தேனை கலந்து காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால், சருமத்தில் மினுமினுப்பும் உடம்பில் உள்ள தேவையற்ற சதைகளும் குறையும்.

★ எண்ணெய் சருமம் உடையவர்கள் ரோஸ் வோட்டரை ஒரு பஞ்சில் நனைத்து தடவ, சருமம் பளபளப்பாகும்.

★ தோலில் தழும்புகள், கீறல் வடுக்கள் போன்றவை உள்ளவர்கள் தக்காளி பழக்கூழுடன், தயிர் கலந்துதடவி சிறிதுநேரம் காயவிட்டு, பின் கழுவிவர தழும்புகள் மறையும்.

★ மக்காச்சோள மாவு மற்றும் தயிர் கலந்த கலவையை தினசரி உடம்பில் தடவி, காயவிட்டு பின்னர் கழுவி வர சருமம் பொலிவுறும்.

★ வெளியில் செல்லும்போது வெயில் படாமல் இருக்க கையில் குடை எடுத்து சென்றால் சூரிய கதிர்களின் வெப்பத்தினால் சருமம் வறண்டு போவதை தடுக்கமுடியும்.

# முக அழகை அதிகரிக்கும் விளக்கெண்ணெய்

சருமத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு சமையலறையில் உள்ள விளக்கெண்ணெய் மிகவும் சிறப்பான பொருள். முகப்பரு, வறட்சியான சருமம், ஸ்ட்ரெட்ச் மார்க் மற்றும் சூரியக்கதிர்களால் சருமத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு விளக்கெண்ணெய் நல்ல தீர்வை வழங்கும்.

ஏனெனில் அதில் அன்டி-செப்டிக் மற்றும் கிளின்சிங் தன்மை நிறைந்திருப்பதால், இது சருமத்தில் ஏற்படும் அனைத்து வகையான பிரச்சினைகளுக்கும் தீர்வைத் தரும். சரி, இப்போது விளக்கெண்ணெய் கொண்டு எந்த பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வைக் காணலாம் என்று பார்ப்போம்.

முகப்பரு வந்தால் சருமத்தில் அரிப்புகள் மற்றும் காயங்கள் ஏற்படும். இதனாலேயே பருக்கள் முகத்தில் பரவிவிடும். பருக்கள் அதிகமாகாமல் இருக்கவும், அவற்றால் ஏற்படும் பிரச்சினைகளைத் தடுக்கவும் விளக்கெண்ணெய் பெரிதும் உதவியாக இருக்கும்.

அதற்கு விளக்கெண்ணெயை கொட்டனில் நனைத்து முகத்தை துடைத்து, 1 மணிநேரம் ஊறவைத்து பின் கழுவவேண்டும். இப்படி செய்தால், சருமத்தில் உள்ள அழுக்குகள், பக்ரீரியாக்கள் மற்றும் இறந்த செல்கள் அனைத்தும் வெளியேறி, பருக்கள் வருவது தடுக்கப்படும்.

விளக்கெண்ணெயை சோப்பு தயாரிக்கவும் பயன்படுத்துகிறார்கள். இதற்கு அதில் உள்ள கிளின்சிங் தன்மை தான். ஆகவே தினமும் விளக்கெண்ணெய் கொண்டு சருமத்தை துடைத்து எடுத்தால், முகம் பொலிவோடு பளிசென்று மின்னும்.

தினமும் இரவில் படுக்கும்முன் விளக்கெண்ணெய் கொண்டு முகத்தை துடைக்கவேண்டும். இப்படி தொடர்ந்து செய்துவந்தால், சருமம் மென்மையாவதை நன்கு காணலாம். விளக்கெண்ணெயை கொண்டு வாரம் மூன்று முறை முகத்திற்கு ஃபேஸ்பேக் போட்டால், முகம் ஆரோக்கியமாகவும் அழகாகவும் காணப்படும்.



**நாம்** எந்த காரியம் செய்தாலும் கண்டிப்பாக அதில் ஏதாவது ஒரு சில தவறுகளை செய்வோம். இந்த தவறுகள் எல்லாம் அடிக்கடி நடை பெறாமல் எப்போதாவது நடந்தால் எந்த ஒரு பிரச்சினையும் இல்லை. ஆனால் பிரச்சினை ஏற்படும்போது மன்னிப்பை எப்படி எல்லாம் அழகாக கேட்கலாம் என்பதை நீங்கள் கண்டிப்பாக தெரிந்து கொள்ளவேண்டும். சரி இப்போது எப்படியொல்லாம் மன்னிப்புக் கேட்கலாம் என்பதை பார்க்கலாம்.

"நல்ல ஆடை ஒன்றை அணிந்துகொண்டு, ஒரு அட்டையில் நீங்கள் மன்னிப்பு கேட்கும் விவரத்தை அழகாக எழுதி, அதனை தலைக்கு மேல்தூக்கி பிடித்து, ஒரு புகைப்படம் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த படத்தை மன்னிப்பு கேட்க நினைப்பவரிடம்



# பெண்களிடம் மன்னிப்பு கேட்க அழகான வழிகள்

அனுப்பிவையுங்கள். மன்னிப்பு என்று வரும்போது, இந்த வழி உங்களுக்கு முக்கியமான ஒன்றை அளிக்கும். அதாவது, செய்த தவறுக்காக நீங்கள் உண்மையிலேயே வருந்தி மன்னிப்பு கேட்கிறீர்கள் என அவர்களுக்கு உணர்த்தும். உங்களின் வித்தியாசமான ரசனையை கண்டு ரசித்து உங்களை மன்னித்துவிடுவார். பெண்களுக்கு இந்த வழி மிகவும் பிடிக்கும்.

✪ பெண்ணிடம் மன்னிப்புக்கேட்பதற்கு மட்டுமே இந்த வழி சரி யானதாக இருக்கும். அவர்களுக்கு நல்லதொரு பரிசு பொருள் மற்றும் க்ரீடிங் கார்டு வாங்கிக் கொடுத்து, அதனுடன் ஒரு மன்னிப்பு குறிப்பையும் கொடுங்கள். கண்டிப்பாக இது உங்களுக்கு பலனை அளிக்கும்.

✪ பெண்களுக்கு பூக்கள் என்றால் பிரியம். அதனால் அவர்களிடம் மன்னிப்புக்கேட்பதற்கு பூக்களும் உதவிடும். ஆனாலும் நிலைமையின் தாக்கத்தை பொறுத்தே இந்த வழியை பயன்படுத்தமுடியும். ஒரு வேளை, இது ஒன்றும் பெரிய பிரச்சினையில்லை என்றால் இந்த வழி சரியானதே. அழகிய வண்ணங்கள் நிறைந்த, அதேசமயம் நல்ல நறுமணத்தை அளித்திடும் பூக்களை தேர்ந்தெடுங்கள். அவர்களின் வீடு அல்லது அலுவலகத்திற்கே அதனை நேரடியாகக் கொண்டு போய் கொடுத்தால் அது கூடுதல் பலனை அளிக்கும்.

✪ உங்களுக்கு பிடித்த அல்லது நீங்கள் மன்னிப்பு கேட்கப்போகும் நபருக்கு பிடித்த கதாபாத்திரத்தின் படத்தைக் கொண்ட ஆடையை அணிந்துகொள்ளுங்கள். அதை அணிந்துகொண்டு, அவர்கள் கண்ணில் படும்படி, அவர்கள் முன் செல்லவும். அப்படி செய்யும் போது, ஆடையில் உள்ள கதாபாத்திரத்தைப் போலவே அவர்களுக்கு நீங்கள் தெரிவீர்கள். அந்த கதாபாத்திரமே அவர்களிடம் மன்னிப்பு கேட்பதாக அவர்கள் உணர்வார்கள்.

✪ உங்கள் மனைவி அல்லது கணவனிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றால் அவர்களை செல்லமாக ஒரு குத்து குத்தி, உங்களை மன்னிக்கும் வரை அவர்களை செல்லமாக அடிக்கலாம். ஆனால் அது விளையாட்டுத்தனமானதாக இருக்கவேண்டும் என்பதை மறந்துவிடாதீர்கள். அவர்களின் எதிர்வினையையும் கவனியுங்கள். ஒரு வேளை எதிர்மறையான விளைவுகள் கண்முன்னே தெரிந்தால், வேறு ஒரு வழியை தேர்ந்தெடுங்கள்.

✪ பெரிய வார்த்தைகள் எல்லாம் பயன்படுத்தி கவிதை எழுதும் கவிஞராக நீங்கள் மாறவேண்டாம். ஆனால் நீங்கள் மன்னிப்புக் கேட்க விரும்புகிறீர்கள் என்பதை மட்டும் அது தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். மன்னிப்பு என்ற வார்த்தைக்கு பல எதுகை மோனை வார்த்தைகளை நீங்கள் இணையத்தளத்தில் தேடி எடுத்துவிடலாம். நீங்கள் எழுதும் கவிதை ஒன்றும் பெரிய புலமை வாய்ந்ததாக இருக்க கூடாது. அதை படிக்கும்போது உங்களை மன்னிக்க வேண்டியவர் வாய்விட்டு சிரித்துவிடவேண்டும். அது உங்களை மன்னித்ததற்கு அடையாளமாகும்.

✪ மன்னிப்பு கேட்பதோடு அதை வைத்து விளையாடுவது. உங்கள் தவறின் ஆழத்தை பொறுத்து இந்த விளையாட்டின் அளவை தீர்மானித்துக்கொள்ளலாம். பொதுவாக நீங்கள் செய்ய விரும்பாத ஒரு விசயத்தை, உங்களுக்கு நீங்களே வேடிக்கையான தண்டனையாக கொடுத்துக்கொள்ளலாம். உதாரணத்திற்கு, அவர்கள் உங்களை மன்னிக்கத் தயார் என்றால், தண்ணீர் துப்பாக்கியைக் கொண்டு உங்கள்மீது தண்ணீரை அடிக்கச் சொல்லலாம். அல்லது அவர்களுடன் சேர்ந்து வீடியோ கேம்ஸ் விளையாடி, அதில் அவர்கள் கையால் அடிக்கடி மரணம் கொள்வது.

**250/= பரிசு வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

பரிசுப் போட்டி இல :-453

**கேள்வி:** இந்திய மத்திய அரசின் ஆயுதப்படை சிறப்பு அதிகார சட்டத்தை ரத்து செய்யவேண்டும் என்ற கோரிக்கையுடன் கடந்த14 ஆண்டுகளாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தும் பெண்மணி?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 19.01. 2015

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய 'முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 453
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 451 இற்கான விடை :-

**அன்பு, அரவணைப்பு**

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :-

**அ.யோ.நிஷாந்தினி,
இராசாவின் தோட்ட ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.**

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

**453**

பெயர் : ..........

முகவரி : ..........

தே.அ. அட்டை இல : ..........

விடை : ..........

கையொப்பம் : ..........

# நெருக்கடிகளுக்கு மத்தியில் ஜனாதிபதி தேர்தல்!

**வாக்காளர்கள் சுதந்திரமாக வாக்களிப்பில் ஈடுபடுவதற்கான நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும். மக்கள் நெருக்குவாரப்படுத்தப்படக் கூடாது என்றெல்லாம் சொல்லப்பட்டாலும் பல்வேறு வகையிலான சிக்கல்களுக்கு மத்தியில் மக்கள் எவ்வாறு சுதந்திரமாகவும் முழுமை யாகவும் வாக்குகளைப் பயன்படுத்தப் போகிறார்கள் என்பதுதான் சந்தேகமானதாகும்.**

வடக்கு, கிழக்கு மாகாணங்களே தேர்தலில் தீர்மானிக்கும் சக்தியாக இருப்பார்கள் என்று எதிர்வு கூறப்படுகின்ற நிலையில், ஜனாதிபதித் தேர்தலின்போது கிழக்கு மாகாணத்தில் 9 லட்சத்து 95 ஆயிரத்து 612 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

திருகோணமலை மாவட்டம் திருகோணமலைத் தொகுதி - 86 ஆயிரத்து 685 பேர், சேருவில தொகுதி - 69 ஆயிரத்து 47 பேர், மூதூர் தொகுதி - 85 ஆயிரத்து 401 என 2 இலட்சத்து 41 ஆயிரத்து 133 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் அம்பாறைத் தொகுதியில், ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 479 பேர், பொத்துவில் தொகுதி - ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 779 பேர், கல்முனைத் தொகுதி - 66 ஆயிரத்து 135 பேர், சம்மாந்துறைத் தொகுதி - 71 ஆயிரத்து 442 பேர் என 4 லட்சத்து 20 ஆயிரத்து 835 பேர் வாக்களிகத் தகுதி பெற்றுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் மட்டக்களப்பு தொகுதி - ஒரு இலட்சத்து 55 ஆயிரத்து 135 பேர். பட்டிருப்புத் தொகுதி 80 ஆயிரத்து 972 பேர், கல்குடாத் தொகுதி 97 ஆயிரத்து 537 பேர் என மொத்தம் 3 லட்சத்து 33 ஆயிரத்து 644 பேர் வாக்களிப்பதற்கு தகுதிபெற்றிருப்பதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் தேர்தல் தொகுதியில் 95,804 பேரும் திருமலைத் தொகுதியில் 86,978 பேரும் சேருவில தொகுதியில் 74,070 பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இவற்றுள் 15,078 பேர் தபால்மூல வாக்காளர்கள் ஆகும்.

திருமலை மாவட்டத்தில் உள்ள மூன்று தேர்தல் தொகுதிகளிலும் 285 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் 06 தேர்தல் ஒருங்கிணைப்பு மத்திய நிலையமும் ஒரு விசேட தேர்தர்தல் ஒருங்கிணைப்பு மத்திய நிலையமும் ஏற்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் திருகோணமலை மாவட்டத்தில் 2,51,684 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதித் தேர்தலின் வெற்றியை தீர்மானிப்பதில் வடக்கு மாகாண வாக்குகள் முக்கியத்துவம் பெறுமென அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ள சுமார் ஏழு இலட்சம் வாக்காளர்களைக் கவரும் பணியில் அரச தரப்பு வேட்பாளர் மஹிந்த ராஜபக்சவும், பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவும் மும்முரமாக ஈடுபடுவார்கள் என அரசியல் அவதானிகள் ஊகம் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் அவர்களின் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக வடக்கு மாகாணம் விளங்குமெனக் கூறப்படுகின்றது.

இம்முறை வடக்கு மாகாணத்தில் 2013ம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் 7 இலட்சத்து 19 ஆயிரத்து 477 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அதன்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 லட்சத்து 26 ஆயிரத்து 813 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 68 ஆயிரத்து 600 பேரும், மன்னார் மாவட்டத்தில் 75 ஆயிரத்து 737 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 53 ஆயிரத்து 683 பேரும், வவுனியா மாவுட்டத்தில் 94 ஆயிரத்து 644 பேரும் வாக்களிக்கத் தகுதிபெற்று உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதித் தேர்தலில் திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தில் நான்கு இலட்சத்து 65 ஆயிரத்து 757 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளதாக அம்பாறை மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் திலின விக்ரமரட்ன தெரிவித்தார். இதேவேளை, வாக்களிப் பதற்கென 464 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி அம்பாறை தேர்தல் தொகுதியில் 161,999 பேரும் சம்மாந்துறை தேர்தல் தொகுதியில் 80,357 பேரும் கல்முனைத் தேர்தல் தொகுதியில் 71,254 பேரும், பொத்துவில் தேர்தல் தொகுதியில் 152,147 பேரும் இவ்வாறு வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.


இந்த நிலையில்தான் தேர்தல் வன்முறைகள் தொடர்பான நிலைப்பாடு மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. கிழக்கின் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களை விடவும் மட்டக்களப்பில் அதிக நெருக்குவாரங்கள் இருந்ததாகவும் தங்களால் பிரசாரம் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது இருந்ததாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

இது தொடர்பில் அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் மைத்திரிபால சிறிசேனாசவுக்கு ஆதரவு தெரிவிக்கும்வகையில் தம்மால் பிரசாரக் கூட்டங்களை நடத்த முடியவில்லை என்றும் தாம் மன முடைந்த நிலைக்கு வந்துள்ளதாகவும் மட்டக்களப்பு நகரில் சார்ள்ஸ் மண்டபத்தில் ஐக்கிய் தேசியக் கட்சியின் சார்பில் கலந்துகொண்ட மட்டக்களப்பு மற்றும் கல்குடா தொகுதிகளின் அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் எஸ்.சசிதரன், கல்குடாத் தொகுதி அமைப்பாளர் எஸ்.மாசிலாமணி ஆகியோருடன் பிரதேச அமைப்பாளர் களும் இதன்போது கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மாசிலாமணி, தம்முடைய வாகனங்கள் பின்தொடரப்படுவதும், அலுவலகங்கள் தாக்கப்படுவதும். ஆதரவாளர்கள் தாக்கப்படுவதும் தொடர்ந்தவண்ணமுள்ளது. இதில் ஊடகங்களின் பங்கு முக்கியமாக





**-கிழக்கான்-**

உள்ளது என்றும் தெரிவித்தார்.

அதேநேரம், ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் உடைத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

காத்தான்குடி கடற்கரையில் மைத்திரிபால சிறிசேனாவை ஆதரிக்கும் வகையிலான தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை இந்த அலுவலகம் தாக்கப்பட்டதாகவும், தமது ஆதரவாளர்களது வீடுகள்மீதும் பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டுள்ள தாகவும் மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் சிப்லி பாருக் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில், காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டு, சந்தேகம் தொடர்பில் முறையிட்ட போதும் இதுவரையில் யாரும் கைது செய்யப்படவில்லை என்றும் சிப்லி பாருக் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் காரணமாக அலுவலகத்தின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 2 மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டி, அலுவலகத் தளபாடங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. அத்துடன் முன்னாலும் உள்ளேயும் இருந்த பதாதைகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பொறியியலாளர் சிப்லி பாருக், இச் சம்பவத்திற்கு முன்னர், காத்தான்குடி கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தைக் குழப்ப முயன்று முடியாமல்போன நிலையில் எமது அலுவலகம் தாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இரண்டு நாட்களுக்கு முன்பாக என்னை 24 மணி நேரத்துக்குள் ஊரைவிட்டும் நாட்டை விட்டு துரத்தியடிக்கமுடியும் என்று பேசியிருந்த விடயம், 24 மணிநேரம் முடிவதற்கு முன்பு நடந்தேறியிருக்கிறது.

இதனைப் பார்க்கின்றபோது, நாட்டில் சுதந்திரமாக ஒரு தேர்தலை நடத்துவதில் எந்தளவு தூரம் நேர்மைத் தன்மை இருக்கிறது என்பது பற்றிச் சந்தேகிக்கத் தோன்றுகிறது. அந்தத் தேர்தல் நல்லமுறையில் நடைபெற வேண்டுமாக இருந்தால் சர்வதேச, உள்ளூர் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

இதேநேரம், மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவாளர் ஒருவர் இனந்தெரியாதவர் களினால் கடுமையாகத் தாக்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அப்பிரதேசத்திற்கு வந்திருந்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஞானமுத்து கிருஸ்ணப்பிள்ளையுடன் உரையாடிவிட்டு சந்தையின் அருகிலுள்ள கடையொன்றுக்குச் சென்றுவிட்டு வருகையில் முகங்களை மூடியநிலையில் தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் தடிகளால் தாக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

தாக்குதலில் இவரது முகம், மற்றும் வாய்ப் பகுதிகள் சேதமடைந்துள்ள தனால் இவருக்கு பேசுவதற்கு முடியாத நிலையுள்ளது.

இதுதவிரவும் பல்வேறு வெளியில் வராத வன்முறைச் சம்பவங்களும் நடைபெற்றுள்ளதாக அறியமுடிகிறது. இவ்வாறான நிலையில் எவ்வாறு மக்களுக்கு சரியான முறையிலான பிரசாரங்கள் ஊடான விளக்கங்கள் சென்றடைந்துள்ளன என்பதே கேள்விக்குறியாகும்.

வாக்காளர்கள் சுதந்திரமாக வாக்களிப்பில் ஈடுபடுவதற்கான நிலைமை ஏற்படுத்தப்படவேண்டும். மக்கள் நெருக்குவாரப்படுத்தப்படக் கூடாது என்றெல்லாம் சொல்லப்பட்டாலும் பல்வேறு வகையிலான சிக்கல்களுக்கு மத்தியில் மக்கள் எவ்வாறு சுதந்திரமாக வும் முழுமையாகவும் வாக்குகளைப் பயன்படுத்தப் போகிறார்கள் என்பதுதான் சந்தேகமானதாகும்.

கிழக்கைப் பொறுத்தவரையில் மாற்றம் முக்கியமாகத் தேவை என்ற கருத்துக்களே வெளிவந்த வண்ணமிருந்தாலும் எவ்வாறு அந்த மாற்றம் ஏனைய பகுதிகளுடன் மோதி வெல்லப்போகிறது என்பது எதிர்வரும் 9ஆம் திகதியே தெரியப் போகிறது. அதுவரைக்கும் பொறுத்திருப்போம்.

ஆகக் குறைந்தது கிழக்கைப் பொறுத்தவரையில் 98ஆம் ஆண்டு தேர்தலுக்குப்பிறகு முழு விருப்புடனான தேர்தல் வாக்களிப்பு இதுவரைக்கும் நடைபெற்றதில்லை என்றே எல்லோரும் கூறுவார்கள். இம்முறை 60 வீதமான வாக்களிப்பு நடைபெற்றாலே திருப்திதான். ■

# பொதுபலசேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?

தொடர் - 37

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**




**இந்நாட்டை இனரீதியில் துண்டாட நாம் இடமளியோம் - பொதுபலசேனா-**

முஸ்லிம்களுக்கென்று கோரப்பட்ட தனியான கரையோர மாவட்ட நிர்வாக அலகினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மறுத்துவிட்ட நிலையில் அதனைப் பெற்றுக்கொள்வதற்கே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அரசிலிருந்து விலகி மைத்திரிபால சிறிசேனாவுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு எதிரணியில் இணைந்துள்ளார்.

அந்த உடன்படிக்கை உடனடியாக பகிரங்கப்படுத்தப்படவேண்டும் என பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர் வேண்டுகோள் விடுத்தார்.

கொழும்பு கிருலப்பனை பௌத்த மத்திய நிலையத்தில் 29ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

இந்நாட்டை இனரீதியில் துண்டாட ஹக்கீமுக்கு ஒருபோதும் நாம் இடமளிக்கமாட்டோம்.

எமது உயிர்களை தியாகம் செய்தாவது இதைத் தடுக்க நாம் தயாராக உள்ளோம்.

ஹக்கீம் கல்முனை சம்மாந்துறை, பொத்துவில் பிரதேசங்களை இணைத்து முஸ்லிம்களுக்கென்று தனியான நிர்வாக அலகொன்றினை ஜனாதிபதியிடம் கோரியிருந்தார்.

அவ்வாறு நாட்டைப் பிரிக்கமுடியாது என்று ஜனாதிபதி மறுத்துவிட்டார். கல்முனையில் நடந்த கூட்டத்தில் ஹக்கீம் இதனைப் பகிரங்கமாகவே கூறியுள்ளார் என்றார் ஞானசாரர்.

**வடக்கு - கிழக்கு இணைப்பு**

13ஆவது திருத்தச் சட்டத்தை பொது பலசேனா எதிர்க்கிறது. இந்நாட்டில் உள்ளூராட்சி முறை இல்லாது ஒழிக்கப்படவேண்டும்.

மைத்திரிபால சிறிசேனா வடக்கு கிழக்கை இணைப்பதற்கு உறுதியளித்து உள்ளார். இவ்வாறு வடக்கு, கிழக்கு இணைக்கப்படுவது மிகவும் ஆபத்தானது ஆகும். இது பிரிவினைக்கே வழி வகுக்கும். இதனால் இந்தியாவின் அரசியலும் பாதிப்புகளுக்குள்ளாகும்.

மேற்கத்தேய நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப மைத்திரிபால சிறிசேனா குழுவினர் செயற்பட்டுவருகின்றனர்.

மேற்கத்தேய நாடுகள் தமது நிகழ்ச்சி நிரலுக்கு இலங்கையைத் தேர்ந்தெடுத்து உள்ளன.

நாட்டின் ஒருமைப்பாடு பற்றி மைத்திரிபால சிறிசேனாவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்படவில்லை.

நாட்டைத் துண்டாடுவதற்கு பல தூதுவராலயங்களூடாக மில்லியன் கணக்கான டொலர்கள் வழங்கப்பட்டு உள்ளன.

**சர்வதேச சூழ்ச்சி**

சர்வதேச சூழ்ச்சிக்கு அமைவாக லிபியா, ஈராக், சிரியா, எகிப்து மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளில் ஏற்பட்ட போன்ற நிலைமையை இலங்கையில் உருவாக்குவதற்கே ஹக்கீம் அரசிலிருந்து விலகி எதிரணியில் இணைந்துள்ளார்.

அவர் இவ்வாறு செயற்படுவார் என்று பொதுபலசேனா இரண்டு வருடங்களுக்கு முன்பே எதிர்வுகூறியிருந்தது.

2002ஆம் ஆண்டு அரசியலில் பெரிய மாற்றமொன்று ஏற்பட்டது. ரணில் விக்கிரமசிங்ஹ பதவிக்கு வந்தார். அக்காலத்தில் எல்.ரீ.ரீ.ஈ-யினருடன் சமாதான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

எல்.ரீ.ரீ.ஈ-யினருக்கு தனியான அலகொன்றினை வழங்குவதே அதன் நோக்கமாகும். இந்த உடன்படிக்கையின் பின்னணியிலும் சர்வதேச சூழ்ச்சியே இருந்தது.

இன்றும் அதே போன்றதொரு சூழ்ச்சியே இடம்பெறுகிறது.

2002ஆம் ஆண்டு எல்.ரீ.ரீ.ஈ-யினருக்கு ஒரு தனி அலகு வழங்கியதுபோன்று முஸ்லிம்களுக்கும் தனியான அலகொன்றும் வழங்குவதே சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலாகும். மேற்கத்தேய சக்திகளுக்கு இந்த நிகழ்ச்சி நிரல் தேவைப்படுகிறது.

2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சூழ்ச்சியின் இரண்டாம் கட்டமே இது.

**இரகசிய ஒப்பந்தங்கள்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடனும் தமிழ் தேசிய கூட்டமைப்புடனும் மைத்திரி பால சிறிசேனா தரப்பினர் செய்து கொண்டுள்ள இரகசிய ஒப்பந்தங்கள் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்படவேண்டும்.

இந்த இரகசிய ஒப்பந்தங்கள் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் இன ஐக்கியத்திற்கும் பாதுகாப்புக்கும் ஆபத்தானதாகும்.

**தலைவர் இல்லாத நாடு**

சர்வதேச சக்திகள் மேற்கத்தேய நாடுகள் இலங்கையில் தலைவர் இல்லாத ஒரு ஆட்சியை உருவாக்கவே முயற்சிக்கின்றன. தலைவர் இல்லாத நாட்டில்தான் சர்வதேச சக்திகளால் கொள்ளையடிக்க முடியும்.

எகிப்து, சிரியா, ஈராக் போன்ற நாடுகளில் இந்நிலைமையை காணமுடிகிறது. இது மேற்கத்தேய நாடுகளின் செயலாகும்.

**நாட்டைப் பாதுகாக்க வேண்டும்**

அதிகமான தலைவர்கள் ஒன்றிணைந்து ஒரு அணியினை ஆரம்பித்திருப்பதால் அவர்களால் நாடு நாசமாக்கப்பட்டுவிடும். சிங்கள பௌத்தர்கள் இந்நிலைமையை நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச சக்திகளிடம் இருந்து நாட்டைப் பாதுகாக்க முன்வந்துள்ளார்.

நாட்டு மக்கள் அனைவரும் விசேடமாக சிங்கள பௌத்தர்கள் நாட்டைப் பாதுகாக்க முன்வந்துள்ள மஹிந்தவை ஆதரித்து நாட்டைப் பாதுகாக்கவேண்டும்.

ஹக்கீமும் "தூய நாளை" அமைப்பும் செய்துகொண்டுள்ள உடன்படிக்கையும் என்னவென்று பகிரங்கப்படுத்தப்படல் வேண்டும் என்றார்.

**கரையோர மாவட்டம் தொடர்பில் இரகசிய ஒப்பந்தம் ஏதுமில்லை - ஜாதிக ஹெல உறுமய**

கரையோர மாவட்ட பரிபாலனக் கோரிக்கை தொடர்பில் ரவூப் ஹக்கீமிற்கும் மைத்திரிக்குமிடையில் இரகசிய ஒப்பந்தம் ஏதுமில்லை. அதற்கு நாம் உடன்படவும் மாட்டோம். மு.கா.-வினர் பொதுவேட்பாளரின் விஞ்ஞாபனத்திற்கு மாத்திரமே உடன்பட்டு வருகை தந்துள்ளனர். இந்தக் கூட்டணியில் பரஸ்பர கொள்கைக்கு இடமில்லை என ஜாதிக ஹெல உறுமயவின் பொது செயலாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பொது வேட்பாளரின் பிரசார காரியாலயத்தில் 29ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், மஹிந்த ராஜபக்ஷ அவசர பாராளுமன்றத்தை கூட்டி அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தில் ஒரு எழுத்தையேனும் மாற்றியமைத்தால் நாம் ஜனாதிபதியுடன் இணைவோம். எனினும் அவரால் அதனை செய்ய இயலாது.

2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றபோது சமாதான உடன்படிக்கையை பாதுகாக்கவே நாம் முனைந்தோம்.

எனினும், சமாதான உடன்படிக்கையை மீறும்வகையில் மைத்திரிபால சிறிசேனாவை கொல்ல முனைந்தவேளையிலும், ஜெனரல் சரத் பொன்சேகா தாக்கப்பட்ட போதும் அந்த சமாதான உடன்படிக்கையை கிழித்தெறிந்துவிட்டு யுத்தத்திற்கு செல்லுமாறு மஹிந்த ராஜபக்ஷவிற்கு நாமே அழுத்தம் பிரயோகித்தோம்.

எனினும், மஹிந்த ராஜபக்ஷ ஜெனிவாவில் விடுதலை புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதிலேயே முன்னிலை வகித்தார்.

ஒவ்வொரு தருணமும் நாட்டின் பயணத்தை நாமே தீர்மானித்தோம். எதிர்காலத்திலும் அவ்வாறே எமது செயற்பாடுகள் காணப்படும். மேலும், அரசியலமைப்பின் 13ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்தியது மஹிந்த ராஜபக்ஷவாகும்.

வடமாகாண சபையை மீள ஸ்தாபித்தது மஹிந்த ராஜபக்ஷவே. இதனை ரணிலோ, சந்திரிக்காவோ செய்யவில்லை.

பௌத்த சிங்கள மக்களுக்காக தொடர்ந்தும் குரல்கொடுத்தது நாமே. பொதுபலசேனா தற்போது மக்களின் கவனத்தை திசைதிருப்ப முனைகின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிரணியுடன் இணைந்துள்ளனர்.

தற்போது ஹக்கீம் - மைத்திரி இரகசிய ஒப்பந்தம் இருப்பதாக குற்றம் சுமத்துகின்றனர். எனினும் மு.கா.-வின் கரையோர மாவட்ட பரிபாலன கோரிக்கை தொடர்பில் ரவூப் ஹக்கீமிற்கும் மைத்திரிபால சிறிசேனவிற்குமிடையே எந்தவொரு இரகசிய ஒப்பந்தமும் இல்லை.

மாறாக பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனத்தின்மீது உடன்பட்டே மு.கா. எதிரணியுடன் இணைந்தது. பொது வேட்பாளரின் விஞ்ஞாபனத்திற்கு உடன்பட்டால் எவரும் எதிரணியுடன் இணைந்துகொள்ளலாம் என்றார்.

**இனவாதத்தை ஏற்படுத்தி வெற்றிபெற அதிகாரத் தரப்பு முயற்சி - மாதுலுவே சோபித தேரர்**

ஆளும் தரப்பினர் இனவாதத்தை ஓர் கருவியாகப் பயன்படுத்தி வெற்றியீட்ட முயற்சிக்கின்றனர். அரசாங்கம் இனவாதத்தை கைவிடவேண்டுமென சமூக நீதிக்கான அமைப்பின் அழைப்பாளர் மாதுலுவே சோபிததேரர் கோரியுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவிற்கு ஆதரவளிக்கும் வகையிலான தொழிற்சங்கக் கூட்டமொன்றில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும்வகையில் அரசாங்கம் செயற்படக்கூடாது.

மைத்திரிபால சிறிசேனவை நிறைவேற்று ஜனாதிபதியாக பதவியில் அமர்த்த எதிர்க்கட்சிகள் முனைப்பு காட்டவில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதே எதிர்க்கட்சிகளின் நோக்கமாகும்.

நாட்டின் பல்வேறு பிரச்சினைகளுக்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையே காரணம். பல்வேறு தரப்புக்களுடன் இணைந்து நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் முயற்சி எடுத்துவருகின்றன.

தற்போது நாங்கள் வெறுமனே மாற்றத்திற்காக முயலவில்லை. பாரிய புரட்சியில் ஈடுபட்டுள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

**மஹிந்த ஆளவேண்டும், மைத்திரி கைதுசெய்யப்பட வேண்டும் - கடும்போக்கு பௌத்த அமைப்புக்கள்**

இந்த நாட்டுக்கு சமாதானத்தை ஏற்படுத்தி யுத்தத்தை வென்று தந்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அவரின் ஆட்சி தொடரவேண்டும்.

நாட்டை மீள இரண்டாகப் பிரிப்பதற்காகவே ஹக்கீம், சம்பந்தன், ரணில், சந்திரிகா ஒன்றிணைந்துள்ளனர். பொது எதிரணியினரின் இரகசியத்தை மைத்திரிபால சிறிசேனா பௌத்த மக்களுக்கு உடனடியாக வெளியிட வேண்டும். மைத்திரி உடனடியாக கைது செய்யப்படல் வேண்டும் என கடும் போக்கு பௌத்த அமைப்புக்களின் ஒன்றிணைந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுபல சேனாவின் ஞானசார தேரர், ராவணபலயவின் இந்துனாந்த தேரர், தேசயித்தி தேசத்திய அமைப்பின் கலாநிதி குணதாச அமரசேகர, பேராசிரியர் இதுரசாரர் தம்ம தேரர், மற்றும் பௌத்த இயக்கங்கள் ஒன்றிணைந்து எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவுக்கு எதிராக கடந்த 02 ஆம் திகதி கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடாத்தியது. இந்த சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

**அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு அடாவடி செயற்பாடுகள் கொண்ட பொதுபல சேனா அமைப்பினரே காரணம் - அமைச்சர் வாசுதேவ நாணயக்கார**

அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு அடாவடி செயற்பாடுகள் கொண்ட பொதுபலசேனா அமைப்பினரே காரணம் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ், முஸ்லிம்களை கருவறுக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட பொது பலசேனா அமைப்பு ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்க முன்வந்ததையடுத்து, சிறுபான்மை மக்கள் மத்தியில் இருந்த அரசாங்கத்தின்மீதான ஆதரவுத் தளம் முற்றாக சிதைந்து போயுள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

**படுதோல்வியடையும் இனவாத மதவாதக் கோஷங்கள்**

மத உணர்வுகளை வெற்றுக் கோஷங்களாக்கி, வங்குரோத்து அரசியல் செய்து பிழைப்பு நடத்தும் அனைவரும் இன்றைய (08.01.2015) தேர்தலிலும் இனிவரும் தேர்தல்களிலும் படுதோல்வி அடைவார்கள் என்பதை காலம் உணர்த்தி நிற்கும்.

இனங்களுக்காகவும் மதங்களுக்காகவும் நாம் போராடுகின்றோம் என்று கூறிக்கொள்ளும் எந்தவொரு மதவாதியும் இனவாதியும் உண்மையில் அந்த மதத்தையும் இனத்தையும் நேசிக்கவில்லை.

மாறாக, அந்த இனத்திற்கும் மதத்திற்கும் இழிவையும் அழிவையும் ஏற்படுத்தவே அவர்களது செயற்பாடுகள் வித்திடுகின்றன என்பதை கடந்த கால மற்றும் சமகால வரலாறுகள் உணர்த்தி நிற்கிறது.

(தொடரும்)

# குழந்தை அழுவது ஏன்?



குழந்தை வளர்ப்பில், கைக்குழந்தையைக் கையாள்வது ஒவ்வொரு தாய்க்கும் சவாலான விடயம்தான். அதிலும் ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தை அதிகமாக அழும்போது. அது எதற்காக அழுகிறது. என்ன செய்தால் அழுகை நிற்கும் எனத் தெரியாமல் திகைக்கிற தாய்மார் தான் அதிகம்.

கைக்குழந்தையைப் பொறுத்தவரை "அழுகை" என்பது ஒரு மொழி. தாயின் கவனத்தைத் தன்மீது ஈர்ப்பதற்குப் பயன்படுத்தும் எளிய வழி. பசி, தாகம், தனிமை, களைப்புபோன்ற சாதாரண காரணங்களால் குழந்தை தினமும் மொத்தத்தில் சுமார் ஒரு மணிநேரம் அழுவது இயல்பு. இந்தக் கால அளவு அதிகரித்தால் அல்லது குழந்தை தொடர்ந்து அழுகிறது என்றால், அதைக் கவனிக்கவேண்டும்.

**பசிக்கு அழும் குழந்தை!**

குழந்தை பசிக்காகத்தான் அழுகிறதா என்பதை உறுதிசெய்ய, தாயானவர் தன் விரலை நன்றாகச் சுத்தப்படுத்திக் கொண்டு, குழந்தையின் வாய்க்குள் வைத்தால், உடனே குழந்தை விரலைச் சப்பத் தொடங்கிவிடும். இதன்மூலம் குழந்தை பசியால் அழுகிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். பொதுவாக, குழந்தை போதியளவு பால் குடித்த பின்னர், இரண்டு மணிநேரத்துக்குள் அழுதால், அது நிச்சயம் பசிக்காக இருக்காது. வேறு காரணத்தால் அது அழக்கூடும். பசிக்கு அடுத்தபடியாகத் தாகம் எடுத்தால் குழந்தை அழும்.

பால் குடித்த பிறகு சிறுநீர் கழிப்பது, மலம் கழிப்பது போன்றவற்றால் உள்ளாடை, படுக்கை போன்றவை ஈரமாகி விடும்போது, அதைத் தெரியப்படுத்தவும் குழந்தை அழும். குழந்தை இரவில் அழுவதற்குப் பெரும் பாலும், இதுதான் காரணமாக இருக்கும். ஈரமான துணியை மாற்றிவிட்டால் அழுகை நிற்கும்.

அதிக கனமான ஆடைகள், இறுக்கமான ஆடைகள், உறுத்துகிற ஆடைகள் மற்றும் கால் கொலுசு, கழுத்து செயின், இடுப்பு ஆபரணங்கள் ஆகியவற்றாலும் குழந்தை அடிக்கடி அழலாம்.

தன்னுடைய உடலில் ஏதேனும் புதிதாக ஊர்வதுபோல் உணர்ந்தால், அப்போது குழந்தை அழலாம். எறும்பு, நுளம்பு, பூச்சி, பேன் கடித்தாலோ, சருமம் அரித்தாலோ குழந்தை அழும். புட்டிப்பாலில் சீனி கலந்து குழந்தைக்குக் கொடுக்கும்போது, அதில் சில சொட்டுகள் வாய் ஓரத்தில் ஒழுகியிருக்கும். சீனி வாசனைக்கு வரும் எறும்பு கடித்துவிடும். அப்போது குழந்தையின் சருமத்தில் ஒவ்வாமை ஏற்பட்டுச் சிவந்த தடிப்புகள் ஏற்படலாம்.

குழந்தைக்கு வயிற்று வலியும் காது வலியும் ஏற்படுவது மிகவும் சகஜம். குழந்தை தன்னுடைய தொடையை வயிற்றில் மடித்து வைத்துக்கொண்டு அழுதால், அதற்கு வயிற்றில் வலி இருக்கிறது என்று புரிந்து கொள்ளலாம்.

குழந்தைக்கு அளவுக்கு அதிகமாகப் பால் அல்லது திட உணவைக் கொடுத்துவிட்டால், வயிறு உப்பி அழ ஆரம்பிக்கும். இதுபோல் உணவுடன் அதிக காற்று வயிற்றுக்குள் சென்றுவிட்டாலும், குழந்தை அழும். தாய்ப்பால் கொடுத்து முடித்ததும், ஒவ்வொரு முறையும் குழந்தையைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு அதன் முதுகைத் தட்டிக் கொடுக்கவேண்டும். இதனால் குழந்தையின் வயிறு தாயின் தோளில் அழுந்திக் காற்று வெளியேறிவிடும். குழந்தையும் அழுவதை நிறுத்திவிடும்.

சிலவேளை குழந்தைக்குக் குடல் சொருகிக்கொள்ளும். இதனால் குழந்தைக்கு வயிறுவீங்கி, வலி தாங்கமுடியாமல் தொடர்ந்து அழும். அப்போது மலத்தில் இரத்தம் போகும். கூடவே வாந்தியும் வரும். உணவு ஒவ்வாமை காரணமாகவும் வயிற்றில் வலிவந்து குழந்தை அழும்.

காதின் உட்பகுதியில் செவிப்பறைக்குப் பின்னால் சீழ் இருக்கும்போது குழந்தைக்குக் காது வலிக்கும். அப்போது காதுப் பகுதியைத் தொட்டால், அதிகமாக அழும். செவிப்பறையில் சீழின் அழுத்தம் அதிகமாகி அதில் துளை விழுந்து, வெளிக்காதின் வழியாகச் சீழ் வடிந்து விட்டது என்றால், காது வலி குறைந்து விடும். இதன்பிறகு குழந்தை அழாது.

குழந்தைக்குக் குளிர் அடித்தாலும் அழும். புழுக்கமாக இருந்து உடல் வியர்த்தாலும் அழும். இந்தப் பிரச்சினைகளைச் சரி செய்தால் மட்டுமே குழந்தையின் அழுகை நிற்கும்.

ஆறு மாதங்கள் வரையிலும் குழந்தையின் தலை நிற்காதபோது, கழுத்துப் பகுதியை நல்ல பிடிமானம் கொடுத்துத் தான் தூக்கவேண்டும். இல்லையென்றால், குழந்தைக்குக் கழுத்து சுளுக்கி வலி ஏற்படும். அப்போது தொடர்ச்சியாக அழும். இதற்குச் சுளுக்கு எடுக்கிறேன் என்று சுய மருத்துவம் செய்யக்கூடாது. உரிய மருத்துவரை அணுகித் தகுந்த சிகிச்சையைப் பெற்றுக்கொண்டால் மட்டுமே சரியான தீர்வுகிடைக்கும்.

குழந்தை தொடர்ச்சியாக அழுவதற்குக் களைப்பு ஒரு முக்கிய காரணம். எந்த நேரமும் குழந்தையைத் தூக்கிவைத்துக் கொஞ்சுவது, விளையாடுவது, தொட்டிலில் போட்டு ஆட்டுவது, உறவினர் படையெடுப்பு போன்றவற்றால் குழந்தை களைத்துவிடும். இதனாலும் அழும். இந்தப் பழக்கங்களைக் குறைத்துக்கொண்டால் குழந்தை அழுவதும் குறையும்.

குழந்தைகளுக்குப் பொழுதுபோகாத போது, தனியாக இருக்கும்போது, விளையாடத் துணை கிடைக்காதபோது, தன்னை யாரும் கவனிக்கவில்லை என்று நினைக்கும் போது, இப்படிப் பல சந்தர்ப்பங்களில் குழந்தைகள் அழும். அப்போது குழந்தையைக் கைகளில் தூக்கி வைத்துக் கொண்டாலேயே அழுகையை நிறுத்தி விடும். அல்லது, குழந்தையுடன் பேசி, சேர்ந்து விளையாடி, சிரிப்பூட்டினால் அழுகை நிற்கும். குழந்தைக்கு உறக்கம் வந்தால்கூட, சிறிதுநேரம் அழும். அப்போது தாலாட்டுப் பாடி உறங்க வைப்பதுதான் ஒரே தீர்வு.


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்

வடபுலத்தான் எழுதுவது...




நல்லூர், வ.குணபாலசிங்கம்

# மருமகள் அமைவதெல்லாம்..!



வீடு நிறைந்திருக்கிறது... வீட்டின் நடு அறை ஹோல் முன் அறை எனப் பெரு மிதமாகப் பார்த்தாள் பரிமளம்... அவள் திருமணம்முடிந்து சீதனம்கொண்டு வந்த போதுகூட இப்படி பூரிப்பு இருக்கவில்லை! மகள் உமாவுக்குத் திருமணம்முடிந்து சீர்கொடுத்தபோது பிரிவின் பரிதவிப்பு... தான் தூக்கலாயிருந்தது, மூத்தமகன் பாலனுக்குக் கல்யாணம்முடிந்து மருமகள் லெட்சுமி... கொண்டுவந்த சீர்வரிசைதான் இதெல்லாம்...

முன் அறையில் அவள் கொண்டுவந்த சோபா... உள் அறையில் கட்டில், பீரோ, மிக்ஸி, கிரைண்டர், தையல் மெசின், அண்டா, குடங்கள் மேலே எவர் சில்வர் கப்புகள், செம்புகள் வரிசையாக எடுப்பாக அடுக்கி வைத்திருக்கும். குடும்பம் நடத்துவதற்கான பாத்திரங்கள் மெத்தை. வெல்வெட் தலையணைகள்!

நடுத்தர வர்க்கத்து குடும்பத்திலிருந்து வரும் பெண் என்னென்னவெல்லாம் கொண்டு வருவாளோ அதெல்லாம் கொண்டு வந்திருந்தாள் லெட்சுமி.... கூடத்து அறையில் மணமக்கள் அணிந்திருந்த மணமாலைகள் ஆணியில் தொங்குகின்றன. அவற்றின் மணம் கால் கொலுசுகளும் கைவளையல் ஓசையும் தலைநிறைய கனகாம்பரமும் மல்லிகையும் மணக்க லெட்சுமி அதைச் செய்கிறேன் இதைச் செய்கிறேன்... என ஓடி ஓடிச் செய்யும் காரியங்கள்...
"நீ.. இரும்மா... நான் பார்த்துக்கறேன்... போகப் போக எல்லாவற்றையும், தானே கவனிக்கப்போறே"

"நீங்க எங்க வீட்டிலே எல்லா காரியங் களையும் நான்தான் பார்ப்பேன்: உட்கார்ந்து என்னென்ன... செய்யணும் என்று... சொல்லுங்க... கச்சிதமா செஞ்சிடுறேன்... கையைக் கட்டிக்கிட்டு சோம்பேறியா இருக்கிறது... என்னவோ போலிருக்கு...." புதுப்பெண் என்னும் மெட்டு இல்லாமல் மாமியார் செய்யும் காரியங்களை மறித்துக்கொண்டு லெட்சுமி செய்யும்போது அத்தைக்கு பூமியில் கால் பதியவில்லை.
உடம்பெல்லாம் பூரித்துக் கொட்டியது.

சாம்பாருக்குக் கடலைப் பருப்பு... சரியாயிருக்குமா... ரசத்துக்கு தக்காளி போதுமா, கீரைக்கடைச்சலுக்கு மாங்காய் நல்லதா? பாகற்காய் கறிக்கு கொட்டைப் புளி நல்லதா?" அல்லது கொறுக்காப்புளி நல்லதா? ஒவ்வொன்றுக்கும் அத்தையிடம் மருமகள் வந்து விபரம் கேட்கும்போது சட்டம்பியார் மாதிரி திருத்தம்... செய்வது ஆமோதிப்பது... பாராட்டுவது இதெல்லாம் இந்தப் புது அனுபவமெல்லாம் எல்லா மாமியாருக்கும் கிடைக்குமா? என்ன புண்ணியம் பண்ணினேனோ இப்படி ஒரு மருமகள் கிடைத்திருக்கிறாள்! நாற்காலியை விட்டு ஓர் அடி மேலேதான் உட்கார்ந்தாள் பரிமளம்.

கணவர் சங்கர் சாப்பிடும்போது, "சமையல் எப்படி இருக்கு" ஆவலாகக் கேட்டாள் பரிமளம். ரசம் பிரமாதம், வாழைப்பூ வறுவல் இப்படி ருசியாக ஒரு போதும் சாப்பிட்டதில்லை. பாகற்காய் கறிக்குப் புளிதான் கொஞ்சம் கூடிவிட்டது" என்றவர் "என்ன விசயம்? எப்பவும் இல்லாமே கேட்கிறே?"

"மருமக கைப்பக்குவம் அதுதான் கேட்டேன்.

அதுதானே பார்த்தேன்... எலி அம்மணமா ஓடுதேன்னு! உன் லட்சணம்னா கேட்க மாட்டியே..." மனைவியை விசமாகச் சீண்டினார் சங்கர். அதுதான்... பாவம் நோஞ்சானா வந்து பயில்வானா ஆகி இருக்கிகளாக்கும்! எதற்கும் குறை கண்டுபிடிக்கும் கணவருக்குக்கூட மருமகளின் சமையல் பிடித்திருப்பதில் பரமதிருப்தி. கடைசிப் பையன்கள் வந்ததும் அம்மாவை சாப்பாடு... போடச் சொல்வார்கள்... "ஏன் நான் போட்டால் சாப்பிடமாட்டார்களா" என்று வலிய சாப்பிட வைப்பாள் லெட்சுமி.

மருமகள் வந்ததிலிருந்து மாமியார் சோப்பேறியாகிவிட்டாள்.

அதிகாலை எழுந்து குளித்து வாசல் பெருக்கி சாமிப்படங்களுக்கு பூப்போட்டு குத்துவிளக்கேற்றி சூடமேற்றி வணங்கி நெற்றி நிறையத் திருநீறும், குங்குமம் பளிச்சிட தலையப் பின்னியிருக்கும் முடியிலிருந்து நீர்சொட்ட அன்றலர்ந்த தாமரையாய் அவளைப் பார்க்கும் போதெல்லாம் ஏற்றிவைத்த பாவை விளக்கும் இவளும் ஒன்றாக இருக்கிறாள்? கிணற்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டே.... அடுப்பு காரியத்தையும் பார்த்து ரீ போட்டுக் கொடுத்துவிட்டு காலைப் பசியாற ஏதோ ஒன்றைத் தயார் பண்ணிவிடுவாள். மிக்ஸி இருக்கும்போது அம்மியில் சட்னி அரைப்பாள்... ஏம்மா சிரமம் என்றால் "இப்பா அரைப்பதில்தான் ருசி இருக்கும்" என்பாள்... உண்மைதான்! பணம் செலவழித்துச் செய்யும் பண்டங்கள் ருசியாகச் சாப்பிடத்தானே!

இதற்கிடையில் துணி துவைப்பது எனச் சுழலும் அவளை நிறுத்தி டி.வி.யில் ஒரு தொடர்வருகுது அதைப்பாரேன். வாழ்க்கையை அப்படியே, காட்டுறாங்க! என்னும் மாமியாரை... அமைதியாக "ஐயோ அதெல்லாம் பார்த்தால் நமக்குள்ளே சண்டை போட வைச்சிடுவாங்க" என்று வேறு காரியம் பார்க்கப் போய்விடுவாள்.

வீட்டுக்கு வருகிறவர்களிடம். தெருவில் உள்ளவர்களிடம் பழகியவர்களிடம் தன் மருகளைப் பற்றி வாய் ஓயாமல் சொன்னாள். இவள் மகளுக்குப் பதிலாக வந்திருக்கும் மருமகள். அதாவது மருமகள் பத்துமாதம் சுமந்துபெற்ற மகள். திருமணமானதும் புருசன் குடும்பத்தின் பெயர் சொல்லப்போய் விடுகிறாள். ஆனால் எங்கிருந்தோ வந்த் பெண் இங்கே ஒன்றாகிப் பரம்பரையாய்க் கலந்துபோகிறாளே! இவள்தான் இந்த வீட்டுப்பெண். இவள் பெயரைத்தானே பிற்காலச் சந்ததி சொல்லும். பெயர்கூட எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கிறது! செல்வமும் அழகும் சேர்ந்த இலட்சுமி!

இளம் வயதென்றாலும் உடம்பு இரும்பாகவா இருக்கும்? அதிகாலையில் குளித்து ஈரத்தலையுடன் திரிந்த பெண்ணுக்கு ஒரு நாள் காய்ச்சலில் போட்டுவிட்டது. டாக்டரிடம் போவோம் என்றாள் ஒரு நாளில் சரியாகிவிடும்... ஊசி மருந்து மாத்திரைன்னா எனக்குப் பயமா இருக்குன்னு மறுத்துவிட்டாள். சம்மந்தக்காரர்கள் வந்துவிட்டார்கள்! உங்களுக்கு... யார் சொன்னா?"
"மாப்பிள்ளைதான் போன்... பண்ணினார்... இப்ப என்ன? போன் பண்ணியிருக்கீங்க?"

"சொல்லாமே இருக்கலாமா? இதைப் போயி பெரிசு பண்ணலாமா?" அம்மாவும் அப்பாவும் வீட்டிற்குக் கூப்பிட்டார்கள். ரெண்டு நாள் வந்து உடம்பை கவனிச்சுட்டு ஓய்வா வருவே"

"எனக்கு என்ன அப்படி? இதெல்லாம் சகஜம்தானே. இண்ணைக்குச் சரியாயிடும். ஒரு வேலைகூடப் பார்க்கக் கூடாதுன்னு அத்தை உத்தரவு போட்டுவிட்டு எல்லா வேலைகளையும் ஒத்தையிலேயே செய்றாங்க" இடைமறித்தாள் பரிமளம்.

"நான் என்ன வேலை செய்யாதவளா? ஒரு மாதத்துக்கு ரெஸ்டா இரு நான் பார்த்துக்குறேன்.

காய்ச்சலுடன் எழுந்து கோப்பி போட்டுக் கொடுத்தாள். அடுத்தவாரம் வர்ரேன்னு குடும்பத்தாரை அனுப்பிவைத்தாள்.

தன் வீட்டுக்கு கணவனுடன் போனாலும் அரைநாளில் திரும்பிவிடுவாள். பக்கத்தில் உள்ள உறவினர்கள், பிறந்ததிலிருந்து பழகியவர்கள்கூடப் படித்த சினேகிதிகள் என்று எல்லோரையும் ஒரு சுற்றுப்பார்த்து கொண்டாடிவிட்டு புகுந்த வீட்டில் சாப்பிட வருவாள். ஒரு நாள்கூட அவர்களுடன் இருந்துவிட்டு வந்திருக்கப்படாது."

இப்படியெல்லாம் இருந்த லெட்சுமி இப்ப அடிக்கடி பிறந்தவீட்டிற்கு தொலைபேசியில் பேசினாள். அடிக்கடி பிறந்தகம் போனாள். போகிறவள் ஒரு நாள் கழித்துவருவாள். இப்போதெல்லாம் அதிகாலையில் எழும்பு வதில்லை. வீடு வாசல்கூட்டி தண்ணீர் தெளிப்பதில்லை. எட்டு மணிக்கு எழும்பும் மருமகளைப் பார்த்து உடம்புக்கு முடியலியா...? டாக்டரிடம் போவோம் வா என்று மருகினாள். "அதெல்லாம் வேணாம் உடம்புக்கு என்னவோ போல் இருந்திச்சு.. அதுதான் அசந்துட்டேன்..."

ஒருவேளை முழுகாமே இருக்காளோ என்று பரிமளத்துக்கு சந்தேகம்... அப்புறம் பார்க்கும்போது அதெல்லாம் இல்லை. போகப் போக மருமகளின் நடவடிக்கைகளில் மாறுதலைக் கண்டாள். வீட்டுவேலைகளைச் சரியாகப் பார்ப்பதில்லை. கேட்டாள் மௌனம். முகத்தைத் திருப்பிக் கொண்டுபோவது... கலகலப்பில்லை... கணவரிடமும் சரியாகப் பேசுவதில்லை. கேட்டால் எரிந்துவிழுவது! லெட்சுமியின் போக்குப் புரியவில்லை... என்ன நடந்திருக்கும் என... ஆராய்ந்தார்கள்... அவள் மனம் புண்பட நடந்திருப்போமோ... பேசி இருப்போமோ... தங்களையே சந்தேகித்துக் கொண்டார்கள்.

மகிழ்ச்சியும் குதூகலமும் பறந்த அந்த வீட்டில் சந்தேகம் பதுங்கித்திருந்தது. ஆசை ஆசையாக இருந்த மருமக சாப்பிடாமல் படுக்கையில் கிடக்க நாம் எப்படி சாப்பிடுவது என்று சாப்பாட்டை வைத்துக்கொண்டு பட்டினி கிடந்தார்கள். போன் பண்ணி அவளின் குடும்பத்தாரை வரச்சொல்லி அவளின் மன நிலையை அறியச்சொன்னார்கள்... கடைசியில் இரண்டு நாட்கள் இருந்து வரட்டும் என்று கூட்டிப்போனார்கள்.

************

ஒரு வாரமாகியும் மருமகள் வராமல் போகவே மகன் பாலனை அனுப்பினார்கள். போனவன் உடன் திரும்பி வந்து "உடம்புக்கு முடியலையாம்... பத்து நாள் இருந்துட்டு வர்றேன்று சொல்லுது..." அவனுக்கும் ஒரே குழப்பம். அழையா விருந்தாளிகளாய் தயக்கத்துடன் பரிமளமும் சங்கரும் லெட்சுமி வீட்டுக்குப் போனார்கள். எல்லோரும் தாராள மாய் பேசினார்கள். மருமகள் இறுகிப் போயிருந்தாள். நயமாகிப்பேசி அவளை அழைத்துவரப் போனவர்கள் முகம் வாடிவந்தார்கள். இரண்டு நாட்களில் மனைவியை அழைத்துவருகின்றேன் என முடிவுடன்போன பாலன் முகம்தொங்கிப் போய் வந்தான். அம்மா அப்பா தம்பி சூழ என்னவெல்லாமோ கேட்டார்கள். அந்தனைக்கும் கம்மென்றிருந்தவன் முடிவில் பெருமூச்சுடன் சொன்னான் "தனிக்குடித்தனம்தான் வருவாளாம்"

இங்கே என்ன குறை? அதிர்ந்து கேட்டார்கள். "இதற்குப் பதிலே... சொல்ல மாட்டேன்கிறாள்.. எல்லோரும் சாதுவாக இருந்ததால் வந்த வினையா இது? புகுந்த வீட்டின்... அதிகாரமும் கட்டுப்பாடும் இல்லாததால்தான் இந்தப் பிரிவா? அன்புக்கு ஆட்பட்டவர்கள் நிலைத்து இருப்பார்களே! இங்கு இருப்பவர்கள் காட்டியது அன்பில்லையா? இதெல்லாம் இல்லை என்றால் அவள் கனிவாக நடந்ததெல்லாம் பாசாங்கா?

பாலன் போராடினான். மனைவியா பெற்றவர்களா! பெண்ணுக்கு வரவேண்டிய தர்மசங்கடம் ஆணுக்கு திரும்பவும் மனைவி யிடம் போய் பிரிவுவேண்டாம் என மன்றாடினான். அவளோ குப்புறப்படுத்துக் கொண்டு திரும்பிப்பார்க்காமல் அழுதாள். பெண்களின் கண்ணீருக்கு எப்போதுமே அதிக விலைதான். அந்த விலை கொடுக்கத் தயாராகிவிட்டான் பாலன்.

ஆறு வருடங்களுக்கு முன்பு நடந்தது பெற்றோர்களைப் பற்றி கணவன் என்னவோ சொல்லிவிட்டார் என கோபித்துக்கொண்டு பிறந்தகம் வந்துவிட்டாள். பரிமளத்தின் மகள் உமா மருமகன் மன்னிப்புக்கேட்டு பல முறைகள் வந்தார். விசயம் தெரிந்த பரிமளம் திருமணம்முடித்து மூன்று குழந்தைகளுக்குத் தாயானபின்னும் தன் குடும்பம், கணவன், பிள்ளைகள் என்று பாசம் பிரிந்துபோன பின்னும் பெற்றவர்கள்மீது மகள் வைத்திருக்கும் பாசத்தைக் கண்டு உருகிப்போனாள். கால இடைவெளிகூட அவளுக்கு மனமாற்றத்தை ஏற்படுத்தவில்லையே?

இப்போது மகன், மனைவி சொன்னாள் என்பதற்காக உறவைப் பிரித்துக்கொண்டு போகிறேன் என்கிறானே... மகளுக்குள்ள உணர்வு இவனுக்கு ஏன் இல்லை? ஒரே வயிற்றில் பிறந்த இரண்டு பேர்களின் நிலை அன்று தனிக்குடித்தனம். வாழ்வதற்குத் தானே கல்யாணம் பண்ணி வைத்தோம். மனவிரிசல்களை அதிகமாக்கிக் கொண்டு பகையாவதைவிட மருமகள் இஸ்டப்படி போவதுதான் நல்லது. பரிமளம் சங்கர் போய் வாழ்த்திவிட்டு வந்தார்கள்.

************

மறுநாள் வேலைக்குப் போய் இரவு வீடு திரும்பும்போது நல்ல் மழை... தொப்பலாக நனைந்து வந்தவர் உடம்பை துடைத்துவிட்டு உள்ளே வந்தபோது... மனைவி பித்துப் பிடித்து உட்கார்ந்து இருப்பதைக் கண்டு திடுக்கிட்டு "என்ன... ஏன் இப்படி இருக்கே?" உடம்புக்கு முடியலியா?

கணவரின் கேள்விக்கு பதில் சொல்லாமல் வீட்டைச் சுற்றிப் பரிதாபமாகப் பார்த்தாள். கட்டில்... மெத்தை... குசன்... சோக்கேஸ் இப்படி எல்லா இடமும் வெறிச்சோடிக் கிடக்கிறது.

பரிமளம் வெளியில் பார்த்தாள் மழை நின்றுவிட்டது. கனத்த மழை... ரொம்பநேரம் பெய்யாது. நீ கல்யாணம் முடித்துவந்ததை நினைத்துப் பார்... அப்படித்தானே இதுவும் இதுக்குப் போய் மனசை அலையவிடுறியே. மனச எப்பவும் இளகியே இருக்கக்கூடாது.

கல்லாகவும்.... சிலநேரம் இருக்கணும். பக்கத்து வீட்டுக்காரரிடம் பாசமாய் இருக்கோம்... என்பதற்காக நடுவிலுள்ள கதவை எடுத்தா விடுகிறோம்.

சுற்றிலும் பறிபோன மாதிரி இருப்பது அவர் மனதை கப்பென்று பிடித்திருப்பதை வெளியில் காட்டிக்கொள்ள முடியுமா?

பாலன் பிறந்தபோது ஞாபகம் வந்தது. பரிமளத்துக்கு பாலன் பால் குடித்த மார்பில் பால் கட்டிக்கொண்டது... வலி விண்விண் என்று தெறிக்கிறது. குழந்தை பால் குடித்துத் தீர்க்கவேண்டும். இல்லையென்றால் வெளியில் பீய்ச்சி... அவஸ்தையைப் போக்கவேண்டும்... இப்போது என்ன செய்வது.

மடியில் கிடந்து தேம்பும் மனைவியின் முதுகை ஆதரவுடன் தாவிக்கொண்டிருக்கும் சங்கர்... பெண்களுக்கு மட்டும்தானா கண்ணீர்வரும்.

**உண்மை கலந்த கற்பனை!**

# ஒளி பிறந்தது; வழி பிறக்குமா?

(09 ஆம் பக்கம் தொடர்ச்சி)



இவர் வழியில் புத்தர், முஹம்மது நபி, காந்தி இன்னும் எத்தனையோ மதத் தலைவர்களும் புதிய சிந்தனையாளர் களும் மூடநம்பிக்கைகளில் மூழ்கிக் கிடந்த மக்களை மீட்பதற்காக எண்ணற்ற நல்ல் கருத்துக்களைக் கூறிச்சென்றார்கள். அவர்களுக்கு மாற்றீடாக கிடைத்தவைதான் என்ன? அவமானம், புறக்கணிப்பு, மரண தண்டனைகள். ஆனால் அவர்கள் இவ்வுலகை நீத்தபின்னரே உலகம் அவர்கள் கருத்துக்களை ஏற்றுக் கொண்டுள்ளது. அவர்கள் நினைவு-களைக் கொண்டாடுகிறது. ஆயினும் என்ன? எல்லாம் வெறும் பேச்சளவில் மட்டுமே! மனிதன் மாறவே இல்லை.

"உன்னைப் போல் உன் அயலானை யும் நேசி" என்று அன்பையும், "ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் காட்டு" என்று பொறுமை, விட்டுக்கொடுப்பு, மன்னிப்பு என்பவற்றையும், பசித்தவனுக்கு உணவும், ஆடையற்றவனுக்கு ஆடை யும், வீடற்றவனுக்கு அடைக்கலமும் தாகமாய் இருப்பவனுக்குத் தண்ணீரும் கொடு என்று மனிதநேயத்தையும் யேசுக் கிறிஸ்து கற்பித்தார். மாறாக சிலுவையில் அவரின் இறுதிமூச்சு அடங்குகையில் அவருக்கு ஏற்பட்ட இறுதித் தாகத்துக்குக் கூட நீர் மறுக்கப்பட்டது. கசப்பான காடியே அவர் நாவில் பூசப்பட்டது. ஆயினும் அந்த மனிதனையும் மன்னித்தார் யேசு. தன்னை மீட்க வந்தவருக்கே மனிதன் தண்ணீரை மறுத்தானெனில் சக மனிதரெல்லாம் எம்மாத்திரம்.

"ஆலயத்துக்கு வழிபடச் செல்கையில் 'உன் காணிக்கையைப் பீடத்தில் வைத்து விட்டு உன் சகோதரன், அயலவன், உறவினன் இப்படி நீ தள்ளி வைத்திருப்பவர்களுடனெல்லாம் ஒப்புரவாகி பின்வந்து கடவுளுக்கு காணிக்கையைச் செலுத்து என்று கூறப்பட்டது. இவையெல்லாம் முடிகிற காரியங்களா? ஆலயம் செல்கிறோம். மறையுரைகள் கேட்கிறோம். பின்னர், செவிமடுத்தவற்றை ஆலய எல்லைக் குள்ளேயே விட்டுவிட்டு இல்லம் திரும்பியதும் "மனம் எனும் வேதாளம் பழையபடி முருக்கமரத்தில் ஏறிக்கொள்கிறது.

பழிக்குப் பழி, இரத்தத்துக்கு இரத்தம், அயலான் குடும்பம் பற்றி குறளி பேசுதல், கணவன் மனைவிக்கிடையே பிரிவை ஏற்படுத்தல், உடன்பிறப்புக்களிடையே பகையை மூட்டுதல், மாமி - மருமகளுக்கு இடையில் விரிசலை ஏற்படுத்தல், அண்டை அயலாருக்கிடையிலும் உறவினருக்கிடை யிலும் சிண்டு முடிதல், இப்படி அடுத்தவன் குடிகளைக் கெடுத்து அவர்கள் துன்பங் களில் மனிதன் தான் குளிர்காய்ந்து கொண்டிருக்கின்றான். நாளைக்கு தனது குடும்பத்திற்கும் ஒரு துயரநிலை ஏற்படும் என சிறிதளவேனும் அவன் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

பணம் பணம் என அலைகிறான். அடுத்தவன் எக்கேடு கெடினும் பரவாயில்லை. நான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற சுயநலப் பேய் மனிதனைப் பிடித்தாட்டுகிறது. ஏழை எளியவருக்கு இரங்குவதில்லை. மாறாக இழிவு செய்கிறான். அநியாய வட்டி பெறுகிறான். இல்லாத ஒருவனிடம் உள்ள சொற்பத்தையும் மறிக்கிறான். முதியோரை மதிப்பதில்லை. பெற்றோரின் அறிவுரையைக் கேட்பதில்லை. ஒரு வயதுக்கு மேல் அவர்களைக் கவனிப்பதும் இல்லை. புறக்கணித்தும் விடுகின்றனர். பெரியோரைப் கனம் பண்ணுவதில்லை. மாறாக காட்டிக் கொடுப்பு, போட்டுக்கொடுப்பு, அடுத்தவன் முன்னேற்றத்தில் தடைக்கல்லாயிருத்தல், திறமை உள்ளவனை ஓரம் கட்டுதல், ஒருவனின் திறமைகளை இருட்டடிப்புச் செய்தல். உயர நினைத்து உழைப்பவனை அடித்து மட்டம் தட்டுதல், எதையும் பணத்தாலும் செல்வாக்கினாலும் வன்முறை. வக்கிரமான பேச்சுக்கள் செயல்களால் சாதித்துவிட முடியும் மென்ற தப்பான சிந்தனைகளுடன் அகமெங்கும் இருள்சுமந்து போலியான முகமூடிகளுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த முகமூடி மனிதர்கள் திருந்துவது எப்போது?

தற்காலத்தில் உலக நாடுகளெங்கும் வன்முறைகள் தலைவிரித்தாடுகின்றன. இன்று விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் எவ்வளவு துரிதகதியில் வளர்ச்சி கண்டுவருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஏன் அவற்றுக்கும் பல படிகள் மேலாக வன்முறைக் கலாசாரம் உலகை ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிறது. மண்ணாசை, பொன் ஆசை, பெண் ஆசை உச்சந் தலைக்கேறி பல அராஜ வக்கிரமான செயற்பாடுகளில் மனிதன் இறங்கியுள்ளான். பூமியெங்கும் போட்டி, பொறாமை, கொலைகள், தற்கொலைகள், கற்பழிப்பு, சிறுவர் துஸ்பிரயோகம், ஆட்கடத்தல், போதைப்பொருள் பாவனை இப்படி மனிதனின் குற்றச்செயல்களின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது.

உலகின் ஒரு பாதி மனிதன் சந்திரனிலும் செவ்வாயிலும் குடியேற வழிதேடிக் கொண்டிருக்க மற்றொரு பாதி மனிதன் குடியிருக்கும் உலகையே சின்னாபின்ன மாக்கி அழித்துக்கொண்டிருக்கின்றான். மதச் சண்டை, இனச்சண்டை, சாதிச் சண்டை யென அரிவாளையும், துப்பாக்கியையும் கையிலேந்தி, கொலைவெறியுடன் தெருக்களில் அலைந்து திரிகிறான். ஆண்கள், பெண்கள், சிறுவர், முதியோர் என இவனது ஆயுதங்களுக்கு பேதமெதுவும் கிடையாது. ஈவிரக்கம் எதுவுமின்றி எல்லோரையும் வெட்டிச் சாய்க்கின்றான். ஒரு கையில் அரிவாளும், மறுகையில் மனிதத்தலையுமாக சகிக்க முடியவில்லை. மனித மிருகத்தின் கோரத் தோற்றம்.

அநீதியை அழிக்கவந்த (மகிடாசுரனை அளித்த காளி) காளியின் உருவே கண்முன் தோன்றுகின்றது. மனிதன் தான் கண்டுபிடித்த ஒரு ஆயுதத்தைப் பரிசோதனை செய்து பார்ப்பதே மனிதனின் உடலிலும் உயிரிலும்தான். தீட்டிய மரத்தில் சுடர் பார்ப்பதுபோல் மனித உயிர் இன்று வெறும் மலினப்பொருளாகிவிட்டது.

எதிரிக்கு எதிரி நண்பன் எனக் கூட்டுச்சேர்ந்து செயற்படுவதும், தனக்கு, கண்களும் போனாலும் பரவாயில்லை. எதிரிக்கு ஒரு கண்ணாவது அவிய வேண்டும் எனநினைத்து செயற்படுவது மான மனப்பான்மை என்று மனிதனை விட்டு அகலும்?

இத்தகையதான வன்முறைச் சமூகத்தினை மீட்டெடுப்பது யார்? எதிர்காலம் எப்படி இருக்குமோ என்ற ஏக்கத்தோடும் அவற்றுள்ளும் சிறிதும் பெரிதுமான நம்பிக்கைகளோடும் மலர்ந்திருக்கும் இப்புத்தாண்டில் அனைவருக்கும் நல்லதே நடக்க வாழ்த்துவோம். உலகத் தலைமைகளும் உள்நாட்டுத் தலைமைகளும் மட்டுமல்ல நாட்டின் ஒவ்வொரு நிர்வாக அலகு களிலும், பாடசாலைகள், ஆலயங்கள் குறிப்பாக குடும்பங்களின் ஒவ்வொரு அங்கத்தவரும் மனதில் நல்மாற்றங் களை புத்தாண்டின் உறுதிமொழியாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

வர்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மாட்டுத்தொழுவங்களில் யேசு பிறப்பாரா? இல்லை அக்குடும்பங் களின் அங்கத்தவர்களில் மாற்றம் உண்டானால் அன்றோ ஒளி பிறக்கும். புதுவருடத்தில் தொடர்ந்து உழவர் திருநாளில் எல்லோரும்கூடி மகிழ்ந்து புதுப்பொங்கலை பகிர்ந்துண்டு புதிய வாழ்வுபெற உலகில் மனிதநேயமும் சாந்தியும் சமாதானமும் ஏற்படவும் வன்முறையான ஆயுதக் கலாசாரம் ஒழியவும் திடசங்கற்பம் கொள்வோம். ■



# பலஸ்தீனர்களுக்கு 2015 தரப்போவது என்ன?

கடந்து சென்ற 2014ஆம் ஆண்டு, பலஸ்தீனர் களைப் பொறுத்தவரை, நாடு எனும் அங்கீகாரம் இன்றி, அமைதிக்கான முன்னெடுப்புகள் இன்றி, நீதி கிடைக்காமல் கடந்துசென்ற ஆண்டு! கரைந்துபோன கனவுகளும் உடைந்துபோன உறுதிமொழிகளும் வாய்ப் பேச்சுகளும்தான் அவர்களுக்கு மிஞ்சின. 1993இல் வாஷிங்டன் நகரில் ஓஸ்லோ ஒப்பந்தத்தில் பலஸ்தீனர்களின் பிரதிநிதி யாக, பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் (பி.எல்.ஓ.) தலைவர் யசீர் அரபாத் கையெழுத்திட்டபோது, எதிர்காலம் குறித்து பலஸ்தீனர்களிடையே ஏற்பட்ட நம்பிக்கை மிகுந்த கனவுகளை, சென்ற ஆண்டில் பலர் நினைவுகூர்ந்தனர்.

ஓஸ்லோ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஓராண்டுக்குப் பிறகு, ஒரு வெற்றிவீரராக காஸா பகுதிக்குவந்த யசீர் அரபாத்துக்கு, ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் மகிழ்ச்சி நிறைந்த வரவேற்பை அளித்தனர். இஸ்ரேலியர் களின் ஆக்கிரமிப்பு விரைவில் முடிவுக்கு வரும் என்று அவர்கள் நம்பினார்கள்.

யசீர் அராபத்தின் தலைமையை ஏற்காதவர் களும்கூட காஸா பகுதிக்கு அவர் வந்ததை ஒருமனதாக வரவேற்றனர். ஏனெனில், அவரது வரவு ஒரு நல்ல தொடக்கமாகவே கருதப்பட்டது. அவரது வரவை எதிர்த்தவர்கள் ஹமாஸ் இயக்கத்தினர் மட்டுமே.

அந்தச் சமயத்தில் காஸா பகுதியில், 7 இலட்சத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் வசித்துவந்தார்கள். 7 ஆண்டுகளாக அவர்கள் முன்னெடுத்த இன்டிபடா எழுச்சிப் போராட்டத்தின் காரணமாக பலஸ்தீனர்களின் ஒட்டுமொத்தப் பிரதிநிதியாக பலஸ்தீன விடுதலை இயக்கத்தை இஸ்ரேல் அங்கீகரித்தது. இதன் தொடர்ச்சியாக யசீர் அரபாத்தால் காஸா பகுதிக்குத் திரும்பவும் முடிந்தது. ஓஸ்லோ ஒப்பந்தத்தைத் 'துணிச்சலின் அமைதி' என்று வர்ணித்த யசீர் அரபாத், இந்த ஒப்பந்தத்தின்மூலம் இறையாண்மை பெற்ற ஒரு நாட்டை உருவாக்குவதுடன் ஜெருசலேம் நகரை அதன் தலைநகராக்க முடியும் என்றும் நம்பிக்கையுடன் குறிப்பிட்டார்.


சிங்கப்பூர் அல்லது ஹொங்கொங்குக்கு இணையாகப் பொருளாதார வளம்மிக்க நாடாக அதை முன்னேற்ற முடியும் என்றும் அவர் நம்பினார். அவரது வார்த்தைகள் நிஜமாகும் என்று பலஸ்தீனர்கள் பலர் நம்பிப் பரவசமடைந்தார்கள். ஆனால், அந்த ஒப்பந்தத்தின் ஷரத்துகள் அமலுக்கு வரப்பெற்று, பலஸ்தீன அரசு நிர்வாகம் ஏற்படுத்தப்பட்ட பின்னர்தான், அந்த ஒப்பந்தம் ஒரு கண் துடைப்பு என்று தெரியவந்தது. அந்த ஒப்பந்தம் பலஸ்தீனர்களுடைய சுதந்திர வாழ்வின் கழுத்தை நெரிப்பதை யசீர் அரபாத்தும் அவரது அமைப்பினரும் உணரும் முன்னரே, இஸ்ரேலியர்களின் ஆக்கிரமிப்பும் அவர்களைச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயமும் பலஸ்தீனர்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

யசீர் அரபாத் சந்தேகத்துக்குரிய வகையில் மரணமடைந்து 10 ஆண்டுகளுக்குப் பின்னர், பலஸ்தீனர்களுக்கான நாடு என்று ஒன்று மிச்சம் இருக்கவில்லை. இடிபாடுகள் நிறைந்த காஸா பகுதியோ முற்றுகைக்குட்பட்டிருக்கிறது. அகதிகள் மீண்டும் திரும்புவதற்கான வாய்ப்புகள் அருகி விட்டன. ஆக்கிரமிப்புப் பகுதிகளைத் திரும்பப் பெறுவதற்கான அறிகுறிகள் இல்லை. ஜெருசலேம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளைத் தங்களுடன் இணைத்துக்கொள்ளும் முடிவை மாற்றிக்கொள்ள இஸ்ரேல் தயாராக இல்லை.

பலஸ்தீன நிலப் பகுதிகளை ஆக்கிரமிப்பதை நிறுத்திக்கொள்ளுமாறு ஐ.நா. தீர்மானங்கள் பலவற்றில் வலியுறுத்தப்பட்டிருந்தும் அவற்றை ஏற்க இஸ்ரேல் முன்வரவில்லை. மாறாக, அரபுப் பகுதி ஜெருசலேத்தைத் தங்கள் நாட்டுடன் இணைத்துக்கொண்ட இஸ்ரேல் அரசு, யூதர்கள் மட்டும் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளை அந்தப் பகுதியில் நிறுவியிருக்கிறது. கையகப்படுத்தப்பட்ட அரபுநிலப் பகுதிகளில், பல மைல்கள் தூரத்துக்குச் சாலைகளையும் அமைத்திருக்கிறது.

சர்வதேசச் சமூகம்தொடர்ந்து மௌனம் சாதிக்கும் சூழலில், பாலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேல் தொடர்ந்து ஆக்கிரமிப்புகளை நிகழ்த்திவருகிறது. காஸா பகுதி தகர்க்கப்படு வதுடன் இனப்படுகொலைகள் நடத்தப்படு கின்றன. ஐ.நா. தீர்மானங்களையும் சர்வதேசச் சட்டங்களையும் மீறிவரும் இஸ்ரேல், தொடர்ந்து அடாவடியாகச் செயற்பட்டுவருகிறது. அமெரிக்கா வின் நிபந்தனையற்ற ஆதரவு கிடைக்கும் வரை, பலஸ்தீனர்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் திட்டம் எதுவும் தற்சமயம் இஸ்ரேலிடம் இல்லை.

பிரிட்டனின் காலனி நாடாக இருந்த அனுபவம்கொண்ட அமெரிக்காவில் வசிக்கும் அரசியல் தலைவர்கள், பலஸ்தீனர்களின் உரிமையை நசுக்கும் இஸ்ரேலின் நிலைப் பாட்டை ஆதரிக்கக்கூடாது. "எல்லா மனிதர் களும் சமமாகவே உருவாக்கப்பட்டவர்கள். மனிதர்களை 'உருவாக்கியவர்' அளித்த அந்நியப்படுத்த முடியாத உரிமைகளை, வாழ்வை, சுதந்திரத்தை, மகிழ்ச்சியின் நோக்கம் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்" என்று பிரிட்டனிடமிருந்து விடுதலை பெற்றபோது அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டது. அந்தக் கொள்கைகளை அமெரிக்கர்கள் மனச்சாட்சியுடன் நிறைவேற்றவேண்டிய நேரம் இது.



## கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தேவி

# கண்ணகியின் முற்பிறப்பு

பூம்புகார் பகுதியிலே கப்பல்மூலம் வாணிபம் செய்துவரும் மானாய்கன், மாசாத்துவன் என்னும் இரு வணிகர்களும் மைத்துனர் உறவுகொண்டு பெரும் வாணிபம்செய்து பொருளீட்டியதுடன் இல்லை என்பவர்களுக்கும் ஈந்து சிறப்புடன் வாழ்ந்துவந்தனர்.

இவர்களுக்கு மன்னரின் செல்வாக்கும், ஆதரவும் இருந்ததால் மாசாத்துவன் பெரும் செல்வனாக விளங்கினான். இருவரும் ஒரு நாள் வழக்கம்போல தம் வாணிபத்தை முடித்துக் கொண்டு கப்பலில் வரும் போது பேழை ஒன்று நீரில் மிதந்து வருதைக்கண்டனர்! அப்பேழையினுள் அழகிய ஒரு பெண் குழந்தை இருப்பதைக் கண்டனர். மானாய்கன் அக்குழந்தையை எடுத்துக் கண்ணகி எனப் பெயர் சூட்டித் தன் மகளாகக் கொண்டான்.

மாசாத்துவப் பெருவணிகன் திருமாவளவன் என்னும் பாண்டிய மன்னனின் செல்வாக்கைப் பெற்றதால் பெரும் புகழ் ஈட்டிச் சிறந்து விளங்கினான். மாசாத்துவனின் மகனே கோவலன்! ஆவான்.

பன்னிரண்டு வயதிலே கண்ணகி மாசறுபொன் எழிலுடன் பொலிந்து விளங்கினாள். காலமும் கனிந்துவிட்டது.

கோவலனின் அறிவு, அழகு, வண்ணம் இவற்றைக் கண்ட கண்ணகி இவன் செவ்வேளோ! என எண்ணிக் காதல் கொண்டாள்! கோவலனும் கண்ணகியைக் கண்டு இவள் திருமகளோ! இவள் பேரழகியாக இருக்கிறாளே! என எண்ணி மையல் கொண்டான்.

மானாய்கனும், மாசத்துவனும் தங்கள் மக்களின் மன இசைவு கண்டு மகிழ்ந்து கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமண ஒழுங்குகளைச் செய்து முடித்தனர். திருமண வைபவத்தன்று மாதவியின் நடன நிகழ்வு நடைபெற்றது. விதிகூட்ட நாட்டியதாரகை தவியின் பேரழகில் மயங்கிய கோவலன் கண்ணகியைத் துறந்து திருக்கடையூருக்கு மாதவியுடன் சென்றான். கோவலன் மாதவியுடன் பன்னீராண்டுகள் வாழ்ந்தான்.

மனம் மிக வருந்திய கண்ணி ஓலை எழுதி தோழி மூலம் அனுப்புகிறாள். மடல் கண்ட கோவலன் மாதவியைப் பிரிந்துவர முடிவு செய்கின்றான். அப்போது மாதவி கோவலனின் திருவுருவைப் பொற்சிலையாக வடித்துத் தரும்படி வேண்ட அவனும் அதற்குடன்பட்டு பொற்பதுமையை மாதவிக்கு அளிக்கிறான். பதுமை எரிந்து விட்டதென்று கோவலனிடம் இருந்த அருணாக்கயிறு, பற்காவி, குடுமி, மீசை எல்லாவற்றையும் பறித்து அவனை நிர்மூலமாக்கி நட்டாற்றில் நிற்கவைத்து மாதவி சென்றுவிடுகிறாள்.

மாதவிசெய்த இந்தக் கொடுமைகளை அறிந்த கண்ணகி தன் கணவன் கோவலனை அழைத்துக் கொண்டு தம் இல்லம் வந்து சேருகிறாள்! கோவலன் கண்ணகியிடம் நான் மாதவிக்கு ஒரு மரக்கால் பொன் தருவதாகக் கூறிவந்தேன். எனவே அதைத் தரவேண்டும் எனக் கூறினான்.



கலாபூசணம் - மு.தம்பிப்பிள்ளை குருமண்வெளி

கண்ணகியோ தன் காற்சிலம்பைக் கழற்றிக்கொடுக்கிறாள்! கண்ணி தன் கணவனின் துயர் துடைக்கத் தன் காற்சிலம்பைக் கழற்றியபோது "அச்சிலம்பு மதுரைக்குப் போனால் மடிவீர்" எனக் கூறியதையும் செவிமடுக்காது கண்ணகியும், கோவலனும் மதுரைக்குச் சென்றனர்.

மதுரையிலே மாதவி என்பான் அமைத்த புனிதமான வீட்டிலே ஐயையைத் தோழியாகக் கொண்டு கண்ணகியை அடைக்கலமாக வைத்து கோவலன் மதுரைக்குச் சிலம்பு விற்கப் புறப்படுகிறான். அப்பொழுது கோவலன் தனக்கு ஏதும் இடர்வரின் மலர்வாடும், தேங்காய் தானாகவே உடையும், பழம் சோரும் எனக்கூறிச் சிலம்பு விற்கப் பாண்டிய நாடு சென்றான்.

திருவரங்க உபாத்தியார், என்பவரும் கோவலனை மாதவிக்குப் பொன்கொடுக்க எனது காராம்பசுவை விற்றுத் தருகிறேன், நீ மதுரைக்குச் செல்லாதே! எனத் தடுத்தும் கோவலன் அவர் வார்த்தைக்கும் செவிமடுக்காது ஊழ்வினை உறுத்தச் சென்றான்!

பாண்டிமா தேவியின் காற்சிலம்புகளில் ஒன்று உடைந்து இருந்தமையால் பாண்டிய மன்னன் அதனைத் திருத்திச் செய்யும்படி அரண்மனைப் பொற்கொல்லனை அழைத்துக் கொடுத்தான். அதனைப் பெற்ற வஞ்சிப் பொற்கொல்லன் அச்சிலம்பைத் தன் மதிலில் வைத்துவிட்டுச் சாப்பிடச் சென்றுவிட்டான். அப்போது கருடன் ஒன்று வந்து சிலம்பைத் தூக்கிச் சென்றுவிட்டது. பொற்கொல்லன் அது கண்டு பதறுகிறான்.

அப்போது மதுரை வீதியிலே பொற்சிலம்பு விற்கக் கோவலன் வருகிறான். கோவலன் சிலம்புக்கு விலைகூறிச் சிலம்புக்கு விலைமதிக்கப் பொற்கொல்லனிடம் கேட்கின்றான். இச்சிலம்புக்கு மட்டுமல்ல மன்னனின் பொன்முடிக்கும் நான் விலைமதிப்பேன் என விளம்பினான்.

கோப்பெருந்தேவியின் சிலம்பைக் கருடன்கொண்டு சென்றமையால் இந்தச் சிலம்பை இவனிடம் இருந்து அபகரிக்கப் பொற்கொல்லன் வஞ்சகமாக கோவலனைக் கோப்பெருந்தெவியின் சிலம்பு திருடிய கள்வன் எனப் பாண்டிய மன்னனிடம் கூறினான்.

முன்பின் யோசியாது பாண்டியன் பொற்கொல்லனின் வாய்மொழி கேட்டுக் கோவலனைக் காளி கோயிலிலே கொன்றுவிட்டுச் சிலம்பைக் கொண்டு வருமாறு காவலனுக்குக் கட்டளையிட்டான்.

[முற்பிறப்பு தொடரும்...]

## சிந்தியா பதில்

**சிந்தியா! ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டால், அதனால் நன்மை கிடைக்குமா?**

**என்.சாதன், புதுக்குடியிருப்பு.**

ஆம். நிச்சயமாக நன்மை கிடைக்கும். இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படவேண்டுமென்பதற்காக மண்டையைப் பிழிந்து திட்டம் தீட்டுபவர்களுக்கும் கோடிகளைக் கொட்டி தேர்தல் வியாபாரத்தில் முதலீடு செய்திருப்பவர்களுக்கும் நன்மை பயக்கும்.

ஆனால், மக்களுக்கு....?

▣▣▣▣▣▣▣▣▣▣▣

**சிந்தியா! ஜனாதிபதி தேர்தலின் பின்னர் கூட்டமைப்பின் நிலைப்பாடு எப்படியானதாக இருக்கும்?**

**க.சுதர்சினி, யாழ்ப்பாணம்.**

கூட்டமைப்பினர் தற்போது தமது ஆதரவை மைத்திரி சிறிசேனாவுக்கு வழங்கியிருக்கின்றார்கள். அந்தத் தீர்மானத்தின் பின்னால் பல் கோடிகளும் சில கேடிகளுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் இருப்பதாக செய்திகள் சொல்லுகின்றன.

ஆனால், கூட்டமைப்பில் உள்ளவர்கள் நூறு வீதம் ஆளும் தரப்பில் அங்கம் வகிப்பதற்கு தயாராக இல்லை என்பதும் தெரிகிறது. எனவே மைத்திரி வெற்றி பெற்றால் பதவி மோகம்கொண்ட சிலர் பிரிந்துபோக வாய்ப்பிருக்கிறது.

ஆனால் கூட்டமைப்பு என்பது எதிர்வரிசையில் இருந்து கூச்சல்போடுகின்ற கோமாளி அமைப்பாகவே இருக்கும். அது பற்றிச் அலட்டிக்கொள்ளாதீர்கள்.

▣▣▣▣▣▣▣▣▣▣▣

**சிந்தியா! அன்பால் எதையும் சாதிக்க முடியுமா? அது எப்பொழுதும் வெற்றியளிக்குமா?**

**கே.சுரேன், சாவகச்சேரி.**

அன்பால் எதையும் சாதிக்கமுடியும் என்று சிறுவயது முதல் நன்நெறிப்படுத்தும் புத்தகங்கள் ஊடாகவும் பெரியோர்களின் வாயிலாகவும் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

ஆனால் எமது அன்பை பெற்றுக் கொள்பவர்களின் குணாம்சங்களிலேயே அதன் வெற்றியும் தோல்வியும் தங்கியிருக்கின்றது. ஒருவருடைய அன்பை அவரின் பலவீனமாகப் பார்க்கின்ற ஒரு கொடிய உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

▣▣▣▣▣▣▣▣▣▣▣

**சிந்தியா! உலகக் கிண்ணப் போட்டிகளுடன் சங்கா முழுமையாக விலகவுள்ளாராமே?**

**பூ.சுபானந், தெல்லிப்பளை.**

அவ்வாறான செய்திகளில் உண்மை இருக்கும் என்று நினைக்கவில்லை. உலகக் கிண்ணப் போட்டியோடு ஒரு நாள் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுவதற்கு சங்கக்காரா தீர்மானித்திருக்கின்றார் என்பது உண்மை.

ஆனால், டெஸ்ட் போட்டிகளில் இரந்து தற்போதைக்கு விடைபெறுவதற்கு அவரும் விரும்பவில்லை. விடைகொடுப்பதற்கு இலங்கைக் கிரிக்கெட்டும் தயாராக இல்லை. அவருடைய தற்போதைய ஃபோம் இன்னும் சில வருடங்களுக்குத் தொடருமாயின் பல உலக சாதனைகள் சங்காவின் வசமாவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றது.

எனவே, இன்னும் சில ஆண்டுகள் சங்கா விளையாடவேண்டும் என நாமும் வாழ்த்துக்களோடு பிரார்த்திப்போம்.

▣▣▣▣▣▣▣▣▣▣▣

**சிந்தியா! அண்மையில் நடந்த அரசியல் ஜோக் ஒன்று கூறுங்களேன்?**

**எம். மதிவாணன், வவுனியா.**

அண்மைக் காலமாக நடைபெற்று வருகின்ற அரசியலே ஜோக்காகத்தான் இருக்கின்றது. இதில் எதை முதன்மைப் படுத்தி உங்களுக்குச் சொல்வது என்று எனக்கு ஒரே குழப்பமாக இருக்கின்றது.

எனவே. அரசியல் ஜோக் அறிந்து கொள்ள ஆர்வமாக இருந்தால் தினமும் நாளிதழ்களை வாங்கி வாசிப்பதைப் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். அங்கு தாராளமாகக் கிடைக்கும்.




(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

**சாதனையாளரா - சதிகாரரா!**

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததையும், நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியதையும், மூன்று தசாப்தங்களுக்குப் பிறகு நாட்டின் பகுதிகள் புது எழுச்சி பெற்றுள்ளதையும் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்கப்பால் சாதனைகளாகவே பார்க்கவேண்டும். அதையெல்லாம் செய்யும்போது தாமும் கூடவே சென்று தமக்கும் மாலைகள் விழ வேண்டும் என்றும், பட்டுப் பொன்னாடைகள் போர்த்தப்படவேண்டும் என்றும் முண்டியடித்துக் கொண்டு நின்றவர்கள் இன்று அதையெல்லாம் தவறுகளாகக் கூறுவதை மக்கள் எப்படி புரிந்து கொள்வார்களோ?

பெரும்பான்மை சிங்கள மக்கள் எந்த முடிவை எடுத்தாலும் இறுதியில் ஒரு சிங்களத் தலைவரே தெரிவாகி வருவார் என்பதால் பெரிதாக கவலைப் படுவதற்கு இல்லை. ஆனால் தமிழ். முஸ்லிம் மக்கள் தாம் யாரை ஆதரித்தார்கள். அந்த ஆதரவின் ஊடாக எதை எதிர்பார்த்தார்கள். என்பதை ஆட்சியில் இருக்கப் போகின்றவர்களும் சிங்கள மக்களும் சிந்திப்பார்கள்.

அப்போது சிறுபான்மை மக்கள் தலைமைகளின் உணர்ச்சிகளுக்கும். தமது சொகுசுகளுக்கும் ஊதிய மகுடிக்கு ஆடியதை எண்ணி வருந்துவதைத் தவிர வேறு எதைச் செய்யமுடிந்திருக்கின்றது. கடந்த காலத்தில் எடுத்த முடிவுகள் தவறு என்று சுயவிமர்சனம் செய்து கொண்டவர்களுக்கு இந்தத் தேர்தலில் எந்த முடிவை எடுக்கவேண்டும் என்பதை தெளிவாகத் தீர்மானித்திருப்பார்கள்.

தெளிவான தீர்மானத்தை எடுக்கத் தெரிந்தவர்களை சமகாலத்தில் அரங்கேறும் கூடுவிட்டு கூடுபாயும் அரசியல் குத்துக் கரணங்கள் குழப்பிவிட்டிருக்காது. அந்த நம்பிக்கையோடு தேர்தல் முடிவுகளுக்காக காத்திருப்போருக்கு காலம் ஏமாற்றத்தைக் கொடுக்காது.




# கந்தசாமி

பரபரப்புக்களுக்கு மத்தியில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகின்றது. மகிந்த VS மைத்திரி தேர்தல் களத்தில் நீயா?, நானா? என தூள் கிளப்பிக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்தப் போட்டிக்குப் பிரதான காரணம், சர்வதேச நாடுகள் என்று பரவலாகப் பேசப்படுகின்றது. அப்படியானால் அவர்களிடமே இதுபற்றிக் கேட்டுப் பார்ப்போமே என புறப்பட்டுவிட்டார் நம்ம காதிலை பூ.



**கா.பூ:-** ஹலோ மிஸ்ரர் ஒபாமா. இலங்கைத் தேர்தல் பற்றி வட் டூ யூ திங்?

**ஒபாமா:-** நோ ப்ரப்ளம். வி வில் வின் ?

**கா.பூ:-** என்னனா...! நீங்கள் வெல்லப்போறீங்களா? நான் கேட்டது சிறிலங்கன் எலெக்ஷனைப் பற்றி.

**ஒபாமா:-** யா மேன். அங்க போட்டி போடுற மிஸ்ரர் மைத்திரியை தெரியுமா உமக்கு? ஹீ இஸ் மை ஃபோய்! அவர் வெற்றிபெறுவாரு.

**கா.பூ:-** மிஸ்ரர் ஒபாமா அவர் வெல்லுறதால உங்களுக்கு என்ன நன்மை.

**ஒபாமா:-** யூ நோ சீனாக்காரர் எங்களை அடக்கப்பார்க்கிறார்கள். அதுக்கு உங்கட நாட்டிலை தளம் அமைக்கிறார்கள். அவர்களுக்கு மிஸ்ரர் மகிந்த ஹெல்ப் பண்ணுறார். அவர் எங்களுடைய உத்தரவுகளைக் கேட்பதில்லை.

**கா.பூ:-** அதுக்கு...?

**ஒபாமா:-** மிஸ்ரர் மகிந்தவுக்குப் பதிலாக மிஸ்ரர் மைத்திரியை கொண்டு வந்தால் நாங்கள் சொல்வதையெல்லாம் அவர் கேட்பார். அதுக்கு அவர் ஓ.கே சொல்லியிருக்கிறார். அதனால்தான்.

**கா.பூ:-** ஓ அப்படியா? (மைத்திரி வெண்டா நம்மளை எல்லாம் அமெரிக்காக் காரன்தான் ஆளப்போகிறான் போல என மனதுக்குள் நினைத்துக் கொண்டு ஜகா வாங்கிடுவார்.



**கா.பூ:-** ஹலோ மிஸ்ரர் மோடி எப்படி இருக்கிறீர்கள்? சிறிலங்கன் எலெக்ஷன் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

**மோடி:-** அச்சா அச்சா பொகுத் அச்சா! ஆர் வெண்டாலும் நம்மளுக்கு அச்சா!

**கா.பூ:-** அப்பிடின்னா நீங்கா மிஸ்ரர் மகிந்தவுக்கு வாழ்த்துச் சொன்னீர்களாமே. உண்மையா?

**மோடி:-** ரீக் கே ரீக்கே முகத்துக்கு முகம் பார்த்துக் கொள்ளுறப்ப அவருக்குச் சொல்லியிருந்தேன். அதேபோல் தொலைபேசியில் மற்றத் தரப்புப் பேசியபோது அவர்களுக்கும் சொல்லியிருக்கிறேன்.

**கா.பூ:-** உங்களுடைய உண்மையான எதிர்பார்ப்பு என்ன?

**மோடி:-** யார் வெண்டாலும் எம்மை மீறிச் செல்லமுடியாது. ஆனால் யாரையும் நாம் வரவேற்போம். ஆனால் மிஸ்ரர் மைத்திரி அமெரிக்காக்காரனோடு ஒரு டீல் போட்டுள்ளதாகத் தெரிகிறது. அதுவரையில் நிதானமாக இருக்கின்றோம்.



**கா.பூ:-** வணக்கம் கலைஞரே! இலங்கையின் தேர்தல் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

**கலைஞர்:-** சங்கம்வைத்து முத்தமிழ் வளர்த்த ஈழத்திருநாட்டில் நடக்கிறது தேர்தல். அங்கு வாழ்ந்துகொண்டிருக்கும் முத்துக்கு முத்தான எங்கள் தொப்புள்கொடி உறவுகளை அடுத்து ஆழப்போறது யார் என்பதற்கான பந்தயம் அது. அது பற்றி கடல் கடந்திருக்கும் நான் சொல்வது அவசியமில்லை. தங்களது தலைவிதியை தீர்மானித்துக்கொள்ளும் தனித்துவமும் பக்குவமும் கெண்டவர்கள் அந்த மக்கள். ஆனால் மகிந்தா ராஜபக்ஷ அண்மையில் பேசும் போது முகமறியா பேரழகியைவிட பழக்கப்பட்ட பிசாசு சிறந்ததெனக் கூறியதாகச் சொல்கிறார்கள். ஆம். தற்போதைய நிலையில். யுத்தவடுக்களில் இருந்து மீளத் துடிக்கும் மக்களைப் புரிந்த மக்கள் அறிந்துகொண்ட ஒருவர் அரியணை ஏறுவது பொருத்தம் எனக் கருதுகின்றேன்.

**"யாவும் கற்பனையல்ல"**

வரலாறு படைத்த வல்லுநனர்கள்

# ஜோன் மில்டன்



இங்கிலாந்து மன்னர் முதலாம் சார்ல்ஸ், பாராளு மன்றத்தோடு மோதி, போர் மூண்டநிலையில் மில்டன், பியூரிட்டன்களுக்கு ஆதரவாக மதம், அரசியல் பத்திரிகை சுதந்திரத்துக்காக ஏராளமான கட்டுரைகளை துண்டு வெளியீடுகளாக வெளியிட்டார். கவிதையைப் போலக் கருத்துக்கள் வெளியிடக் கட்டுரைகளால் இயலாது என்ற எண்ணம் கொண்டவர் மில்டன். ஆனால் தன் எண்ணங்களைக் கவிதை வடிவில் வடிக்க வேளை வரவில்லை என்பதினால் தன் பேனாவைக் கட்டுரைகளை உருவாக்கப் பயன் படுத்தினார் மில்டன். அப்போது மக்களிடம் எழுச்சி உண்டாக கட்டுரைகள் தேவையாக இருந்தன. மில்டனின் புகழ்பெற்ற வெளியீடு களாக ஆரோபகாடிகாவில் துணிவுடன் புத்தகங்களை வெளியிடுமுன், அரசாங்கத்தின் பார்வைக்கு அனுப்பி, அனுமதிபெற்ற பின்னே வெளியிடவேண்டும் என்று உள்ள சட்டத்தைக் கைவிடுமாறு வேண்டிக்கொண்டார்.

மன்னர் சார்ல்ஸுக்கு மரண தண்டனை அளித்து காமன்வெல்த் (பொதுவுடமை அரசு) உருவாக்கப்பட்டதும், பியூரிட்டன்களின் வேண்டுகோளின்படி மில்டன் அரசாங்கத்தில் லத்தீன் மொழியின் காரியதரிசியாக நியமனம் பெற்றார். அரசாங்கத்தின் கடிதப் போக்குவரத்துக்கள் அனைத்தையும் லத்தீன் மொழியில் மொழிபெயர்க்க வேண்டியது மில்டனின் பணியாகும். தம் பணியை நிறைவுசெய்ய. தம் கண்களுக்கு அதிக வேலை கொடுத்ததினால் விரைவில் அவரது பார்வை பாதிக்கப்பட்டு குருடரானார்.

பார்வை இழந்தநிலையிலும், கடவுள் தனக்கு அளித்துள்ள கவித்துவ திறமைக்குச் கைமாறு செய்யவேண்டும் என்ற எண்ணத்தை மறந்துவிடவில்லை. இரண்டாம் சார்லஸ் மன்னர் முடிசூட்டிக்கொண்டதும், தமது லத்தீன் மொழிக் காரியதரிசி பணியிலிருந்து ஓய்வுபெற்றார். பார்வை இழந்த குறையை வெற்றிகொண்டு, நீண்டகாலக் கனவாக தம் எண்ணத்தை நிறைவேற்றுவதில் முனைப்பானார் மில்டன்.

தம்முடைய படைப்பு பெரும் காப்பியமாகத் திகழவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார் மில்டன். ஆகவே அதே சிந்தனையில் பல ஆண்டுகள் தியானத்தில் ஈடுபட்டவரைப் போல, நாட்களைக் கடத்தினார். அவர் கற்பனையிலுள்ள பெருங்காப்பியத்தின் மையக் கருத்து நன்மை - தீமைகளுக்கிடையேயான போராட்டத்தை ஆதிமனிதர்களான ஆதாமும் ஏவாளும் அப்பிள் பழத்தின் கவர்ச்சியில் - ஆசையில் - மயங்கியதினால் ஏற்படும் பின்விளைவுகளை உதாரணமாக வைத்து உருவாக்கத் திட்டமிட்டார்.

(தொடரும்...)

# இந்தவாரம் உங்கள் பலன்

(08.01.2015 தொடக்கம் 14.01.2015 வரை)

## மேடம்

உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் முன்கோபத்தை தவிர்த்துப் பணியாற்றுதல் நல்லது. புதிய கூட்டுத்தொழில் முயற்சிகளை சற்று காலதாமதமாக தொடங்குவது நல்லது. எதிர்பாராமல் வடதிசையில் இருந்து பொருள்வரவும், நல்ல செய்திகளும் வந்துசேரும். வராத கடன்கொடுத்துள்ள பணம் எதிர்பாராமல் திரும்பக் கிடைக்கும். நண்பர்களால் வீண் விவாதங்களும் தொல்லைகளும் வந்துபோகும். கண்களில் கவனமுடன் இருப்பது நல்லது. பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டாலும் மிகுந்த பிரயாசையின் பேரில் சமாளித்துக்கொள்வீர்கள். கணவன் - மனைவி உறவுகளில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்த சுமூகமான உறவுகள் ஏற்படும்.

## இடபம்

உடம்பில் மூளை நரம்பு எலும்பு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். வீடுகளைப் புதுப்பித்துக் கட்டுவதற்காக பணச்செலவுகள் வந்துசேரும். பூர்வீக இடங்களை விட்டு மாறிச் செல்லத் திட்டம்போடுவீர்கள். ஆதரவற்ற ஏழைகளுக்காக உதவிசெய்து அதனால் மனமகிழ்ச்சி அடைவீர்கள். விட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. அரசு வழக்குகளில் சாதகமான நல்ல தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். விபரீத எண்ணங்களை விட்டுக் காரியத்தைக் கவனிக்கவும். வேலை இல்லாதவர்களுக்கு வெகுநாட்களாக எதிர்பார்த்து இருந்த புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும் காலமாகும்.

## மிதுனம்

குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். தாயின் உடல்நிலையில் பாதிப்புகள் உண்டாகுவதோடு மருத்துவச்செலவுகள் ஏற்படும். பிள்ளைகளுக்கு எதிர்பார்த்து வந்த வேலைவாய்ப்புகள் கிடைக்கும். கணவன் - மனைவி உறவில் விரிசல்களும் வீண் மனக் குழப்பங்களும் வந்துபோகும். நீண்டநாட்களாக வராத பணம் திரும்பக் கைவந்து சேரக்கூடிய காலமாகும். திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். பொருளாதாரத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள்.

## கடகம்

திருமண விசயங்களுக்காக முயற்சி செய்யலாம். எதிர்பார்த்த பண உதவிகள் உறவினர்களால் கிடைக்கும். நீண்டகாலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேரும் காலமாகும். காதல் சம்பந்தமாக நல்ல செய்தி வந்துசேரும். உடல்நிலையில் வாயு மற்றும் வாதம் ஆகிய தொல்லைகள் வந்துபோகும். பிள்ளைகளால் எதிர்பாராத சிற்சில ஆதாயங்களை அடைய வாய்ப்பு உள்ளது. அநாதைகளுக்கு உதவு-வதில் மனமகிழ்ச்சி அடைவீர்கள். வெகுகாலமாக நினைத்துக்கொண்டு இருந்த கூட்டுத் தொழில் முயற்சிகளைத் தொடங்கினால் மிகவும் நல்ல பலன்கள் கிடைக்கும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## சிங்கம்

குடும்பத்தில் திருமணம்போன்ற சுபகாரிய நிகழச்சிகள் நடைபெற வாய்ப்பு உள்ளது. உற்றார் மற்றும் உறவினர்களின் எதிர்பாராத திடீர்வரவுகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் எதிர்பாராத சிற்சில ஆதாயங்களை அடைவீர்கள். புதிய கடன்வாங்கிப் பழைய கடன்களை அடைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பெண்கள் சம்பந்தமான காதல் விசயத்தில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும் காலமாகும். குலதெய்வ வழிபாட்டிற்காக தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ள நேரும். மூத்த சகோதரர்களால் பொருட்செலவுகள் மற்றும் மனநிம்மதிக் குறைவுகள் ஏற்படலாம்.

## கன்னி

தேவையற்ற நண்பர்களின் தொடர்புகளால் பிரச்சினைகள் வர இருப்பதால் கவனமுடன் பழகுதல் நல்லதாகும். குலதெய்வ ஆலயங்களைப் புதுப்பிதலுக்கான முயற்சிகளில் நற்பெயர் பெறுவீர்கள். கூட்டுத்தொழில் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். பொருளாதார நெருக்கடிகள் மாறித் தேவையான பொருளாதாரம் வந்துசேரும். உடம்பில் முதுகு மற்றும் வயிறு ஆகிய உபாதைகள் வந்துபோகும். விபரீதமான எண்ணங்களை விட்டொழித்து காரியத்தில் கவனமாய் இருங்கள். நாட்பட்ட பழைய கடன்கள் மீண்டும் தொல்லைதர வாய்ப்பு உள்ளது. வெளிநாடு செல்லுதல் போன்ற புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

## துலாம்

நீண்டநாட்களாக தடைப்பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமண காரியங்களில் வெற்றி அடைவீர்கள். திருட்டுப்போன பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்ப வீடு வந்துசேரும். ஒரு சிலருக்கு புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். உறவினர்களின் வரவால் பொருள்வரவும் மனச்சந்தோசமும் உண்டாகும். பொருளாதாரத்தில் இதுநாள் வரையில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறிச் சற்று முன்னேற்றம் காணப்படும். எதிர்பாராத நீண்டதூரப் பயணங்களின்மூலம் மனநிறைவடைய வாய்ப்பு உள்ளது. உத்தியோகத் துறையினர்களுக்கு பதவியுயர்வுகள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவுகள் நிரம்ப உண்டாகும்.

## விருச்சிகம்

நண்பர்களால் ஆதாயம் இல்லை. பெண்கள் விசயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நன்று. புதிய கடன்வாங்குவதற்காக முயற்சிப்பீர்கள். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் காரணமற்ற பிரச்சினைகள் வர இருப்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் பேசிப் பழகுதல் நல்லதாகும். விளையாட்டுத் துறைகளைச் சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுகள் கிடைக்கும். வெகுதூரப் பயணங்களில் மிகுந்த எச்சரிக்கையுடன் சென்றுவருவது நல்லது. சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். உடல்நிலையில் இருந்துவந்த நாட்பட்ட நோய்கள் நீங்கி மனநிம்மதி உண்டாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## தனுசு

உற்றார், உறவினர்களின் வருகையால் பொருட்செலவுகள் உண்டாகலாம். புதிய நண்பர்களின் சேர்க்கையால் செய்யாத குற்றங்களுக்காக காரணமற்ற வீண் பிரச்சினைகள் வந்துசேரும் என்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவும். கணவன் - மனைவி உறவுகளில் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கி சுமூகமான சூழல் உருவாகும். சொத்து சம்பந்தமாகிய வழக்கு விசயங்களில் எதிர்பார்த்த முடிவுகள் கிடைக்கச் சற்று கால தாமதம் ஆகலாம். வீடு, நிலம் வாங்குவதுபோன்ற முயற்சிகளில் அரசு சம்பந்தமாக எதிர்பார்த்து வந்த உதவித்தொகைகள் கிடைக்கும். தந்தை - மகன் உறவுகளில் இருந்துவந்த மனக்கசப்புகள் நீங்கி ஒற்றுமை ஏற்படும்.

## மகரம்

காதல் சம்பந்தமான விசயங்களில் பெண்களால் அவப்பெயர்கள் வரக்கூடும் என்பதால் எச்சரிக்கையுடன் பழகுதல் நல்லது. விட்டுப்போன கணவன் - மனைவி உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. நண்பர்களால் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்க இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். புதிய தொழில் ஆரம்பம் செய்வதற்காக வங்கிகள் மூலம் நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த கடன்தொகைகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. சம்பந்தம் இல்லாத நபர்களால் எதிர்பாராத தனவரவுகள் உண்டாகும். வீட்டைத் திருத்திக்கட்டுவதில் மிகுந்த அக்கறையுடன் திட்டம் போடுவீர்கள்.


## கும்பம்

சம்பந்தம் இல்லாத அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிட்டு மனக் கவலை அடையாதீர்கள். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறும் வாய்ப்பு உள்ளது. கொடுக்கவேண்டிய பழைய கடன்களைக் கொடுத்துப் பதிய கடன்களை வாங்கத் திட்டம் போடுவீர்கள். குடும்ப சொத்துக்கள் போன்ற விசயத்தில் நல்ல தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். உறவினர்கள் மற்றும் சொந்தபந்தங்களால் ஆதரவு இல்லை. பண விசயங்களுக்கான நீண்டதூரப் பயணங்களைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது. ரேஸ், லோட்டரி போன்ற சூதாட்ட சம்பந்தமான விசயங்களினால் பணம் கைவிட்டுப் போக இருப்பதால் சூதாட்டங்களைத் தவிர்ப்பது நல்லதாகும்.

## மீனம்

அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களில் வெகுகாலமாக எதிர்பார்த்து இருந்துவந்த நல்ல முடிவுகள் கிடைக்கும். பொதுநலக் காரியங்களுக்காக மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு நற்பெயர், புகழ் எடுப்பீர்கள். முன்கோபத்தை தவிர்த்து அண்டை அயலாருடன் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. குலதெய்வ வழிபாடு செய்துவருதலால் கிரக தோசங்கள் நீங்க வாய்ப்பு உள்ளது. வங்கிகளால் எதிர்பார்த்து இருந்த கடன் தொகைகள் கிடைக்கும். தந்தை - மகன் உறவில் சிறிய கருத்து வேறுபாடுகள் வந்துநீங்கும். உடம்பில் வாயு மற்றும் வயிறு ஆகிய உபாதைகள் வந்துபோகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தராத வாரமாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)






இப்பத்திரிகை 379, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டீ.டி எண்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஜனவரி 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 24 வியாழக்கிழமை (08.01.2015) பக்கங்கள் IV ஓசை –100



இன்று நடைபெறுகின்ற ஜனாதிபதித் தேர்தலுக்காக யாழ்.மாவட்ட தேர்தல் மத்திய நிலை பத்திலிருந்து வாக்குப்பெட்டிகள் நேற்று எடுத்துச் செல்லப்பட்டபோது... (25)

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அச்சத்தின் வெளிப்பாடு

### ஆதாரமற்ற செய்திக்கு மறுப்பு

ஆதாரமற்றதும், பொய்யானதுமான தகவல்களையே தொடர்ந்து பரப்பிக் கொண்டிருக்கும் சிறிதரனின் ஜே.வி.பி இணையம் அந்த வரிசையில் நேற்று இன்னுமொரு செய்தியை வெளியிட்டுள்ளது. மகிந்தவிற்கு வாக்களிக்க சொல்லவில்லை. டக்ளஸ் பல்டி அடித்தார் என்ற தலைப்பில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இச்செய்தியில் எவ்வித உண்மையுமில்லை என்பதை நாம் பொறுப்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். மாவட்ட இணைப்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்

தாங்கள் எடுத்திருக்கும் நிலைபாடு தொடர்பில் எமது மக்களுக்குக் கூற இயலாத நிலையில் இருக்கும் தமிழ்த் தேசியக்

IV ஆம் பக்கம் பார்க்க

# இன்று ஜனாதிபதித் தேர்தல்

## ✸ 19 வேட்பாளர்கள் ✸ 15044490 வாக்காளர்கள்

## ✸ 12314 வாக்கெடுப்பு நிலையங்கள்

ஏழாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக இன்று நடைபெறுகின்ற தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார். வாக்களிப்பு காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகின்றது. வாக்காளர்கள் இயலுமானவரை காலையிலேயே வாக்களிப்பு நிலையங்களுக்கு சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

வாக்காளர்கள் தமது வாக்காளர் அட்டையுடன் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் அடையாள அட்டையையும்,அண்மையில் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் செல்லுபடியாகும் கடவுச்சீட்டை உடன் கொண்டு வந்திருந்தால் மாத்திரமே வாக்களிக்க முடியும். தேர்தலில் வாக்களிப்பது உங்கள் உரிமை என்பதனால் அந்த உரிமையை எக்காரணம் கொண்டும் தவறவிட வேண்டாம்.

இலங்கையின் 7ஆவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக இம்முறை 19 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதேவேளை 22 தேர்தல் மாவட்டங்கள் மற்றும் 160 தேர்தல் தொகுதிகளிலிருந்து இம்முறை ஒரு கோடியே 50 இலட்சத்து 44 ஆயிரத்து 490 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். நாடு முழுவதும் 12 ஆயிரத்து 314 வாக்கெடுப்பு நிலையங்களில் தேர்தல் நடத்தப்படவுள்ள அதேநேரம் ஆயிரத்து 419 நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படவுள்ளன.

தேர்தலில் வாக்காளர்கள் தாம் விரும்பிய வேட்பாளருக்கு இடும் இரகசிய சின்னம் பிறர் அறியாத வகையில் பாதுகாக்கப்படும் வாக்கெடுப்பு நிலை

IV ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் சார்பான அமைப்புக்கள் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு அழைப்பு

புலிகள் சார்பான குழுக்கள் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளன. வடக்கிலுள்ளவர்களை வாக்களிக்க வேண்டாம் என கட்டாயப் படுத்துவதன் மூலம், 2005-ல் செய்ததைப்போல மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும் என அவர்கள் விரும்புகிறார்கள். என தமிழ் நெற்றை மேற்கோள் காட்டி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டிசம்பர் 18ஆம் திகதி தமிழ் நெற் இணையத்தளத்தில் தமிழ் மக்கள் மகிந்த மற்றும் மைத்திரிபால ஆகிய இருவரையுமே தோற்கடிக்க வேண்டும் என்கிற செய்தி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியதை மேற்கோள் காட்டி பிரசுரமாகியிருந்தது. தெற்கில் நடக்கும் ஜனாதிபதித் தேர்தல் பூகோள அரசியல் விளையாட்டு ஒன்றின் விளைவு. இதில் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகள் மைத்திரிபாலவுக்கு ஆதரவளிக்கும் அதேவேளை சீனா மகிந்தவுக்கு ஆதரவளிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கிலுள்ள ஜனாதிபதி வேட்பாளர்களின் பின்னால் செல்வதன் மூலம் தமிழர்களுக்கு பயன் கிடைக்காது. தமிழ்

IV ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கில் தனியான முஸ்லிம் மாவட்டம் ஹக்கீமுக்கு சம்பந்தன் உறுதியளிப்பு

### முஸ்லிம் காங்கிரசை எதிரணிக்கு எடுத்த திட்டம் வெளியானது

கிழக்கு மாகாணத்தில் தனியான ஒரு முஸ்லிம் மாவட்டத்தை உருவாக்கும் ஹக்கீமின் திட்டத்திற்கு சம்பந்தன் பூரண ஆதரவு தெரிவித்திருக்கும் தகவல் கசிந் திருக்கிறது. மைத்திரிபால வெற்றிபெற்று அரசாங்கம் அமைத்தால், ஹக்கீமின் முயற் சிக்கு தான் தடையாக இருக்க மாட்டேன் என்னும் வாக்குறுதியை வழங்கியே, சம்பந்தன் முஸ்லிம் காங்கிரசை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து பிரித்து எடுத்திருக்கிறார்.

சம்பந்தன் இந்தியா சென்றிருந்த வேளையில், அவரது நேரடிப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், எதி ரணியினருடன், அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்த குழுவுக்கு ஆலோசகராக செயற்பட்டுக்கொண்டிருந்தார்.

அதே நேரத்தில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதியாக, அவர் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடனும் பேச்சுக்களை நடத்தியபடி இருந்ததாகத் தற்போது தகவல்கள் கசிந்துள்ளன. முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை ராஜபக்ஷ அரசாங்கத்திலிருந்து பிரித்து எடுத்து, மைத்திரிபால கூட்டணியில் இணைப்பதற்கான பேச்சுக்களிலேயே அவர் மிகவும் இரகசியமாக ஈடுபட்டிருந்தார்.

இது தொடர்பான தகவல்கள், கடந்த வார இறுதியில் யாழ்ப்பாண நிலைமைகளை அவதானிக்க வந்திருந்த 8 பேர் கொண்ட மைத்திரிபாலவின் பிரசாரக் குழுவினரால் யாழ்ப்பாணத்தில் வைத்து வெளியிடப்

III ஆம் பக்கம் பார்க்க

காலக்கெடு முடிந்தும்
மாவையார் அகிம்சைப்
போரை இன்னும்
தொடங்காத
**8** வது நாள்



# வேலணையிலுள்ள கிராமங்களுக்கு மின் விநியோகம் ஆரம்பம்

(வேலணை)

30 வருடங்களின் பின்னர் வேலணையிலுள்ள மைலப்புலம், மண்டைதீவு, பூம்புகார் ஆகிய கிராமங்களுக்கான மின் விநியோகத்தினை வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் சின்னையா சிவராசா (போல்) வினால் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் இம்மின்விநியோகத்திற்கான சகல ஏற்பாடுகளும் மேற கொள்ளப்பட்டு அண்மையில் தவிசாளரினால் இப்பகுதி மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு விரைவாக இம்மின் விநியோகம் வழங்கப்பட்டது.

இக்கிராமங்களிலுள்ள 500 இற்கும் அதிகமான மக்கள் மற்றும் பாடசாலை செல்லும் சிறுவர்கள் இம்மின் விநியோகத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

## உதவ முடியும்

தைப் பொங்கல் தினத்தன்று மிக வறிய கிராமத்தில் உள்ள ஒரு கோவிலில் பொங்கி ஏழை மக்களுக்கு பொங்கல் கொடுக்க தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பினர் உத்தேசித்துள்ளனர்.

உதவக் கூடியவர்கள் அல்லது தனிப் பொங்கலாகச் செய்து அந்த வறிய மக்களுக்கு கொடுக்க விரும்புகின்றவர்கள் அல்லது பொங்கல் பொருட்கள் வழங்கக் கூடியவர்கள் தம்மோடு தொடர்பு கொள்ளலாம் என தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பு அறிவித்துள்ளது.

# தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பூர்த்தி



(முல்லைத்தீவு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவித்துள்ளார். அந்த வகையில் இம்முறை முல்லைத்தீவு மாவட்டத்தில் 63920 பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர்.

6 பிரதேச செயலக பிரிவுகளுக்கும் உரிய 130 வாக்களிக்கும் நிலையங்களும் 7 வாக்கு எண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து வாக்களிக்கும் நிலையங்களுக்கும் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திலிருந்து எந்தவித இடையூறுகளும் இன்றி நேற்று வாக்குப் பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்நிலையங்களில் கடமை புரிவதற்கென தேர்தல் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவு அத்தாட்சி அலுவலரும் மாவட்ட செயலாளருமான நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். (40)

# கரவெட்டியில் விபத்து; குடும்பஸ்தர் படுகாயம்

(கரணவாய்)

தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த பிக்கப் வாகனமும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று மாலை 3.30 மணியளவில் கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு முன்னால் இவ் விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் உடுப்பிட்டி வடக்கைச் சேர்ந்த ஜோசப் அன்ரன் தேவராஜா என்பவரே படுகாயமடைந்த நிலையில், மந்திகை ஆதாரவைத்தியசாலைக்கு கொண்டு சென்று அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவ்விபத்துக் குறித்து நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (18)

# ஆட்டுத் திருடன் வசமாக மாட்டினான்

(கரணவாய்)

இரவுவேளையில் வீடு புகுந்து ஆடு திருடியவர் வீட்டுரிமையாளரிடம் வசமாக மாட்டியதுடன் வாங்கிக் கட்டிய சம்பவம் ஒன்று பருத்தித்துறை மாதனை பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கடந்த 5ஆம் திகதி அதிகாலை 1 மணி யவில் மாதனைப் பகுதியி லுள்ள ஒரு வீட்டினுள் நுழைந்த திருடன் இலாவகமாக ஆட்டை திருடிக் கொண்டிருந்தபோது வீட்டுரிமையாளர் நித்திரையில் இருந்து வழித்துக் கொள்ள திருடன் தப்பியோட முயற்சித்த போது மடக்கிப்பிடிக்கப்பட்டதுடன் அவ்வூர் மக்களிடம் வசமாக வாங்கிக் கட்டினார். தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலினடிப்படையில் ஸ்தலத்திற்கு வந்த பொலிஸார் திருடனை கைது செய்ததுடன் சிகிச்சைக்காக மந்திகை வைத்திய சாலைக்கு கொண்டு சென்றனர். குறித்த திருடன் 26 வயதுடைய புலோலியைச்சேர்ந்தவர் என விசாரணையின்போது தெரிய வந்துள்ளது. (18)

# கல்விக்கு உதவி

(புதுக்குடியிருப்பு)

ஜேர்மனியைச் சேர்ந்த சசிகரன் தனது புதல்விகளான குயிலினி (வயது-6), தமிழினி (வயது-1) ஆகியோரது பிறந்த தினங்களை முன்னிட்டு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த போரினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தின் பிள்ளைகளது படிப்பிற்கான செலவினை பொறுப்பேற்றுள்ளார்.

உதவும் இதயங்கள் அமைப்பினருடாக வழங்கப்பட்ட உதவிகளை அதன் இலங்கை இணைப்பாளர் ச.சஜீவன் வழங்கியுள்ளார். (48)

# சிட்னியில் இந்தியா நிதான ஆட்டம்

(சிட்னி)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இறுதி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி நிதானமாக ஆடி வருகின்றது.

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட போடர் - கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரின் இறுதி ஆட்டம் அவுஸ ரேலியாவின் சிட்னியில் நடைபெற்று வருகின்றது.



முதல் இனிங்ஸிற்காக இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 337 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை அவுஸ்ரேலிய அணி தொடர்ந்தது. கப்டன் ஸ்மித், வட்சன் இணை இந்திய பந்து வீச்சாளர்களை போட்டுத் தாக்கி ஓட்டங்களை வேகமாகப் பெற்றனர். ஒரு முனையில் இத்தொடரில் நான்காவது சதமடித்து கப்டன் ஸ்மித் அசத்தினார். விரைவாக ஆடிய அவுஸ்ரேலிய அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 572 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் கப்டன் ஸ்மித் 117, வட்சன் 81, எஸ். மார்ஷ 58 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மொகமட் சமி ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி ஓட்டம் எதுவும் பெறாத நிலையில் முதல் விக்கெட்டை இழந்து தடுமாறியது. இந்நிலையில் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த ரோகித் சர்மா ராகுலுடன் இணைந்து நிதானமாக ஆடினார். இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இந்திய அணி ஒரு விக்கெட்டை இழந்து 71ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ரோகித் சர்மா 40, ராகுல் 31 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். பந்து வீச்சில் ஸ்ரார்க் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 323 |
| திகதி - | 2015.01.06 |
| வர்ணம் - | மஞ்சள் |

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

09 22 41 53 O

பரிசுத் தொகை ரூபா. 20,767,000/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 10 | 500,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 207 | 207,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 371 | 371,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9158 | 549,480/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4851 | 194,040/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 120746 | 2,414,920/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17298 | 345,960/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 20,767,000/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,582,400/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 21,003,120/-

2015.01.09ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.

தொ.பே: 011 2333546/47

web : www.dlb.lk

(C/3979)


# வெலிங்டனில் இலங்கை படுதோல்வி
# தொடரை முழுமையாக வென்றது நியூசிலாந்து



(வெலிங்டன்)

இலங்கை அணிக்கெதிரான வெலிங்டன் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி 193 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றதுடன் டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது. இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று நியூசிலாந்தின் வெலிங்டனில் நிறைவடைந்தது. முதல் இனிங்ஸிற்காக நியூசிலாந்து அணி 221 ஓட்டங்களும், இலங்கை அணி 356 ஓட்டங்களும் பெற்றன. 143 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 524 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. 390 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி ஆடிய இலங்கை அணி நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இதில் திரிமன்னே நிதானமாக ஆடியபோதிலும் மறுபுறம் எந்தவொரு வீரரும் நிலைத்து நின்று ஆடவில்லை. இறுதியில் இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் திரிமன்னே ஆட்டமிழக்காது 62, சில்வா 50, ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் போல்ட் இரண்டு, க்ரைக் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் நியூசிலாந்து அணி 193 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றதுடன் டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக வில்லியம்ஸன் தெரிவு செய்யப்பட்டார்.

# நாவாந்துறை மக்கள் அமைச்சருடன் சந்திப்பு



நாவாந்துறைப்பகுதியில் இரு தரப்பினர்களுக்கிடையில் அண்மைக்காலமாக நடைபெற்று வந்துள்ள முரண்பாடுகள் காரணமாக சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் பிரதிநிதிகள் நேற்று மாலை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை அவரின் யாழ் பணிமனையில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

மேற்படி சம்பவங்களின் போது கைது செய்யப்பட்டிருந்தவர்கள் நேற்று விடுதலையாகியிருந்த நிலையில் அவர்களும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் பலவருட காலமாக மேற்படி இரு தரபபினர்களுக்குமிடையில் முரண்பாடுகள் தொடர்ந்திருக்கும் நிலை மாற்றம் பெற்று அனைவரும் சமாதான பூர்வமாக வாழ முற்படவேண்டுமென உணர்த்தினார்.

கடந்த கால சம்பவங்களை தொடர்ந்தும் மீட்டிக்கொள்ளாது அனைத்தையும் மறந்து விட்டுக் கொடுப்பு மற்றும் சகிப்புத் தன்மையுடன் இரு தரப்பாரும் நடந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் இதன்போது அமைச்சர் வலியுறுத்தினார்.

அமைச்சர் தங்களது நலன் கருதி எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பில் இரு தரப்பினரும் தங்களது நன்றிகளை அமைச்சருக்குத் தெரிவித்துக்கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் யாழ மாநகர சபையின் முன்னாள் பிரதிமேயர் றீகன் மற்றும் அமைசசின் ஒருங்கிணைப்பாளர் அகஸ்ரின் மாஸ்டர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## முதியவர்களுக்கு இலவச கண்வில்லைகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் வறிய நிலையிலுள்ள முதியோர் மூவருக்கு இலவச கண்வில்லைகளை சமூகசேவைகள் அமைச்சு அண்மையில் அனுப்பி வைத்துள்ளது.

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த இருவருக்கும், பூநகரி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கும் இந்த இலவச கண்வில்லைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலகப் பிரிவு முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலரால் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு உரிய கண்வில்லைகள் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கண்வில்லை தேவைப்படும் வறிய நிலையிலுள்ள முதியோர் கண மருத்துவரின் சான்றிதமுடன் இதற்கு விண்ணப்பிக்க முடியும். (90)

## தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(வவுனியர்)

ஓமந்தை வேப்பங்குளத்தில் அரச ஊழியர் வீட்டுத்திட்டத்திற்கு அருகாமையில் உள்ள காட்டுப்பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக நேற்று பொலிஸாரால் மீட்கபட்டுள்ளது.

வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடைய செல்வராசா தயானந்தன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த திங்கட்கிழமைமுதல் காணாமற் போயிருந்ததை தொடர்ந்து குறித்த பகுதியில் பொலிஸாராலும் மக்களாலும் தேடுதல் செய்யப்பட்டதை தொடர்ந்தே இச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது

மேலதிக விசாரணையை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (70)

# யாழ்.மாவட்டத்தில் 526 வாக்களிப்பு நிலையங்கள்




(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறுகின்ற ஜனா திபதித் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள் யாழ்மாவட்டத்தில் 526 வாக்களிப்பு நிலையங்க ளுக்கும் கொண்டு செல்லப்பட்டன.

யாழ். மாவட்டத்திற்கான வாக்களிப்பு வாக்கெண்ணும் நிலையமான யாழ். மத்திய கல்லூரியில் இருந்து, நேற்றுக் காலை 526 வாக்களிப்பு நிலையங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டன.

யாழ். தேர்தல் திணைக்கள தெரிவத்தாட்சி அலுவலரும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபருமான சுந்தரம் அருமைநாயகத்தின் முன்னிலையில், குறித்த வாக்குப்பெட்டிகள் கொண்டு செல்லப்பட்டன.

வாக்குப் பெட்டிகளுக்கான பொலிஸ் பாதுகாப்புடன் வாக்கு பெட்டிகள் மற்றும் உத்தியோகத்தர்களும் வாக்குப் பெட்டிகளுடன், தமக்கான வாக்களிப்பு நிலையங்களுக்கு கடமைக்கு சென்றமையும் குறிப்பிடத்தக்கது. (25)

## வவுனியாவைச் சேர்ந்த பெண் கனடாவில் துஷ்பிரயோகம்

கனடா ரொறன்ரோ பிர்ச்மவுண்ட் பகுதியில் பின்ச் அவனியுவில் உள்ள தொடர்மாடிக் குடியிருப்புப் பகுதியில் 40 வயதான இலங்கை தமிழ் பெண் ஒருவர் கட்டி வைத்து பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

குறித்த பெண் தனது தொடர்மாடிக் குடியிருப்புக்கு லிப்டில் சென்று கொண்டிருக்கையில் அந்த லிப்டுக்குள் வந்த இளைஞன் ஒருவர் குறித்த பெண்ணைப் பின்தொடர்ந்து சென்று அப் பெண்ணின் வீட்டுக்குள் சென்றுள்ளார்.

அங்கு அப் பெண்ணை கட்டி வைத்து பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியுள்ளதுடன் அதனை தனது தொலைபேசியால் வீடியோ எடுத்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த வருடம் நவம்பர் 23ஆம் திகதி இடம்பெற்றுள்ளதாகவும் குறித்த இளைஞன் இதன் பின்னர் 'பல தடவைகள் அப் பெண்ணை அச்சுறுத்தி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியதாகத் தெரியவருகின்றது.

குறித்த பெண் வவுனியாவைச் சேர்ந்தவர் என்றும்1999 ஆம் ஆண்டு கனடா வந்து நிரந்தரமாக குடியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## கிழக்கில்....

பட்டிருக்கின்றது. இதன் பின்னர்தான் அதுவரை இரகசியமாக பாதுகாக்கப்பட்ட இந்த தவல்கள் ஊடகங்களுக்கு கசிந்துள்ளன.

**அந்த தகவல்களின் படி -**

இந்தியாவில் தங்கியிருந்த சம்பந்தனுக்கு இங்குள்ள நிலைமைகள் தொடர்பில் தொடர்ச்சியாகத் தகவல்களை வழங்கியபடி இருந்த சுமந்திரன், முஸ்லிம் காங்கிரசை அரசாங்கத்திலிருந்து கழற்றி எடுப்பதில் எதிர்நோக்கப்படும் சிக்கல்களையும் விளக்கியபடி இருந்தார். அந்த விடயங்களை அவர் இங்கு சந்திரிகா, ரணில் மற்றும் மங்கள சமரவீர ஆகியோருடனும் பகிர்ந்தபடியும் இருந்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியிலிருந்து எப்படியாவது முஸ்லிம் காங்கிரசைக் கழற்றி எடுத்து மைத்திரிபாலவின் எதிரணியில் இணைத்துவிட வேண்டும் என விரும்பிய இந்தியத் தரப்பு, அதற்கான காய்களைச் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஊடாக நகர்த்தியபடி இருந்தது.

இலங்கை வந்திருந்த இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால், சம்பந்தனைச் சந்தித்துப் பேசிய போது, மைத்திரிபாலவின் எதிரணியில் முஸ்லிம் காங்கிரசை எப்படியாவது இணைப்பதற்கான பணிகளை முன்னெடுக்குமாறு அவரிடம் வலியுறுத்தியிருந்தார்.

முஸ்லிம் காங்கிரசை வீழ்த்துவதற்கான உபாயமாக, முஸ்லிம்களின் கோரிக்கையான 'கரையோர மாவட்ட' விடயத்தைக் கையாளலாம் என இந்தியத் தரப்பினருக்குக் கூறிய சம்பந்தன், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் கல்முனை உள்ளிட்ட பிரதேசங்களைத் தனியாகப் பிரித்து எடுத்து ஒரு தனித்த முஸ்லிம் மாவட்டத்தை உருவாக்குவதே இந்த 'கரையோர மாவட்டம்' திட்டம் என்பதை அவர்களுக்கு விளக்கினார்.

குறித்த கரையோர மாவட்டம்' விடயத்தை உறுதிப்படுத்தி மைத்திரிபால தரப்பிடமிருந்து ஒரு வாக்குறுதியை எடுத்து முஸ்லிம் காங்கிரசுக்கு வழங்க முடியுமானால், முஸ்லிம் காங்கிரசை ராஜபக்ஷ அரசாங்கத்திலிருந்து கழற்றி எடுப்பதைத் தன்னால் சாத்தியமாக்க முடியும் என சம்பந்தன் இந்தியத் தரப்பினருக்கும் மைத்திரிபால தரப்பினருக்கும் உத்தரவாதம் வழங்கினார்.

இதன் பின்னராக நிகழ்ந்த தொடர்ச்சியான உரையாடல்களின் முடிவில், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கெனத் தனியான ஒரு 'கரையோர மாவட்டம்' உருவாக்கித்தரப்படும் என்ற உறுதிமொழியை சந்திரிகா தரப்பிடமிருந்து சம்பந்தன் பெற்றார்.

அதனைத் தொடர்ந்து, ரவூப் ஹக்கீமுடன் இந்தியாவில் இருந்தபடியே சம்பந்தன் பேசினார். உங்களுக்கான கரையோர மாவட்டத்தை உருவாக்கித் தருவது எனது பொறுப்பு. நான் அதனைச் சாத்தியமாக்குவேன். சந்திரிகாவிடம் இது தொடர்பாகப் பேசிவிட்டேன். ரணில் மற்றும் மங்கள ஆகியோருடனும் இது தொடர்பாகப் பேசி விட்டேன். முஸ்லிம் மாவட்டம் உருவாக்குவதில் அவர்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அவர்கள் எனக்கு வாக்குறுதி தந்துள்ளார்கள். என்னை நம்பி நீங்கள் ராஜபக்ஷ அரசாங்கத்திலிருந்து விலகி வாருங்கள். எல்லாவற்றையும் நான் பார்த்துக்கொள்ளுவேன், என்று ஹக்கீமுக்கு எடுத்துக் கூறினார்.

அப்போதும் தயங்கிய ஹக்கீம், 'இது தொடர்பான எழுத்து மூல வாக்குறுதி எதனையும் அவர்களிடமிருந்து பெற்றுத் தர முடியுமா?' என்று சம்பந்தனிடம் கேட்டிருக்கின்றார். அதற்கு மறுத்த சம்பந்தன், எழுத்து மூல ஆவணங்கள் நாளை வெளியே கசிந்தால் அது எல்லோருக்குமே சிக்கல்களை உருவாக்கும். அதனால், அதனை வற்புறுத்தாதீர்கள். நாங்களும் தமிழர் விடயங்கள் சம்பந்தமாக எவ்வித விடயங்களையும் எழுதிப் பெறவில்லை. எமக்குச் சாதகமான கருமங்களை நாம் அவர்களிடமிருந்து பெற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. நீங்கள் என்னை நம்பி வாருங்கள் என்று கூறியுள்ளார்.


அப்போது, ஹக்கீம், 'கிழக்கு மாகாணத் தமிழர்கள் அங்கு ஒரு தனியான முஸ்லிம் மாவட்டம் உருவாகுவதை எதிர்ப்பார்களே. அவர்களை எப்படிச் சமாளிப்பீர்கள்?' என்று கேட்டிருக்கின்றார்.

அதற்குப் பதிலளித்த சம்பந்தன், 'அங்கிருக்கும் எமது கட்சி உறுப்பினர்கள் எல்லோருமே அனுபவம் குறைந்தவர்கள். அரசியலுக்கும் புதியவர்கள். அவர்கள் வயதிலும் மிகக் குறைந்தவர்கள். இந்த விதமான விடயங்களின் ஆழமும் அவர்களுக்கு விளங்காது. அத்தோடு, எனது கருத்தை அங்கு யாரும் மறுதலிக்க மாட்டார்கள். நான் எடுக்கும் முடிவுகளை அவர்களை ஏற்றுக்கொள்ள வைப்பது எப்படி என்று எனக்குத் தெரியும். எனவே, எமது கட்சியின் உறுப்பினர்கள் பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை' என்று ஹக்கீமுக்கு விளக்கியிருக்கிறார்.

சம்பந்தனுக்கும் ஹக்கீமுக்கும் இடையில் நடந்த இந்த இறுதியும் உறுதியுமான உரையாடலைத் தொடர்ந்தே, ராஜபக்ஷ அரசாங்கத்திலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறும் இறுதி முடிவை ராவூப் ஹக்கீம் எடுத்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், இதிலுள்ள மிகப் பெரிய ஆபத்தை பொருட்படுத்தாமல் மைத்திரியை வெல்ல வைக்க வேண்டும் என்னும் ஒரேயொரு நோக்கத்திற்காக ஹக்கீமின் கரையோர மாவட்டக் கோரிக்கைக்கு சம்பந்தன் இணங்கியிருப்பதாக தமிழ் தேசியக்கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் ஏனைய கட்சித் தலைவர்கள் விசனம் வெளியிட்டிருக்கின்றனர்.

# பத்திரிகை அலுவலகம் மீது தாக்குதல் பாரிஸில் 12பேர் உயிரிழப்பு



## ஜனாதிபதி கண்டனம்

பிரான்ஸின் பாரிஸ் நகரில் உள்ள சார்லி ஹெப்டோ பத்திரிகை அலுவலகத்தின்மீது நேற்று தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஏ.கே. 47 மற்றும் ிராக்கெட் குண்டு வீச்சு ஆயுதங்களை கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் 12பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

இதுதொடர்பாக சம்பவத்தை நேரில் பார்த்தவர் கூறுகையில், இரண்டு நபர்கள் அரைமணி நேரத்திற்கு முன்னதாக கட்டடத்திற்குள் நுழைந்தனர். பின்னர் அங்கு துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. பின்னர் அவர்கள் கட்டடத்தை விட்டு ஓடினர். இருவரும் முகமூடி அணிந்திருந்தனர் என்று தெரிவித்துள்ளார். இச்சம்பவத்தை அடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, பாரிஸில் நேற்று இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலை கண்டிப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தனது இரங்கலை தெரிவித்துக்கொள்வதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிததுள்ளார்.

உலகத்தில் தாக்குதல்எங்கு இடம்பெற்றாலும் அனைத்து வகையான பயங்கரவாதத்தையும் எதிர்த்து போராட உலகம் ஒன்றாக சேரவேண்டும் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தனது மெதமுன இல்லத்தில் இருந்து பேசும்போது தெரிவித்ததாக ஜனாதிபதியின் சர்வதேச ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# 420 தற்காலிக வீதித்தடைகள்

இன்று நடக்கும் ஜனாதிபதித் தேர்தலின் பாதுகாப்புக்காக நாடெங்கும் நேற்று இரவு முதல் மொத்தமாக 420 தற்காலிகப் பொலிஸ் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

வாக்களிப்பு ஆரம்பித்தது தொடக்கம் வாக்குகள் எண்ணி முடிவுகள் அறிவிக்கப்படும் வரை இந்த 420 வீதித் தடைகளும் இருக்கும் எனவும் இவற்றுக்கு மேலதிகமாக அவ்வப்போது தேவையான இடங்களில் உடனடி வீதித் தடைகளும் முன்னறிவிப்பு எதுவுமின்றி அமைக்கப்படும் எனவும் அஜித் ரோஹண கூறினார். தேர்தல் விதிகளை மீறியமை தொடர்பில் 340 முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களுக்குக் கிடைத்தன எனவும், இவை தொடர்பில் 150 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வாக்களிப்பு நிலைய குளவிக்கூடு அகற்றல்

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று நடைபெறவுள்ள நிலையில், வாக்களிப்பு நிலையமாகச் செயற்படவிருக்கும் வவுனியா பாடசாலை ஒன்றில் நேற்றுக் காலை குளவிக் கூடு ஒன்று அகற்றப்பட்டது.

வாக்குப் பெட்டிகள் செல்வதற்கு சில நிமிடங்களே இருந்த நிலையில் குழவிக் கூடு அவதானிக்கப்பட்டு அது அகற்றப்பட்டது.

## புலிகள்...

மக்கள் இரண்டு வேட்பாளர்களையும் தோற்கடிக்க வேண்டும். 2010 ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளித்ததன் மூலம் தமிழ் மக்களை காட்டிக் கொடுத்து விட்டது எனவும் அதில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்கு எதிராக பிரச்சினை எதுவுமில்லை, ஆனால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் இரகசிய ஒப்பந்தங்கள் சந்தேகமளிக்கிறது என்று அவர் கூறினார். கடைசி நிமிடத்தில் அவர்கள் மற்றொரு ராஜபக்ஷவைப் போன்ற மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கும்படி தமிழ் மக்களைத் தூண்டலாம். 'தெற்கில் மற்றொரு ராஜபக்ஷவை அதிகாரத்திற்கு கொண்டு வருவது தமிழ் மக்களுக்கு எந்தப் பயனையும் தரப் போவதில்லை. இது அரசாங்கத்தை மாற்றும் தேர்தல் அல்ல, ஆனால் தனிப்பட்ட தலைவரை மாற்றும் தேர்தல். அதிகாரப் பேராசையினால் தெற்கிலுள்ள தலைவர்கள் எதையும் செய்யத் துணிவார்கள். அதற்கான இறக்கைகளாக தங்களைப் பயன்படுத்திக் கொள்ள தமிழ் மக்கள் அனுமதி வழங்கக்கூடாது' என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

17 வருடங்களுக்கு முன்னர் சந்திரிகா சமாதானத்தை கொண்டு வருவதாக வாக்குறுதி வழங்கி, தமிழ் வாக்காளரின் நன்றியுள்ள வாக்குகளின் உதவியுடன் 62 வீதமான வாக்குகளைப் பெற்றார். ஆனால் அவர் யுத்தத்தை தொடர்ந்தார். சமாதானத்துக்கான வாக்குறுதியை வழங்கி, 2001-ல் ரணில் விக்கிரமசிங்கா அதிகாரத்துக்கு வந்தார், ஆனால் அவர் சர்வதேச சக்திகளின் உதவியுடன் தமிழ் மக்களுக்கு எதிராக ஒரு பாதுகாப்பு வலையை விரித்தார். கருணா அம்மானின் பிளவையும் அவர் உருவாக்கினார். ராஜபக்ஷவின் இன அழிப்பு வரலாற்றை நாங்கள் நன்கறிவோம். ஆனால் மைத்திரிபால ஒரு கூட்டாட்சி தீர்வுக்குக் கூடத் தயாராக இல்லை. குறைந்த பட்சம் போர்க் குற்றவாளிகளைத் தண்டிக்கக்கூட அவர் தயாரில்லை. இனவாத ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி. என்பன ீமத்திரிபாலவின் பின் துணை நிற்கின்றன என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திங்களன்று த.தே.கூ. ரணில், மற்றும் சந்திரிகா ஆகியோரிடையே ஒரு இரகசிய கலந்துரையாடல் இடம்பெற்றதாக தமிழ் நெற் வெளிப்படுத்தியுள்ளது. த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சொல்லியிருப்பது இந்தக் கலந்துரையாடலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டதாக. மைத்திரிபால தமிழ் மக்களுக்கு ஏதாவது வாக்குறுதி வழங்கினால் சிங்களவர்கள் அவருக்கு எதிராக திரும்பலாம் என்பதனையும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

தமிழ் நெற் அறிவித்திருப்பது, சுமந்திரன் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்களைத்தான் சந்தித்ததாகவும், அவர்களில் 98 சதவிகிதமானவர்கள் மைத்திரிபாலவை ஆதரிப்பதாகவும் மற்றும் 2 விகிதமானவர்களே அவருக்கு எதிராக உள்ளதாகவும் சொல்லியிருக்கிறார் என்று. இந்தக் கலந்துரையாடலை விமர்சித்திருப்பதுடன், தென்னிலங்கையில் உள்ள இரண்டு தலைவர்களுக்கும் மற்றும் ரி.என்.ஏக்கும் தமிழ் மக்கள் ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்று தமிழ் நெற் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# சிறுவர், முதியோர் பேணக ஒளிவிழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ராஜாராணிசேவை இல்ல சிறுவர், முதியோர் பேணக ஒளிவிழா மிகச்சிறப்பாக பருத்தித்துறை முதியோர் சங்கத்தலைவர் எம்.வின்சென்ற் டீ போல் தலைமையில் நடைபெற்றது.

எஸ். தேவராஜா வரவேற்புரை நிகழ்த்தினார்.

பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு ஜே.ஜே.மௌலீஸ் அடிகளார் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். நத்தார் பப்பா 50 முதியோர்களுக்கு அன்பளிப்புக்களை வழங்கினார்.

ராஜாராணி இல்ல சிறுவர், முதியோர் பேணக இயக்குநர் எஸ்.இருதயராஜா ஒளிவிழாச்சிறப்பு பற்றி உரையாற்றினார் அருட்திரு. எஸ்.செபஜீவன் அடிகளார், மறை ஆசிரியர் எஸ்.ஜெயசீலன் உட்பட இன்னும் பலர் இவ் ஒளிவிழாவிலே கலந்து கொண்டனர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (01)

# பேருந்து தரிப்பிடம் திறப்பு




மீசாலையின் புகழ்பூத்தஅதிபரும் கலைஞரு மான அ.பொ. செல்லையா ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் மீசாலை புத்தூர் சந்தியில் அமைக்கப்பட்ட பயணிகள் நிழற்குடை பஸ் தரிப்பிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. அவரது குடும்ப உறுப்பினர்களான கி.சுவேதா, நிவேதா ஆகியோர் இணைந்து இந்த பேருந்து தரிப்பிடத்தை திறந்துவைத்தனர்.

நிகழ்வில் யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொ.ஜக்சீல், மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி அதிபர் அம்பலவாணர், சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி கு.சிவானந்தம், அன்னாரது குடும்ப உறுப்பினர்கள் உட்படபலர் கலந்து கொண்டனர்.

## இன்று...

யங்களிலும் வாக்கு எண்ணும் நிலையங்களிலும் சி.சி.ரி.வி கம ராக்களின் உபயோகம் இல்லை. வாக்களிப்பு நிலையத்தில் சி.சி.ரி.வி கமராக்கள் பொருத்தப்படுவதால் அடையாளமிடப்படும் சின்னத்தை பிறர் அறிந்து கொள்ள முடியுமென பரவிவரும் செய்தி வெறும் வதந்தி ஆகும். வாக்காளர்கள் அது குறித்து அச்சம் கொளளத் தேவையில்லை. மேலும் வாக்காளர்கள் வாக்களிப்பினை முடித்துக் கொண்டு இயலுமானவரை விரைவில் வாக்களிப்பு நிலையத்தை விட்டு வெளியேறுவது தேர்தல் பணிகளை கிரமமாக பின்பற்றுவதற்கு இலகுவாகவிருக்கும்.

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கும் வாக்காளர்களின் பாதுகாப்பையும் நாட்டின் அமைதியையும் உறுதிப்படுத்தலை தேர்தல் திணைக்களமும் பொலிஸ் திணைக்களமும் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. தேர்தல் முறைகேடுகள் இடம்பெறாத வகையில் வெற்று வாக்குப் பெட்டிகளை வாக்களிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்வது முதல் தேர்தல் பெறுபேறுகளை வெளியிடும் வரையிலான அனைத்துப் பணிகளும் ஒரே தொடர்ச்சியாக கிரமமானதும் நுட்பமானதுமான முறையில் செயற்படுத்தப்படுவதனால் மக்கள் பரவலாக பேசுவதுபோல் வாக்குப் பெட்டிகளை மாற்றுதல், கள்ள வாக்களித்தல் என்பன இடம்பெறுவதற்கு எவ்வித சந்தர்ப்பமும் இல்லை.

ஏதேனும் சந்தர்ப்பத்தில் வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையத்திற்கு செல்வதற்கு தடைகள் அல்லது அச்சுறுத்தல்கள் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் எமக்கு முறைப்பாடுகள் கிடைக்குமாயின் குறித்த நிலையத்தின் வாக்கெடுப்பு இரத்துச் செய்யப்பட்டு வேறு ஒரு தினத்தில் வாக்கெடுப்பு நடத்த ஏற்பாடு செய்யப்படும். இதேவேளை எக்காரணம் கொண்டும் தேர்தல் பணிகளை முன்னெடுக்கும் அரசாங்க அதிகாரிகள் எந்தவொரு வேட்பாளருக்கோ அல்லது அரசியல் கட்சிக்கோ பயந்தோ பக்கச்சார்பாகவோ நடந்து கொள்ள மாட்டார்களென்பதனை பொறுப்புணர்வுடன் கூறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரினதும் ஐந்து பிரதிநிதிகள் வாக்கு எண்ணும் நிலையங்களுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பிற்பகல் சுமார் 4 மணிக்குப் பின்னரே வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துவரப்படவுள்ள போதிலும் சுமார் மூன்று மணி முதல் வேட்பாளருக்கு ஒரு பிரதிநிதி வீதம் வாக்கு எண்ணும் நிலையங்களில் இருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்க உத்தியோகத்தர்கள் எண்ணும் வாக்குகளில் காலதாமதம் அல்லது சந்தேகம் இருப்பின் அவற்றை திரும்ப எண்ணுமாறு வேட்பாளர்களின் பிரதிநிதிகள் கோரமுடியும். அத்துடன் கணக்கிடப்பட்ட பெறுபேறுகளின் பிரதிகள் அனைத்தும் பிரதிநிதிகளுக்கும் விநியோகிக்கப்படும். அவர்கள் கையெழுத்திட்ட பிரதிகள் என்னை வந்தடைந்த பின்னரே இறுதிப் பெறுபேறுகளை நான் வெளியிடுவதால் 'கம்யூட்டர் ஜில்மல்' ஏற்படுவதற்கு இடமிருக்காதெனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் யாவும் முடிவுற்ற நிலையில் எவ்விதமான ஆர்ப்பாட்டம், எதிர்ப்பு ஊர்வலங்கள் நடத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் வேட்பாளர்களிடமும் கட்சி ஆதரவாளர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தமிழ்த்தேசியக்...

கூட்டமைப்பினர் தங்களது இயலாத் தன்மையை மறைத்துக் கொள்வதற்காக இவ்வாறான வக்கிரமான செய்திகளைப் பரப்பி வருகின்றனர்.

எமது அழைப்பின் பேரில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட யாழ்.தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கு நாம் எதிர்பார்த்ததை விடவும் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருப்பது உண்மை என்பதையே இவ்வாறான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் செயற்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

இதை எமது மக்கள் புரிந்து கொள்வார்கள் என நாம் நம்புகின்றோம்.

ஈ.பி.டி.பி கட்சியும் அதன் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைப் போல் எமது மக்களது நலனில் அக்கறை இல்லாதவர்களை ஆதரிப்பதில்லை என்பதை எமது மக்கள் அறிவர்.

எனவே இத்தேர்தலில் எமது தலைவரின் தலைமையில் நாம் ஏற்கனவே எடுத்த முடிவில் எவ்விதமான மாற்றங்களும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கின்றோம். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஜனவரி 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.